2013, January 16 - 30

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013



# ரிசானாவுக்கு நேர்ந்த கதிக்கு உண்மையில் யார் பொறுப்பு?

| | | | | | |
|---|---|---|---|---|---|
| INDIA................IN₹ | 50.00 | CANADA........CAN$ | 10.00 | USA...........US$ | 10.00 |
| SRI LANKA....SLR | 100.00 | AUSTRALIA...AUS$ | 10.00 | UK.............GB£ | 5.00 |
| SINGAPORE...SG$ | 14.00 | SWISS..............CHF | 10.00 | EUROPE..EU€ | 5.00 |


Register Free &
Start Matching..!
THIRUMANAM.LK™
இருமனம் சேர்ந்தால் திருமணம்
www.thirumanam.lk



தேசியவாதி என்பவன்
தனது தரப்பினால்
இழைக்கப்படுகின்ற
அட்டூழியங்களை
ஏற்றுக்கொள்வதில்லை
என்பது மாத்திரமல்ல,
அந்த
அட்டூழியங்களைப்
பற்றிக் கேள்விப்
படாமல் இருப்பதற்கும்
தனிச்சிறப்புமிக்க
ஆற்றலைக்
கொண்டவனாக
இருக்கிறான்.

ஜோர்ஜ் ஓர்வெல்

# உள்ளடக்கம்


ரிசானாவுக்கு நேர்ந்த கதிக்கு
உண்மையில் யார் பொறுப்பு? 09

சட்டத்தின் ஆட்சியை
மீள நிலைநாட்ட வழி என்ன 14
குமார் டேவிட்

நீதிதேவதையின் மயக்கம் 18
என்.சத்தியமூர்த்தி

ஜனநாயக மயமாக்கல்
நல்லிணக்கத்திற்கான
முன்நிபந்தனை 21
கலாநிதி தீபிகா உடுகம

இனவாதத்தை நியாயப்படுத்தும்
போக்குகள் 30
குல்தீப் நாயர்

டில்லி டயறி 32
எம்.பி.வித்தியாதரன்

தொடர்ந்து ஒதுக்கலுக்கு
உள்ளாகும் மலையக மக்கள் 39
பெ.முத்துலிங்கம்

சென்னை மெயில் 48
எம்.காசிநாதன்


விக்டோரியாவின் இரகசியங்கள் 53
சாந்தி சச்சிதானந்தம்


அறிவியல் களரி 56
டாக்டர் எம்.கே.முருகானந்தன்


விளையாட்டு உலகை
ஆட்டிப்படைக்கும் ஊக்கமருந்து 60

கடைசி பக்கம் 64
பேராசிரியர் செ.யோகராசா






*Samakalam focuses on issues that affect the lives of people of*

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

சமகாலம்

2013, ஜனவரி 16-30


32


09


14


18


48


60


64

*of Sri Lanka, the neighbourhood and the world*

ஆசிரியரிடமிருந்து...

# இருண்ட அத்தியாயங்கள்

மேல்நிலை நீதிமன்றங்களின் தீர்ப்புகள் சகலதையும் அலட்சியம் செய்து பாராளுமன்றம் தனக்கு எதிரான குற்றப்பிரேரணையை மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றியதையடுத்து ஜனாதிபதியினால் பதவி நீக்கம் செய்யப்பட்ட பிறகு திருமதி ஷிராணி பண்டாரநாயக்க இன்னமும் கூட இலங்கையின் சட்டபூர்வமான பிரதம நீதியரசர் தானே என்று கூறிக் கொண்டு உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இருந்து வெளியேறி சொந்த வீட்டுக்குப் போய்விட்டார்.

புதிய பிரதம நீதியரசராக முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் பதவியேற்று கடமைகளை ஆரம்பித்துவிட்டார். அவர் உச்சநீதிமன்றக் கட்டிடத் தொகுதிக்கு பிரதம நீதியரசர் என்ற வகையில் வருகை தந்த முதல் நாள் திருமதி பண்டார நாயக்க அந்த வளாகத்திற்குள் வருவதற்கான வாய்ப்புகள் சகலதையும் அரசாங்க இயந்திரம் ''கச்சிதமாக'' அடைத்திருந்தது.

திருமதி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப்பிரேரணையை அரசாங்க எம்.பி.க்கள் பாராளுமன்ற சபாநாயகரிடம் கையளித்த தினம் முதல் புதிய பிரதம நீதியரசர் பதவியேற்ற தருணம் வரை மூன்று மாதங்களாக சட்டத்தின் ஆட்சியும் நீதித்துறையின் சுதந்திரமும் நீதி நிருவாகத்தின் மீதான மதிப்பும் படுமோசமான சேதத்துக்குள்ளாகியதைக் காணக்கூடியதாக இருந்தது. சட்டங்களை உருவாக்குபவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களினாலேயே அதே சட்டங்களின் பாதுகாவலனாக விளங்கும் நீதித்துறை முன்னென்றுமில்லாத அளவுக்கு அவமதிக்கப்பட்டது. நீதிமன்றத் தீர்ப்புகளின் செல்லுபடியாகும் தன்மை குறித்து நாட்டின் சாதாரண பிரஜைகளே கேள்வியெழுப்புகின்ற பாரதூரமான சூழ்நிலை தோன்றியிருக்கிறது.


தூய்மையான விவகாரங்கள் என்று முன்னர் கருதப்பட்ட நீதிபதிகளின் நடத்தைகள் சந்தைகளில் பேசுபொருளாக்கப்பட்டிருக்கின்றன. நீதித்துறை வீரியமகற்றப்பட்டு முதுகெலும்பும் உடைக்கப்பட்டுக் கிடக்கிறது. நீதி நியாயம் கோரிச் செல்வதற்கு மக்களுக்கு இறுதிப்புகலிடமாக இருந்த நீதித்துறையே அதற்கு நீதிகிடைக்காமல் பேதலித்து நிற்பதைக் காண்கிறோம். இலங்கையின் வரலாற்றில் எழுதப்பட்டிருக்கக்கூடிய இருண்ட அத்தியாயங்களில் இது ஒன்றாகும். இத்தகைய இருண்ட அத்தியாயங்களில் பலவும் அண்மைய தசாப்தங்களிலேயே எழுதப்பட்டிருந்தன. தொடர்ந்தும் இருண்ட அத்தியாயங்கள் எழுதப்படும் என்பதற்கான சூழ்நிலைகள் இருக்கின்றன என்பது நன்கு வெளிச்சமாகத் தெரிகிறது.

# கடிதங்கள்














## சிங்கள மக்கள் உணர வேண்டியவை



குசல் பெரேரா எழுதியுள்ள "அரசியலமைப்பு ரீதியான எதேச்சாதிகார ஆட்சியை நோக்கி.." என்ற கட்டுரையில் சூடு பறந்தது. சகலரையும் ஒரு பிடிபிடித்துள்ளார் குசல் பெரேரா. தர்க்க ரீதியான அவரின் கருத்துகள் அருமையாகவுள்ளன.

தமிழர்களுடைய உரிமைகள் மட்டுமல்ல தங்களுடைய அரசியல் ஜனநாயக உரிமைகள் கூட நிராகரிக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருப்பதை சிங்களவர்கள் உணரத் தவறுகின்றார்கள் என்ற அவரின் கருத்து ஒன்றே போதும் இன்றைய அரசியல் நிலையை விளங்கிக் கொள்வதற்கு சிங்களவர்களை திருத்த குசல்பெரேரா போன்ற பலர் தேவைப் படுகின்றார்கள்.

**பி.தீபன், பருத்தித்துறை.**

## எம்.ஜி.ஆர்



சமகாலத்தின் 2013 ஜனவரி 1-15 இதழில் வெளி வந்த "எம்.ஜி.ஆர் மறைந்து 25 வருடங்கள்; தப்பிப் பிழைத்து 45 வருடங்கள்" என்ற கட்டுரையை வாசித்தேன்.

எம்.ஜி.ஆர் மரணிக்கும் போது எனக்கு வயது 5. இருந்த போதிலும் பிற்காலத்தில் அவர் நடித்த படங்களையும், பாடல்களையும் பார்த்து, கேட்டு மெய் சிலிர்த்த என்னைப்போன்ற இளைஞர்களுக்கு அவருடைய சினிமா, அரசியல் சாதனங்கள் பற்றி அவ்வளவாக தெரிந்து கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றே சொல்ல வேண்டும்.

எம்.ஜி.ஆர் 1967 ஆம் ஆண்டு நடிகவேள் எம்.ஆர்.ராதாவினால் சுடப்பட்டு "நான் செத்துப் பிழைத்தவன்டா, யமனைப் பார்த்து சிரித்தவன்டா" என்று மீண்டும் திரையுலகைக் கலக்கியவர் என்பதையும், எம்.ஜி.ஆர் சுடப்பட்ட சம்பவத்தையும், அதன்பின் நடந்த வழக்கின் விபரத்தையும் மிக அருமையாகவும், சுவாரஷ்யம் குறையாமலும், அதாவது ஒரு விறுவிறுப்பான சினிமாப்படத்தைப் பார்த்தது போன்ற திருப்தியைத் தந்த சமகாலம் ஆசிரியர் குழாமுக்கு எனது பாராட்டுகள்.

இவ்வாறான கட்டுரைகள் எதிர்வரும் இதழிலும் வெளிவரும் என்று நம்புகிறேன்.

**நவம் ஜிரோஜிகா,**
**நெல்லியடி, கரவெட்டி**

## மாணவர்களுக்கு வரப்பிரசாதம்

சமகாலத்தில் வெளியாகின்ற கட்டுரைகளின் மூலமாகப் பெறக்கூடியதாக இருக்கின்ற சகல தகவல்களும் பெறுமதியுடையவையாக இருக்கின்றன. அரசியல் ஆய்வுகள் கனதியானவையாகவும் எம்மைப் போன்ற மாணவர்கள் படித்துப் பயனடையக் கூடியனவாகவும் அமைந்திருக்கின்றன. அரசறிவியல் கற்கின்ற மாணவர்களுக்கு சமகாலம் உண்மையில் ஒரு வரப்பிரசாதம் என்று சொல்லலாம். சமகாலத்தின் பணிகள் மேலும் மிளிர எனது வாழ்த்துக்கள்.

**பு.டொரினா, தரம் – 12**
**மொனராகலை விபுலானந்தா தமிழ் மகாவித்தியாலயம்**

## திரைவிமர்சனம்

புதிய தகவல்களையும், அருமையான கட்டுரைகளையும், தமிழை அழகான, இலகுவான மொழிநடையில் தரும் சமகாலத்திற்கு எனது வணக்கம்.

"சமகாலம்" தனக்கென்று ஒரு தனியிடத்தைப் பிடித்துவருகிறது என்பதற்கு உதாரணம் அது

## மதியுரை கூறும் சஞ்சிகை

ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கை பற்றிய மதியுரை கூறும் தமிழ்ச் சஞ்சிகையாக "சமகாலம்" மாறும் நாட்கள் வெகு தொலைவில் இல்லை. வாழ்த்துக்கள்.

**முகநூல் ஊடாக**
**சௌந்தர் முருகேசு, லண்டன்.**

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736


ஏனைய பத்திரிகைகள், சஞ்சிகைகளை விட பல புதிய விடயங்களைத் தருவதேயாகும். அதில் ஒன்றுதான் திரை ''விமர்சனம்'' என்ற பகுதி.

இன்று எமது நாட்டில் எந்தவொரு பத்திரிகையை, சஞ்சிகையைப் பார்த்தாலும், சினிமாச் செய்திகள் என்பது ஒரு பத்திரிகையில் வாசித்தால், அதே விடயத்தையே மற்றையவற்றிலும் வாசிக்கக் கூடியதாக இருக்கிறது. ஆனால் வெளிவரும் படங்களைப் பற்றிய விமர்சனம் எந்தவொரு பத்திரிகையிலும் ஆரோக்கியமான கண்ணோட்டத்துடன் பிரசுரிக்கப்படுவதில்லை. இந்தக் குறையை சமகாலம் சிறப்பாக நிறைவேற்றிவருகிறது.

எமது நாட்டுப் பத்திரிகைகளில் காணப்படும் இவ்வாறான குறைகளைக் கண்டறிந்து சமகாலம் அவற்றை போக்க வேண்டும்.

**சகாயநாயகி, கொட்டாஞ்சேனை**

## வேறுபட்ட சஞ்சிகை



2013 ஜனவரி 1-15 சமகாலம் அட்டைப்படத்தில் இருந்த அத்தனை விடயங்களும் அசத்தல். அம்பலமாகும் மாயைகள் என்ற ஆசிரியர் தலையங்கம் நீதியரசர் திருமதி ஷிராணி பண்டார நாயக்காவுக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடர்பாக அரசின் அணுகுமுறைகள், நிகழ்வுப் போக்குகள் ஆட்சி நிறுவனக் கட்டமைப்பைச் சுற்றி வர கட்டியமைக்கப்படுகின்ற மாயைகளை அம்பலப்படுத்துகின்றன என முன்வைப்பதில் எந்த வித பொய்யுமில்லை. அதிகாரத்தில் இருப்பவர்கள் தமக்கு ஏற்ற முறையில் சட்டங்களை மாற்றிக் கொள்கிறார்கள்.

முதல் பக்கத்தில் மகாத்மா காந்தியின் எக்காலத்துக்கும் பொருந்தும் ஆழம்மிக்க கருத்தை பிரசுரித்திருப்பது சிறப்பு. தொடரும் இதழ்களிலும் இவ்வாறான அருமையான கருத்துகள் இடம்பெற்றால் மேலும் சிறப்பாக இருக்கும்.

கடைசிப்பக்க கற்பும் கற்பிதங்களும் என்ற டாக்டர் எஸ்.சிவதாஸின் கட்டுரை இராணுவத்திற்கு சேர்க்கப்பட்ட தமிழ்ப் பெண்கள் தொடர்பான தெளிவான கருத்தை முன்வைத்து நிற்கின்றது. மொத்தத்தில் சமகாலம், சமகாலத்தில் வெளிவரும் சஞ்சிகைகளில் இருந்து மாறுபட்டு தன்னைத் தரமுயர்த்தி நிற்கின்றது.

**எஸ்.கார்த்திகா, மோதரை, கொழும்பு**

## வேண்டுகோள்

2012 டிசம்பர் 16-30 இதழில் பிரபல திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் மறைந்த சித்தார் மேதை ரவி சங்கரைப் பற்றி எழுதிய கட்டுரை அருமையாக இருந்தது. அதற்குள் மேதையும் அவரின் பெண்களும் என்ற தலைப்பிலான குமாரின் ஆக்கத்தை இடைசெருகலாக தந்ததை மேலும் மெருகூட்டுவதாக இருந்தது. சிவகுமாரன் போன்றவர்கள் கூடுதலாக ஆங்கிலத்தில் எழுதுவதில் கவனம் செலுத்துகிறார்கள். அவர்களின் ஆக்கங்கள் இடைக்கிடையேதான் சமகாலத்தில் பிரசுரமாவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. அவர் அடிக்கடி சமகாலத்திற்கு பங்களிப்பைச் செய்வதன் மூலம் தமிழ் வாசகர்களுக்கு நல்ல ஆக்கங்களை வாசிக்கத் தரவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறேன்.

**எஸ்.சசிதரன், பண்டாரவளை.**




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 14

**2013, ஜனவரி 16 - 30**


A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



மனிதர்கள் கொடுமையானவர்கள்.
மனிதன் இரக்கமானவன்

- ரவீந்திரநாத் தாகூர்

வாசகர் கடிதங்களை அனுப்ப
வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

# வாக்குமூலம்....

கிறிமினல்களையும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள், வியாபாரிகளையும் அதிகாரமுடையவர்களாக்குகின்றவர்களைத் தலைவர்களாக இன்று நாடு கொண்டிருக்கிறது. நாட்டின் இன்றைய நிலை என்னைப் பெரிதும் வேதனைக்குள்ளாக்குகிறது. நாட்டை மீட்டெடுப்பதற்கு குறிப்பிடும்படியாக எந்த மருந்தும் என்னிடம் இல்லை.



முன்னாள் ஜனாதிபதி
திருமதி சந்திரிகா குமாரதுங்க

முன்னாள் நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவும் என்னைப்போன்றே இந்த அரசாங்கத்தினால் பழிவாங்கப்பட்டிருக்கிறார். இவ்வாறு பழிவாங்கப்பட்ட பலர் இருக்கிறார்கள். எமக்கு ஏற்பட்ட பாதிப்புகளே அவர்களுக்கும் ஏற்பட்டது. இலங்கை அரசியலில் தேவைப்படுகின்ற மாற்றத்தை நாமெல்லோரும் சேர்ந்து கொண்டுவர முடியும். மக்களுக்காக தன்னை அர்ப்பணிக்கப் போவதாக ஷிராணி கூறியிருக்கிறார். அப்படியென்றால் அவர் அரசியலில் இறங்குவதற்கு எண்ணம் கொண்டிருக்கிறார்.



முன்னாள் இராணுவத்
தளபதி சரத் பொன்சேகா

பிரதம நீதியரசர் பதவிநீக்கப்பட்ட விவகாரத்தில் ஊழலோ அல்லது நீதித்துறையின் சுதந்திரத்தைப் பற்றிய எந்தவொரு விடயமுமோ இல்லை. தனது ஆள் ஒருவர் பிரதம நீதியரசராக இருக்க வேண்டுமென்று அரசாங்கம் விரும்பியது. அவ்வளவுதான், ஒரு அவுன்ஸ் சுயமரியாதை தானும் இருக்கிற எந்தவொருவருமே புதிய பிரதம நீதியரசராக நியமிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமாட்டார் என்ற எனது நிலைப்பாட்டில் நான் உறுதியாக நிற்கிறேன்.



சிரேஷ்ட சட்டத்தரணி
எஸ்.எல்.குணசேகர

வீழ்ச்சி கண்ட சர்வாதிகாரிகள் பின்பற்றிய அதே நடைமுறைகளையே இலங்கையின் இன்றைய ஆட்சியாளர்கள் கடைப்பிடிக்கிறார்கள். அந்தச் சர்வாதிகாரிகள் சர்வதேச விதிமுறைகள் சகலதையும் மீறினார்கள். ஹொஸ்னி முபாரக், சதாம் ஹூசெய்ன், கேணல் கடாபி போன்றவர்கள் ஆட்சி செய்த முறையிலேயே இலங்கை அரசாங்கம் நடந்துகொள்கிறது. சர்வதேச விதிமுறைகளை மீறிய அவர்கள், தங்களது நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கு தேசியவாத சுலோகங்களைக் கிளப்பினார்கள். இறுதியில் அவர்களது நாட்டு மக்களே தங்கள் ஆட்சியாளரை விரட்ட சர்வதேச தலையீட்டைக் கோரினார்கள்.



வண. தம்பர அமில தேரர்

ஜனவரி 11 ஆம் திகதி பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாக்கெடுப்பு பிரதம நீதியரசரை நீக்குவதற்கானதல்ல, அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஆராய்வதற்கு தெரிவுக்குழுவொன்றை நியமிப்பதற்கானதேயாகும். அதனால், பிரதம நீதியரசரை பதவியில் இருந்து நீக்கியமை சட்டவிரோதமானது. ஷிராணி பண்டாரநாயக்கவே இன்னமும் நாட்டின் பிரதம நீதியரசர்.



ஐக்கியதேசியக் கட்சியின்
பொதுச் செயலாளர்
திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி

புஞ்சி பவுல ரத்தரன் என்று 1980 களில் பிரசாரப்படுத்தப்பட்ட கோட்பாடு இலங்கைக்கு இனிமேலும் பொருத்தமானதல்ல. நாட்டின் முன்னேற்றத்துக்கு கடமையுணர்வும் விவேகமும் கொண்ட பல பிள்ளைகளை பெற்றோர் பெறவேண்டும். சிங்களவர்கள் மத்தியிலான பிறப்புவீதம் திருப்திகரமானதாக இல்லை.



சப்ரகமுவ மாகாண
முதலமைச்சர் மஹிபாலஹேரத்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படுவதற்கு பொருத்தமான வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவே என்று முதலில் கூறியவன் நான் தான். அப்போது சிலர், அவ்வாறு கருத்துத் தெரிவிக்கும்போது மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்று கூறினார்கள். நான் உண்மையைச் சொல்வதற்குப் பயப்படவில்லை. நான் சொன்னது சரியாகிப் போனதை இன்று முழுநாடுமே நிதர்சனமாகக் காண்கிறது. அதே போன்றே நான் இப்போது கூறுகிறேன். தற்போதைய பிரதமர் பதவியில் இருந்து ஓய்வுபெறும்போது, அந்த இடத்தை நிரப்புவதற்கு மிகமிகப் பொருத்தமானவர் பாராளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷவே.



போக்குவரத்து அமைச்சர் குமார.வெல்கம

செய்திச்சரம்

# பொதுநலவாய உச்சிமாநாட்டு அரங்கு மொரீசியஸுக்கு மாறுமா?

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை நிறைவேற்றம் தொடர்பில் மேற்கு நாடுகளினால் வெளிக்காட்டப்பட்டிருக்கும் அதிருப்தியையும் விசனத்தையும் அடுத்து, இவ்வருட இறுதியில் இலங்கையில் பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் உச்சிமாநாடு திட்டமிட்டபடி நடைபெறக்கூடிய வாய்ப்புகள் குறித்து பலத்த சந்தேகங்கள் எழுந்திருக்கின்றன.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கையின் பொறுப்புடைமையுடன் சம்பந்தப்பட்ட சர்ச்சைகளின் காரணமாக, ஏற்கெனவே இந்த உச்சி மாநாட்டை பகிஷ்கரிக்கப்போவதாக அச்சுறுத்திவரும் கனடா, பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையையடுத்து மீண்டும் அதன் இராஜதந்திரச் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.


பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்கள் மட்ட செயற்பாட்டுக் குழுவில் குற்றப்பிரேரணை விவகாரத்தைக் கிளப்புவதற்கு கனடா திட்டமிடுகிறது. இந்தச் செயற்பாட்டுக் குழுவின் அடுத்த கூட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் லண்டனில் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இலங்கையையும் சேர்த்துக்கொள்வதற்கு தலையீடு செய்யுமாறு கோரி அமைச்சர்கள் மட்டச் செயற்பாட்டுக்குழுவின் உறுப்பு நாடுகளுக்கு கனடா அரசாங்கம் கடிதங்களை எழுதியிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் அறியவருகிறது.

கனடாவின் முயற்சி வெற்றியளிக்குமானால், இலங்கையின் நடத்தைகள் தொடர்பான விசாரணைச் செயன்முறைகள் பல மாதங்கள் அல்லது வருடங்கள் தொடரும்.

இந்த இடைப்பட்ட காலத்தில் பொதுநலவாய நாடுகளின் எந்தவொரு கூட்டத்திலும் இலங்கையினால் வாக்களிக்க முடியாமல் போகும்.

இத்தகையதொரு சூழ்நிலை உருவாகும் பட்சத்தில், இலங்கையில் பொதுநலவாய உச்சிமாநாட்டை நடத்துவதற்கான திட்டங்களை ரத்துச் செய்வதைத் தவிர, செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மாவுக்கு வேறுவழியே இல்லை என்று இராஜதந்திர வட்டாரங்கள் கூறுகின்றன. இலங்கை அவ்வாறு ஓரங்கட்டப்படும் பட்சத்தில் உச்சி மாநாட்டை நடத்துவதற்கு இந்து சமுத்திர தீவு நாடான மொரீசியஸ் ஆர்வம் காட்டக்கூடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்கள் மட்ட செயற்பாட்டுக் குழுவில் தற்போது அவுஸ்திரேலியா, பங்களாதேஷ், கனடா, ஜமேய்க்கா, சியராலியோன், தான்சானியா,




ரிறினிடாட் அன்ட் டொபாகோ, வானோட்டு மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. 2012 பெப்ரவரி 7ஆம் திகதி ஜனாதிபதி முஹமட் நஷீட் பதவியை இராஜினாமா செய்ததையடுத்து மாலைதீவு தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருவதால் அந்த நாடு மேற்படி செயற்பாட்டுக் குழுவின் கூட்டங்களில் பங்கேற்க முடியாத நிலையில் இருக்கிறது.

பொதுநலவாய நாடுகளின் அமைச்சர்கள் மட்டச் செயற்பாட்டுக்குழு 1995இல் நியூஸிலாந்தின் ஆக்லாண்ட் நகரில் நடைபெற்ற உச்சி மாநாட்டின் போது ஏற்படுத்தப்பட்டது. பொதுநலவாய நாடுகள் அமைப்பின் அடிப்படை அரசியல் கோட்பாடுகளையும் விதிமுறைகளையும் உள்ளடக்கிய ஹராரே பிரகடனங்களை தொடர்ச்சியாக அல்லது படுமோசமாக மீறுகின்ற உறுப்பு நாடுகள் தொடர்பில் எவ்வாறு நடந்து கொள்வது என்பதை இந்தச் செயற்பாட்டுக் குழுவே தீர்மானிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உச்சிமாநாட்டை நடத்துவதில் எந்தப் பிரச்சினையுமே எழப்போவதில்லை என்று இலங்கை அரசாங்கம் கூறுகின்றது. இதுவரையில் கனடா மாத்திரமே பிரச்சினை கிளப்பியிருக்கிறது என்று வெளியுறவு அமைச்சின் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

செய்திச்சரம்

# பாகிஸ்தான் அரசுக்கு நெருக்கடி


இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே காஷ்மீர் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டில் பதற்ற நிலை அதிகரித்திருக்கும் சூழ்நிலை, பாகிஸ்தானின் அரசியலிலும் பெரும் நெருக்கடிநிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை மக்களால் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு அரசாங்கம் அதன் பதவிக்காலத்தைப் பூர்த்திசெய்வதும் அதன் முடிவில் புதிய பொதுத் தேர்தலில் மக்களால் அதே அரசாங்கம் அல்லது வேறு கட்சி தலைமையிலான அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்படுவதும் வழமை நிகழ்வுகள். ஆனால், பாகிஸ்தானில் அத்தகைய வரிசைமுறை நிகழ்வுகள் ஒரு போதும் நடந்தேறியதில்லை.


ஜனாதிபதி அசீவ் அலி சர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான அரசாங்கம் அதன் 5 வருட பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்வதற்கு இன்னமும் ஒரு சில மாதங்களே இருக்கின்றன. அவ்வாறு அந்த அரசாங்கத்தினால் பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்ய முடியுமானால், பாகிஸ்தானின் வரலாற்றிலேயே 5 வருடங்கள் முழுமையாக ஆட்சியதிகாரத்தில் இருந்த முதல் அரசாங்கம் என்ற பெருமை அதற்கு வந்து சேரும்.

ஆனால், அந்தப் பெருமையை அந்த அரசாங்கம் பெற்றுவிடாதிருப்பதை உறுதிசெய்யும் நோக்கில் சூழ்நிலைகளும் இராணுவமும் செயற்பட்டுக்கொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக பிரதமர் ராஜா பெர்வெஸ் அஷ்ரப்பை கைதுசெய்யுமாறு பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கும் அதேவேளை, கனடாவில் இருந்து நாடு திரும்பிய இஸ்லாமிய மதகுரு




மதகுரு தாஹிர்



பிரதமர் அஷ்ரப்

தாஹிர் - உல் கத்ரி அரசாங்கத்தை உடனடியாகக் கலைக்க வேண்டுமென்ற கோரிக்கைக்கு ஆதரவாக மக்களை அணிதிரட்டிக்கொண்டு ஆர்ப்பாட்டங்களில் இறங்கியிருக்கிறார்.



ஜனாதிபதி சர்தாரி

பட்ட இராணுவச் சதிப்புரட்சியை ஆதரித்தவர் தாஹிர். தற்போதைய அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு, இடைக்கால நிருவாகமொன்றின் கீழ் தேர்தல் முறையை மாற்றியமைத்து ஊழல் மோசடிகளை இல்லாதொழிக்க வேண்டுமென்ற தாஹிரின் கோரிக்கை இராணுவத்தின் தூண்டுதலின் கீழ்தான் அவர் செயற்படுகிறாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.


தற்போதைய அரசாங்கம் அதன் பதவிக்காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்யுமானால், அது பாகிஸ்தானில் ஜனநாயக அதிகாரத்தை வலுப்படுத்துவதை நோக்கிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வாக அமையும். ஆனால், ஜனநாயக அதிகாரமோ அல்லது ஜனநாயக நிறுவனங்களோ வலுப்பெறுவதை அனு

**அந்த நாட்டு வரலாற்றில் பதவிக் காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்த முதல் அரசாங்கம் என்ற பெருமை பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைமையிலான நிருவாகத்திற்கு கிடைக்காமல் போகுமா?**

பாகிஸ்தான் இராணுவத்தின் ஆசிர்வாதத்துடனான இடைக்கால அரசாங்கமொன்று நியமிக்கப்பட வேண்டுமென்பதே தாஹிரின் விருப்பம்.

ஜெனரல் பெர்வெஸ் முஷாரப்பினால் இறுதியாக மேற்கொள்ளப்

மதிக்க இராணுவம் தயாராயில்லை என்பதை தற்போது மூண்டுள்ள அரசியல் நெருக்கடி மீண்டும் உணர்த்தி நிற்கிறது.



அட்டைப்படக் கட்டுரை

# றிசானாவுக்கு நேர்ந்த கதிக்கு உண்மையில் யார் பொறுப்பு?

கொலை செய்ததாக பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு றிசானா நபீக் கைது செய்யப்பட்ட தினத்தில் இருந்து அவள் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட தினம் வரை 7 வருடங்கள் கடந்து போயின. இந்தக் கால கட்டத்தில் அக்கறையுடன் உகந்த இராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அந்த யுவதியின் உயிரைக் காப்பாற்றக் கூடியதாக இருந்திருக்கும்.

றிசானா நபீக்கை விடுதலை செய்விப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறியதற்கான காரணங்களில் சில வற்றை நோக்குவோம்.

இலங்கையின் தற்போதைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையில், ஜனாதிபதியின் ஆணையின் கீழான உத்தரவுகளை செயற்படுத்த வேண்டிய பொறுப்பைக் கொண்ட பல்வேறு மட்டங்களிலான அதிகாரிகளுக்கிடையில் உருப்படியான கட்டளைப்படிமுறை (Chain of Command) ஒன்று

இல்லை. கட்டளைப் படிமுறையில் உள்ள ஒவ்வொரு அதிகாரியும் தங்களுக்குரிய பொறுப்புகளை நிறைவேற்றிவிட்டு, தனக்கு மேலுள்ளவருக்கு அறிவிக்கும் செயன்முறை இல்லாமற்போய்விட்டது. ஜனாதிபதியின் கவனத்துக்கு விடயங்கள் கொண்டுவரப்படும் போது (குறிப்பாக, பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்களையடுத்து) அவர் அந்தந்த நேரத்துக்கேற்ற முறையில், ஒரு தற்காலிக அணுகுமுறையுடன் அவற்றைக் கையாளுகிறார். அடுத்து சில உத்தரவுகளைப் பிறப்பிக்கிறார். சிலவேளைகளில் தூதுக்குழுவொன்றை அனுப்புகிறார். சம்பந்தப்பட்ட விவகாரம் முழுமையாகத் தீர்த்துவைக்கப்படுவதை உறுதி செய்வதற்கு நிலைபேறான தொடர் நடவடிக்கை என்று எதுவும் கிடையாது.

இந்தச் சம்பவத்தைப் பொறுத்தவரை, சவூதி அரேபியாவில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் தலையிட்டு, றிசானா நபீக்கிற்குத் தேவையான சட்ட உதவிகளைச் செய்திருந்தால், ஆரம்பக் கட்டங்களிலேயே அவளைக் காப்பாற்றியிருக்க முடியும். ஆனால், பி.பி.சி.யின் சிங்களச் சேவை இந்த வழக்கை பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டு வரும் வரை, அதாவது றிசானாவுக்கு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டு பத்துநாட்கள் கடந்த நிலையிலும் கூட, சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் எந்தவிதமான தலையீட்டையும் செய்யவில்லை. அந்த நேரமளவில், றிசானாவிடமிருந்து பெறப்பட்ட “ஒப்புதல் வாக்குமூலம்” ஏற்கனவே அவருக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டுவிட்டது. குறைபாடுகளுடன் கூடிய சவூதி அரேபியச் சட்ட முறைமையில் ஒப்புதல்வாக்கு மூலத்தில் இருந்து தப்புவதென்பது மிகவும் கஷ்டமானதாகும்.

அந்தத் தீர்ப்புக்கு எதிராக உடனடியாக மேன்முறையீடு செய்வதே அவளைக் காப்பாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய இரண்டாவது முயற்சியாகும். அதைச் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் மறுத்துவிட்டது. நாட்டுக்கு வெளியே கிரிமினல் குற்றஞ்சாட்டப்படுகின்ற இலங்கைத் தொழிலாளர்களுக்காக தலையீடு செய்வதில்லை என்று ஒரு கொள்கை இருப்பதாக அதற்குக் காரணமும் கூறப்பட்டது. ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவினதும் அதன் ஆதரவாளர்களினதும் தலையீடே மேன்முறையீடு தாக்கல் செய்யப்படுவதைச் சாத்தியமாக்கியது. அவர்கள் மேன்முறையீட்டுக்கான பணத்தையும் திரட்டினார்கள். அந்த மேன்முறையீட்டின் அடிப்படையில் மரணதண்டனைப் பட்டியலில் இருந்து றிசானாவின் பெயர் அகற்றப்பட்டது. அதற்குப் பிறகு ஐந்து வருடங்கள் கழித்தே அவள் சிரச்சேதம் செய்யப்பட்டாள்.

இந்த இடைப்பட்ட ஐந்து வருடகாலத்திலும், றிசானாவின் உயிரைக் காப்பாற்றுவதற்கு ஒரேயொரு மார்க்கமே இருந்தது. இறந்துபோன குழந்தையின் குடும்பத்தினருடன் பயனுறுதியுடைய பேச்சுவார்த்தைகளை நடத்துவதே அதுவாகும். இந்தப் பேச்சுவார்த்தையில் காரியத்தைச் சாதிப்பதற்கு இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது. சகல வகையான சமிக்ஞைகளும் காட்டப்பட்டன. அவ்வப்போது அமைச்சர்கள் வந்து போனார்கள். ஆனால், குழந்தையின் குடும்பத்தவர்களுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி விவகாரத்தைக் கையாள அவர்கள் தவறிவிட்டனர். உண்மையில், தொடர்பை ஏற்படுத்துவதில் அவர்கள் வெற்றி கண்டிருப்பார்களேயானால், குருதிக் கூலியை (Blood Money) செலுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்க முடியும் அல்லது குடும்பத்திடமிருந்து மன்னிப்பைப் பெற்றிருக்க முடியும். காணப்படக்கூடியதாக இருக்கிற கலாசார மற்றும் மொழிப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், குழந்தையின் குடும்பத்தவர்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு சவூதி அரேபியாவில் இடையறாத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. சவூதி அரேபியாவில் இருந்து செயற்படுகிற இராஜதந்திரிகளினால் இராஜதந்திர முயற்சிகளின் ஊடாக மாத்திரமே இதைச் செய்திருக்க முடியும். ஆனால், தற்போதைய இலங்கை நிருவாக முறைமையின் கீழ் வெளிவிவகார அமைச்சுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற தன்மையை நோக்கும் போது அங்கு இடையறாத தொடர் நடவடிக்கைகளும் கண்காணிப்பும் இடம்பெறுவதாக இல்லை என்பதை தெளிவாகத் தெரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. அத்துடன், அத்தகையதொரு பணியைச் செய்வதற்கு பொறுப்பானவரென்று எந்த ஒருவரையும் கருதக் கூடியதாகவும் இல்லை.

நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்ற சந்தர்ப்பங்களில், அமைச்சர்கள் அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். பாராளுமன்றத்திலும் அறிக்கை விடுகிறார்கள். சகலவிதமான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன என்று வாக்குறுதி அளிப்பார்கள். மக்களின் அதிருப்தியைச் சமாளிப்பதற்காக மாத்திரமே இவ்வாறு செய்யப்படுகிறதே தவிர, வேறு ஒன்றுக்காகவும் இல்லை.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இப்போதெல்லாம் அரசாங்கத்தரப்பின் பணிகள் அரச ஊடகங்களில் அறிக்கைகளை விடுப்பதன் மூலமாகவே செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. நடைமுறைச் சாத்திய மட்டத்தில் எந்த உருப்படியான நடவடிக்கையுமேயில்லை. தலைவரையும் அவரது உத்தியோகத்தர்களையும் இணைக்கின்ற நிலைபேறான ஒரு பொருத்தமான முறைமை இல்லை.

## மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே உருப்படியான தொடர்பாடல் வலையமைப்பு இல்லை

றிசானா நபீக்கின் விவகாரம் ஒரு அரிதான நிகழ்வாகும். அவளைக் காப்பாற்றும் முயற்சியில் இலங்கையின் முழு மக்களும் வெளிநாடுக

ளின் கோடிக்கணக்கான மக்களும் ஒன்றிணைந்து நின்றார்கள். அவளைக் காப்பாற்றுவதற்கு முயற்சி மேற்கொண்ட எவருக்குமே அரசாங்கத்திடமிருந்து எந்தவகையான உற்சாகமும் தரப்படவில்லை. குறைந்த பட்சம் அரசாங்கத்திடமிருந்து நேர்மறையான பிரதிபலிப்புக்கூட வெளிக்காட்டப்படவில்லை. மக்களினால் செய்யப்பட்ட தலையீடுகளை அரசாங்கம், சமூகத்தில் ஒருவர் மீது மற்றவர் காட்டுகின்ற அக்கறையாக என்றே அரசாங்கம் பிரசாரம் செய்து வந்தது. அதனால், மக்கள் தங்களுடைய பொதுவான பிரச்சினைகளைக் கையாளுவதற்கு ஒத்துழைத்துச் செயற்படுகின்ற போக்கையும் சிவில் சமூக முன்முயற்சிகளையும் நசுக்கி விட வேண்டுமென்ற மனப்போக்கு அரசாங்கத்தில் உள்ளவர்கள் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. மக்களினால் மேற்கொள்ளப்படக் கூடிய முன்முயற்சிகள் தொடர்பில் ஆழமான எதிர்ப்பு நிலைப்பாட்டை

## பிரஜைகளைப் பாதுகாக்கும் கடப்பாட்டு உணர்வு இல்லை

றிசானா நபீக் இலங்கையின் பின் தங்கிய பகுதியொன்றைச் சேர்ந்த மிகவும் வறுமைப்பட்ட குடும்பமொன்றைக் காப்பாற்றுவதற்காக தன்னை அர்ப்பணித்த ஒரு பதினேழு வயதுச் சிறுமி. குடும்பத்தைக் காப்பாற்றும் ஒரே நோக்கத்துக்காகவே அவள் வெளிநாடு சென்றாள். தங்களது குடும்பங்களுக்கு உதவுமுக



சோகமே உருவாக
ரிசானாவின் குடும்பம்

அன்றி, தனக்கு அரசியல் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்ற ஒன்றாகவே நோக்கியது. பிரஜைகள் ஒருவருக்கொருவர் உதவுவதற்கு மேற்கொள்கின்ற முயற்சிகளை அரசாங்கம் முற்றுமுழுதாக எதிர்மறையாகவே நோக்கியது. சிவில் சமூகத்தின் செயற்பாடுகளையும் அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகளையும் தனக்கு எதிரான வெளிநாட்டுச்சதி முயற்சி எடுக்கும் போக்கே ஆளும் தரப்பின் கோட்பாட்டின் நடுக்கூறாக உள்ளது. மக்களின் தலையீட்டுக்கு அரசாங்கம் வெளிக்காட்டுகின்ற பிரதிபலிப்பு வெறுமனே பகிரங்க அறிக்கைகளை விடுப்பதாக அல்லது சில சமிக்ஞைகளைக் காட்டுவதாக இருக்கிறதேயன்றி, மக்களின் அக்கறைகளை விளங்கிக் கொண்டு, அவர்களுக்கு மானசீகமான உணர்வுடன் பதலிறுப்பதாக இல்லை.

மாக, இடர்மிகு சூழ்நிலைகளின் கீழ் வேலை செய்வதற்காக சொந்த நாட்டைவிட்டு வெளியேறி மிகப்பெரிய தியாகங்களைச் செய்கிற பெரியதொரு மக்கள் படையின், குறிப்பாக பெண்கள் படையின் ஒரு உறுப்பினரே றிசானா. நாட்டின் மிகவும் பின் தங்கிய இந்தப் பிரிவினரின் சம்பாத்தியத்தின் மூலமாக அந்திய செலாவணியின் பெரும் பகுதியை அரசாங்கம் பெற்றுப் பயனடைகிறது.

ஆனால், இந்தப் பிரிவினரின் சார்பில் எந்த நடவடிக்கையையும் எடுப்ப தற்கு அரசாங்கம் தவறுகிறது. இதில் மிகவும் மோசமானது எதுவென்றால், இந்தத் தொழிலாளர்களுக்குத் தேவைப்படுகின்ற நேரத்தில் இலங் கைத் தூதரகங்கள் போதுமான சேவைகளை வழங்குவதில்லை.

இலங்கைத் தொழிலாளர்களைப் பெறுகின்ற நாடுகளின் அரசாங்கங்க ளுடன் இத்தொழிலாளர்களின் சார் பில் செய்யக்கூடிய அக்கறையுட னான எந்தவொரு தலையீடுமே அந்த அரசாங்கங்களுடனான தனது உறவுகளுக்கு ஒரு முட்டுக்கட்டை யாக அமைகிறது என்று அரசாங்கம் கருதுகிறது. தனது பிரஜைகளின் சார் பில்வெளிநாட்டுஅரசாங்கங்களுடன் தலையீடுகளைச் செய்வதன் மூல மாக அசௌகரியப்பட்டுக்கொள்ள இலங்கை அரசாங்கம் தயாரா யில்லை. அதனால், அனேகமாக அடிமை போன்ற மனோநிலையே காணப்படுகிறது. தேவை எழுகிற போது தனது பிரஜைகளின் உரிமை களை வலியுறுத்துவதில் உள்ள பொறுப்பைப்பற்றி அக்கறைப்படாத அரசாங்கம், அந்நியச் செலாவணி சம்பாத்தியத்துக்காக அந்த வெளிநா டுகளுடன் உறவுகளைப் பேண வேண்டியதே கூடுதல் முக்கியத் துவம் வாய்ந்தது என்று கூறுகிறது. சவூதி அரேபியாவின் ''நீதி'' முறை மையினால் ஆரம்பத்திலிருந்தே தவ றாக நடத்தப்பட்ட இந்த இளஞ்சிறுமி விடயத்தில் இலங்கை அரசாங்கம் வலிமையான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பதைத் தடுத்தது இந்த மனப்போக்கேயாகும். இதேபோன்ற சந்தர்ப்பங்களில் வேறு அரசாங்கங் கள் (இந்திய அரசாங்கம் உட்பட) இடையறாததும்ஊக்கமுடையது மான தலையீடுகளைச் செய்கின்றன.

வேலை வாய்ப்புக்காகச் சென்ற நாட்டினால் தவறிழைக்கப்பட்ட இந்த அப்பாவிச் சிறுமியின் உயிரைக் காப் பாற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் தவறியதற்கு கூட்டான பல காரணி கள் பங்களிப்புச் செய்திருக்கின்றன.

இந்தக் காரணிகள் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையில் இருந்தே உண்டா கின்றன. இந்த ஆட்சி முறை அதன் இயல்பாகவே, மக்களின் நலன்களுக் காகச் சேவை செய்யக் கூடியதான நிருவாக இயந்திரமொன்றைத் தோற் றுவித்துப் பேணிப் பராமரிக்க இயலா ததாக இருக்கிறது. இந்த ஆட்சிமுறை யின் ஒரு ஏழைப் பலிக்கடாவே றிசானா நபீக். இணைவுப் பொருத்த மில்லாத இந்த முறையின் தர்க்கரீதி யான ''விளைபயனான'' புறக்கணி ப்பு மனோபாவம் இல்லாமற் செய் யப்படாத பட்சத்தில், ஏனைய கார ணிகளைப் பற்றி எந்தளவு பேசினா லும் எந்தப் பயனும் ஏற்படப்போவ தில்லை.

றிசானா நபீக் ஒரு சின்னமும் கூட, சமுதாயத்தின் மிகவும் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த இலங்கை மக்க ளின் பெரும்பகுதியானவர்களின் ஒரு சின்னமாகும். எமது சமுதாயத் தின் இந்தப் பிரிவினரின் பிரச்சினைக ளைக் கையாளுகின்றபோது தற்போ தைய அரசாங்க இயந்திரம் முற்று முழுதாக அக்கறையில்லாததாக, உணர்ச்சியற்றதாக, பொறுப்பற்றதாக இருக்கிறது என்பதை வெளிக்காட் டும் குறியீடாக றிசானா விவகாரம் விளங்குகிறது. றிசானாவுக்கு நேர்ந்த அனர்த்தம் அவளது சூழ்நிலையில் இருக்கக்கூடிய சகல மக்களினதும் அனர்த்தத்தின் எடுத்துக்காட்டாகும்.

இலங்கையின் மேல்நிலை நீதிமன் றங்களினால் சட்ட விரோதமானது என்று பிரகடனம் செய்யப்பட்ட (பிர தம நீதியரசருக்கு எதிரான) குற்றப் பிரேரணையை நிறைவேற்றியதன் மூலமாக, நீதிமன்றங்களை மலினப் படுத்துவதற்கு தற்போது மேற்கொள் ளப்படுகின்ற செயற்பாடுகள் எந்த நீதி நியாயாதிக்கமும் இல்லாத நீதி மன்றங்கள் தோன்றுவதற்கே வழிவ குக்கக்கூடும். இலங்கை நீதிமன்றங் கள் சவூதி அரேபிய நீதிமன்றங்க ளைப் போன்று மாறக் கூடும். நீதி மன்றங்களை மலினப்படுத்துகின்ற செயன்முறைகளின் விளைவாகத் தோன்றுகிற பெரிய ஆபத்து இலங் கைப் பிரஜைகளின் உரிமைகளை எதிர்காலத்தில் வெகுவாகப் பாதிக் கக்கூடும். றிசானா நபீக் விவகாரம் மூலம் இது எடுத்துக்காட்டப்பட்டிருக் கிறது.

### சவூதி அரேபியா

சவூதி அரேபியாவின் 'நீதி'முறை படுமோசமான குறைபாடுகளுடன் கூடியது என்பதையும் சர்வதேச ரீதி யாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நேர்மை யான விசாரணைகளுடன் தொடர்பு டைய அடிப்படைக் கோட்பாடுகளை உள்ளடக்காதது என்பதையும் தெளி வாக எடுத்துக்காட்டுவதாக அமைகி றது றிசானா நபீக்கின் விவகாரம்.

இந்த வழக்கில் கொலை இடம் பெற்றதற்கான சான்று எதுவுமே யில்லை. ஆனால், கொலைக்காகவே தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. சம் பந்தப்பட்ட குழந்தை சில இயற்கைக் காரணங்களினாலும் இறந்திருக்கக் கூடியது பெரும்பாலும் சாத்தியமே. பிரேதப் பரிசோதனை நடத்தப்பட வில்லை என்பதால், குழந்தை இறந்த தற்கான காரணத்துக்கு எந்தச் சான் றுமே இல்லை. அந்த ஆண் குழந்தை க்கு புட்டிப்பாலை ஊட்ட முயற்சித்த போது பால் அவனின் வாயிலிருந்து வெளியே கசிந்தது என்று றிசானா கூறியிருந்தாள்.

குழந்தையின் மூக்கின் ஊடாகவும் வாயின் ஊடாகவும் பால் வெளியே கசிவது தொடர்பாக ''ஏசியன் ரிபி யூன்'' சுவீடனில் உள்ள பிரபலமான டாக்டர் ஒருவருடன் தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டது. வாயின் உட்பகுதிக்கும் உணவுக் குழாய்க்கும் இடையில் எங்காவது ஒரு ''நிறுத்தம்'' ஏற்பட்டிருக்கக் கூடும் என்று அந்த டாக்டர் கூறினார். நிறுத்தம் ஏற்படும்போது வயிற்றுக் குள் பால் போகாது. ஆனால் வெளியே கசியும். பிறப்பிலேயே கட் டியொன்று அல்லது கழலையொன்று இருந்தாலும், இவ்வாறாக பால் வெளியே கசியலாம். வீட்டுப் பணிப் பெண் ஊட்டிய புட்டிப்பால் வெளியே வந்தபோது, குழந்தை ஏற் கனவே இறந்திருக்கக் கூடுமென்றும் கருத இடமுண்டு.

றிசானா தவறிழைத்துவிட்டாள் என்று எந்தவொரு சான்றுமேயில்லாமல் குழந்தையின் தாயார் விரக்தி காரணமாகக் குற்றஞ்சாட்டியிருக்கவும் கூடும். 17 வயதுச் சிறுமி சவூதி பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டாள். மொழிபெயர்ப்பாளர் இல்லாமலேயே அவர்கள் அவளை விசாரணைசெய்தார்கள். மேன்முறையீட்டு மனு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது இதை சவூதி நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. றிசானாவினால் விளங்கிக்கொள்ள முடியாத மொழியொன்றில் பதிவுசெய்யப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலத்தில் கையெழுத்திடுமாறு அவள் நிர்ப்பந்திக்கப்பட்டாள்.

இந்த "ஒப்புதல்" வாக்குமூலத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு அவள் குற்றவாளியாகக் காணப்பட்டாள். ஒப்புதல் வாக்கு மூலம் பெறப்பட்ட முறை குறித்து சவூதியில் உள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் விளக்கப்பாடொன்றுக்கு வரமுடிந்த போதிலும் கூட, அவர்களது சட்டத்தின் பிரகாரம் தீர்ப்பைத் தள்ளுபடி செய்வதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை.

ஆரம்ப நிலை நீதிமன்றமொன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் நேர்மைக்கேடான தன்மையை அடிப்படையாகக் கொண்டு றிசானாவுக்கு மன்னிப்பளிக்குமாறு உலகம் பூராகவுமிருந்து இலட்சோபலட்சம் மக்கள் சவூதி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து இடையீடு செய்தனர். இலங்கை ஜனாதிபதியும் சவூதி அரேபியா மன்னருக்கு இரு தடவைகள் கடிதம் அனுப்பி மன்னிப்பளிக்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். ஐரோப்பிய ஒன்றியம் இங்கிலாந்து முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் போன்ற மிகவும் உயர்ந்த மட்டத்திலான தலையீடுகளும் செய்யப்பட்டன. எலிசபெத் மகாராணியாருக்கு அனுப்பப்பட்ட கடிதமொன்றுக்குப் பதிலளித்த பக்கிங்ஹாம் மாளிகை, அவசியமான நடவடிக்கைக்கான கடிதம் பிரதமருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்திருந்தது. தனிப்பட்டவர்கள், அமைப்புகள் என்று பெருவாரியான தரப்புகளிடமிருந்து தலையீடுகள் செய்யப்பட்ட போதிலும், எந்த நடவடிக்கையுமே எடுக்கப்படவில்லை.

"எமது முறைமை பிழையானதாக இருக்கலாம். ஆனால், அதுவே எம்மிடம் இருக்கும் முறைமை" என்பதே தீர்ப்புக்கான ஒரே அடிப்படையாக அமைந்தது. இந்த முறைமையினால் றிசானா போன்று எத்தனை அப்பாவி மக்களின் உயிர்கள் விழுங்கப்பட்டிருக்குமென்று ஊகிப்பது கஷ்டமானதாகும்.

> 'எமது முறைமை பிழையானதாக இருக்கலாம். ஆனால், அதுவே எம்மிடம் இருக்கும் முறைமை' என்பதே சவூதி அரேபியர்களின் தீர்ப்புக்கான ஒரே அடிப்படையாக அமைந்தது. இந்த முறைமையினால் ரினாசா போன்று எத்தனை அப்பாவிகளின் உயிர் விழுங்கப்பட்டிருக்கும் என்று ஊகிப்பது கஷ்டமானதாகும்

### ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பொறிமுறை

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகருக்கு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. மனித உரிமைகள் பேரவைக்கும் சமர்ப்பணங்கள் செய்யப்பட்டன. உயர்ஸ்தானிகர் அலுவலகம் அந்த விவகாரம் தொடர்பில் இதன் சொந்தத்தில் விசாரணை நடத்தி சவூதி அரசாங்கத்துடனும் தொடர்பு கொண்டது என்பதை நாம் அறிவோம். ஆனால், சவூதி அரேபிய சட்ட முறையில் நேர்மையான விசாரணைக்கான ஏற்பாடுகள் இல்லாமை தொடர்பில் மனித உரிமைகள் பேரவை போதுமானளவு தலையீடுகளைச் செய்யவில்லை.

நேர்மையான விசாரணையொன்றுக்கான உத்தரவாதமில்லாத நிலையில் மரண தண்டனை வழங்கப்படுகின்ற சூழ்நிலை உட்பட அப்பட்டமான முறையில் அநீதியானதும் மனிதாபிமானமற்றதுமான முறைமைகளைக் கையாளுகின்ற விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பொறிமுறைகளின் பயனற்ற தன்மை பெரிதும் கவலை தருகிறது. பாதிக்கப்பட்ட ஒருவர் இறுதியாக நாடக்கூடிய ஒரே இடம் ஐக்கிய நாடுகள் சபையே. அங்கும் நிலைமை இப்படியென்றால்.....?

சவூதி அரேபியா போன்ற சக்திமிகு நாடுகள் அவற்றின் சொந்த சட்டமுறைமையினால் இழைக்கப்பட்டிருக்கக்கூடிய அப்பட்டமான மனித உரிமை மீறல்களுக்கு வகை சொல்ல வைக்கப்படாவிட்டால், ஐக்கிய நாடுகளின் நம்பகத்தன்மை கடுமையாக மலினப்படுத்திவிடக்கூடும். ●


***(ஹொங்கொங்கை மையமாகக் கொண்டியங்கும் ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அறிக்கை)***

# ஜனநாயகத்தை, சட்டத்தின் ஆட்சியை, மீள நிலைநாட்ட வழி என்ன?

**அரசை மக்கள் கிளர்ச்சியொன்றினால் மாத்திரமே தூக்கியெறிய முடியும் என்று ரணில் சரியாகவே கூறினார். கிளர்ந்தெழுவதற்கான மன விருப்பத்தை மக்கள் காட்டவில்லை என்பது ஒரு பிரச்சினை. கிளர்ச்சி செய்வதற்கு வழி காட்டித் தலைமைதாங்குவதற்கான உணர்ச்சியோ, ஆர்வமோ ரணிலிடம் இல்லை என்பது மறு பிரச்சினை**

ஜனநாயக நுட்ப நுணுக்கங்களைப் பற்றியெல்லாம் தனக்கு எந்தவித அக்கறையும் கிடையாது என்பதை ராஜபக்ஷ ஆட்சி கொடூரமான அளவுக்கு தெளிவாகக் காட்டியிருக்கிறது. எதேச்சாதிகாரக் கொடும் முத்திரையை சமூகம் முழுவதும் மீதும் குத்தப்போவதையும் பரிதாபகரமான இலங்கைத் தீவின் எதிர்காலம் எத்தகையதாக இருக்கும் என்பதையும் இந்த ஆட்சி தெளிவாக உணர்த்தியிருக்கிறது. ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு புதுக்கடையில் காணக்கூடியதாக இருந்த காட்சிக்கும் 1930களில் ஜேர்மனியில் ஹிட்லரின் மண்ணிறச் சட்டைக் குண்டர் படையினர் ஆர்ப்பாட்டக்காரர்களை வீதிகளில் தாக்கிக் கொடுமைப்படுத்திய காட்சிக்கும் இடையே எந்த வேறுபாடுமேயில்லை. ஜேர்மனியில் அன்று நடந்ததை விடவும் இலங்கையில் நடப்பவை மோசமானவை என்று கூடக் கூறலாம். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசியல்வாதிகளினால் அனுப்பிவைக்கப்பட்ட பாதாள உலகக் காடையர்கள் மதுபோதையில் ஆர்ப்பாட்டக்காரர்களை பெரிய பொல்லுகளால் தாக்கியபோது பொலிஸார் கைகட்டிப் பார்த்துக் கொண்டு நின்றனர். காடையர்களுக்கே பொலிஸார் பாதுகாப்பை வழங்கிக் கொண்டிருந்தனர் என்றும் கூறலாம். தங்களது அமைச்சின் உயர் மட்டத்திலிருந்து வந்த உத்தரவுகளின் பிரகாரமே பொலிஸார் செயற்பட வேண்டியிருந்தது என்பதில் சந்தேகமில்லை.

தனது எசமான் மகிந்தவின் சார்பில் கையாள் வாசுதேவ உண்மையை உளறிக் கொட்டினார். "நீதித்துறையை நரகத்துக்குப் போகுமாறு நாம் கூறியிருக்கிறோம்" என்று அவர் பாராளுமன்



குமார் டேவிட்



றத்தில் பேசியதைக் காணக்கூடியதாக இருந்தது. ராஜபக்ஷாக்களினதும் அவர்களின் குண்டர்கள், அடிவருடிகளினதும் ஆதிக்கத்தின் கீழான புதிய இலங்கை இதுதான். சர்வாதிகாரம் வந்துவிட்டது. சிங்கள-பௌத்த குட்டி முதலாளிகள் ஒரு வர்க்கத்தினர் என்ற வகையில் முணுமுணுக்கக்கூட இல்லை. யாரைக் குறை கூறுவது? சர்வாதிகாரியையா? அல்லது சர்வாதிகாரி குதிரையில் இருந்து கீழிறங்கி வரும்போது வரவேற்கக் காத்திருக்கும் கீழ்மகள் போன்று குப்புறக் கிடக்கும் தேசத்தையா? ஒவ்வொரு மக்களும் தங்களுக்குத் தகுதியான அரசாங்கத்தையே பெறுகிறார்கள். இலங்கையில் நித்திரையில் அடிமைத்தனத்திற்குள் நடந்து செல்லும் மக்கள், தங்களைத் தவிர வேறுயாரையும் குறைகூறுவதற்கில்லை.

சர்வாதிகாரத்தை நோக்கி நாட்டை இந்த அரசாங்கம் விரைந்து தள்ளிக் கொண்டு போவதை எதுவுமே தடுத்து நிறுத்தப் போவதில்லை என்று ரணில் விக்கிரமசிங்க மிகவும் சரியாகவே சொன்னார். சர்வாதிகாரத்தை நோக்கிய விரைவை அரசியலமைப்போ, சட்டத்தின் ஆட்சியோ, நெறிமுறைகளோ, ஒழுக்கத் தத்துவமோ, தடுத்து நிறுத்திவிடப்போவதில்லை. இந்த அறக்கொடிய அரசை மக்கள் கிளர்ச்சியொன்றினால் மாத்திரமே தூக்கியெறிய முடியுமென்றும் ரணில் மிகவும் சரியாகவே கூறினார். கிளர்ந்தெழுவதற்கான மனவிருப்பத்தை மக்கள் காட்டவில்லை என்பது ஒரு பிரச்சினை. கிளர்ச்சி செய்வதற்கு வழிகாட்டி தலைமை தாங்குவதற்கான உணர்ச்சியோ, பேரார்வமோ ரணிலிடம் இல்லை என்பது மறுபிரச்சினை, கிளர்ச்சி உருவாகும் போது ரணில் ஓரங்கட்டப்பட்டு தேசிய ரீதியில் புதிய தலைவர்கள் மக்களுக்கு தலைமைதாங்க வருவார்கள். ராஜபக்ஷாக்களினால் மயக்கப்பட்ட சடங்களாக மக்கள் இருக்கும் வரை அரசின் வாடிக்கையாளர்களாக மக்கள் இருக்கும் வரை ரணிலுக்கு ஒரு பாத்திரம் இருக்கவே செய்யும்.



அடுத்த ஓரிரு மாதங்களில் இடம் பெறக்கூடிய நிகழ்வுப் போக்குகள் குறித்துச் சிந்தித்துப் பார்ப்போம். எனது கருத்துகளின் விபரங்களில் சில மாறுதல்கள் ஏற்படக்கூடும். ஆனால், பொதுவான போக்குகள் மறுதலிக்க முடியாதவை.

## சர்வாதிகாரமும் எதிர்த்து நிற்றலும்

சில தினங்களுக்கு முன்னர் எனக்கு ஒரு மின்னஞ்சல் கிடைத்தது. நண்பர் ஒருவர் ஊடாக எனக்கு அது கிடைத்ததால், அதை ஆக்கியோனை நான் அறியேன். ஆனால், அதன் உள்ளடக்கங்களை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதனால், உங்களுக்கும் அதை வாசிக்கக் கருகிறேன்.

**குற்றப்பிரேரணை நாடகமும் அதை முன்னெடுப்பதில் ராஜபக்ஷாக்கள் கையாண்ட நச்சுத் தன்மையும் அநியாயமான அணுகுமுறையும் இந்தப் பின்னணியில் கச்சிதமாக விளங்க வைக்கப்படக் கூடியவையாகும். உச்ச நீதிமன்ற நீதிபதி என்ற வகையிலும் பிறகு பிரதம நீதியரசர் என்ற வகையிலும் ஷிராணி பண்டாரநாயக்க, ராஜபக்ஷாக்களின் அரசியல் கோரிக்கைகளை திருப்தி செய்வதற்கு தன்னாலியன்றவரை வளைந்து கொடுத்தார்.**

**"ஜெனரல் சரத் பொன்சேகா பிணை கோரித் தாக்கல் செய்த மனுவை நிராகரித்த உச்ச நீதிமன்ற அமர்வுக்கு ஷிராணி பண்டாரநாயக்க தலைமை வகித்தார். அரசியலமைப்புக்கான 18ஆவது திருத்தத்துக்கு 24 மணித்தியாலங்களுக்குள் அவர் அங்கீகாரம் கொடுத்தார். ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் நிறைவேற்றப்படுவதற்கு எளிதாக வழிசமைத்துக்கொடுத்தார். தலைமைத்துவப் பயிற்சிக்கு எதிரான மனுவையும் அரசுக்கு எதிரான இணையத்தளங்களைத் தடுப்பதற்கு எதிரான மனுவையும் அவர் நிராகரித்தார். (விக்கிலீக்ஸினால் அம்பலப்படுத்தப்பட்ட அந்தரங்க கேபிள் செய்தியொன்றில் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க ''ராஜபக்ஷ விசுவாசி'' என்று அமெரிக்கத் தூதுவர் வர்ணித்திருந்தார்)**

**"ஆனால், இறுதியில் சகல விசுவாசமுமே பயனற்றுப் போய் விட்டது. ராஜபக்ஷாக்களுக்கு எதிராக ஒரு தீர்ப்பை ஷிராணி பண்டாரநாயக்க வழங்கினார். (ஏனென்றால் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் அந்த விடயத்தில் தெட்டத் தெளிவானதாக இருந்தது) அதையடுத்து சகோதரர்கள் அவர் மீது நெருப்பைக் கக்கத் தொடங்கினார்கள். நகரம் மற்றும் நாட்டுப்புற திட்டமிடல் (திருத்தம்) சட்ட மூலத்தையும் திவிநெகும சட்ட மூலத்தையும் உச்ச நீதிமன்றம் அங்கீகரித்திருக்குமேயானால், அது அரசியல**

**மைப்பை அப்பட்டமாக மீறுவதாகவே அமைந்திருக்கும். ஆனால், அந்தத் தர்க்கமும் நியாயமும் ராஜபக்ஷாக்களுக்கு ஒரு பொருட்டல்ல. அவர்களைப் பொறுத்தவரை மேன்மையானது அரசியலமைப்பு அல்ல, தங்களின் விருப்பங்களேயாகும். பிரதம நீதியரசர் கருங்கல் போன்று உறுதியாக நிற்கிறார். சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாப்பதற்காக நீதித்துறை துணிச்சலான போராட்டத்தை நடத்துகிறது. நீதித்துறையினரின் துணிச்சலானதும் ஊக்கம் நிறைந்ததுமான எதிர்ப்பு ஜனநாயக சக்திகள் குற்றப் பிரேரணைக்கு எதிராகவும் நீதித்துறைச் சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகளுக்காகவும் தங்கள் சொந்தத்தில் போராட்டங்களை நடத்துவதற்கு முறையான ஒரு மேடையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அரசியலமைப்பு முட்டுக்கட்டை நிலை சட்டத்தின் அடிப்படையில் தீர்த்துவைக்கப்படப் போவதில்லை. அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி அது தகர்க்கப்படும். சகோதரர்கள் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கு மதிப்பு அளித்துச் செயற்படப்போவதில்லை. ஏனென்றால், அவ்வாறு மதிப்பு அளித்துச் செயற்பட்டால், அது முன்னுதாரணமொன்றை ஏற்படுத்தும், பிறகு அதனால் அவர்களின் அதிகாரத் திட்டம் கடுமையாக மலினப்படுத்தப்படும்''.**

இரண்டாவது மேற்கோள் எனது இந்தக் கட்டுரையின் மூலமான செய்தியை உருவகப்படுத்தி நிற்கிறது. பொது மக்களுக்குப் போதனையைச் செய்து அவர்களை அணி திரட்ட வேண்டுமென்ற கோரிக்கையை நான் ஒருவருடகாலமாக கடுமையாக வலியுறுத்தி வந்திருக்கிறேன். அக்கோரிக்கை முன்னெப்போதையும் விட தற்போது பரவலாகப் பேசப்படுவதை அறியும் போது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. அரசாங்கத் தொலைக்காட்சிச் சேவைகளும் தனியார் தொலைக்காட்சிச் சேவைகளும் (சகலதுமே அரசின் கைக்கருவிகள்) துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றமை பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது. ஏனென்றால், குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர் மத்தியில் காணப்படுகின்ற அதிர்ச்சி தரும் அறியாமைக்கு இவையே பொறுப்பாக இருக்கின்றன. எவ்வாறெனின் சவால் கவனத்திலெடுக்கப்பட்டு செலுத்துவதாக இருக்கவேண்டும். இலங்கையில் முன்னென்றுமே அறியப்பட்டிராத வகையில் ஜனநாயகத்துக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்திருக்கும் ராஜபக்ஷ ஆட்சியை அகற்றுவதே அந்த இலக்காகும். ராஜபக்ஷ ஆட்சியின் நியாயப்பாட்டு



தோற்கடிக்கப்பட வேண்டும். மேற்கோள் மிகவும் குறுகியது. மணிச்சுருக்கமாக விடயத்தை விளங்க வைக்கிறது.

**''பிரதம நீதியரசரும் நீதித்துறையும் தங்களால் இயன்ற வரை சென்றிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளை மீறுவதிலிருந்து அரசாங்கத் தைத் தடுக்கும் பணி எங்களுக்குரியது. அதாவது, ராஜபக்ஷாக்களுக்கு பணிந்து போகாத அரசியல் சக்திகளுக்கும் சிவில் சமூக சக்திகளுக்கும் உரியது''.**

நீதிமன்றத் தீர்ப்புகளுடன் மாத்திரம் தொடர்புடைய சவாலை இது சொல்கிறது. ஆனால், உண்மையான நெருக்கடி மிகவும் பெரியதும் பரந்ததுமாகும். அது அரசியல் அதிகாரம் முழுவதுடனும் இலங்கைமீது பெருமுதலாளித்துவ சர்வாதிகாரத்தை (Corporatist Dictatorship) திணிப்பதில் ராஜபக்ஷ சகோதரர்கள் கொண்டிருக்கும் தணியாத உறுதிப்பாட்டுடனும் சம்பந்தப்பட்டதாகும். இனிமேல் இலங்கையில் சகல அரசியல் ஈடுபாடும் செயற்பாடுகளும் ஒரேயொரு இலக்கு மீது கவனத்தைச் காலகட்டம் முடிவடைந்துவிட்டது. பலத்தை நியாயபூர்வமற்ற முறையில் பயன்படுத்துவதன் மூலம் மாத்திரமே ராஜபக்ஷாக்களினால் தங்களின் மேலாதிக்கத்தை இனிமேல் பேணிக்காக்க முடியும். எவ்வளவு காலத்துக்கு சூழ்ச்சியினாலும் கொடூர பலத்தினாலும் ராஜபக்ஷாக்களின் அதிகாரத்தை நிலைநிறுத்தக்கூடியதாக இருக்கும்? இறுதியாகச் சொல்வதானால், இலங்கை மக்களிலேயே சகலதும் தங்கியிருக்கிறது. இது காலவரை செய்ததைப் போன்று மல்லாந்துபடுத்துக் கொண்டு கொடுங்கோன்மைக்காரர்களின் தலைப்பாகைச் செண்டுக்கு இந்த மக்கள் வாலாட்டிக் கொண்டிருப்பார்களேயானால், இந்த நாட்டுக்காக யாரும் கண்ணீர் விட வேண்டியதில்லை.


ராஜபக்ஷாக்களுக்கு அறிவு நலம் ஏற்பட வேண்டுமென்று எதிர்பார்ப்பது காலத்தை வீணடிக்கும் செயலாகும். அரசாங்க சார்பற்ற தொண்டர் நிறுவனங்களும் வர்த்தக சம்மேளனங்களும் தொழில்சார் அமைப்புகளும் அவற்றின் நேரத்தை விரயம் செய்வதை நிறுத்திவிட்டு மக்

கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதிலும் அவர்களை திட்ட மிட்டமுறையில் பரந்தளவில் அணி திரட்டுவதிலும் கவனத்தைச் செலுத்த வேண்டும். படித்த மத்தியதர வர்க் கங்களுக்கும் சமூகத்தின் உயர் குழா முக்கும் தொழில்சார் நிபுணர்களுக் கும், பெரிய முதலாளித்துவ வர்க்கத் துக்கும் ஆட்சியாளர்களின் முறைகே டான அணுகுமுறைகள், செயற்பாடு கள் பற்றி மேலும் போதனை தேவை யில்லை. அவ்வாறு போதனை செய்ய விரும்புபவர்கள் சிங்களத் திலேயே செய்ய வேண்டும். திகைப் பைத் தருகின்ற இந்த ஆட்சியின் நட வடிக்கைகளைப் பற்றி மக்களுக்கு அறிவூட்டுவதற்கு இந்த நாட்டில் ஒரு சிங்கள தினசரி செய்திப் பத்திரிகை கூட இல்லை என்பதை நம்பமுடியா மல் இருக்கிறதல்லவா?

### சர்வதேச சமூகம்

ஜனநாயகத்தைப் பேணுவதற்கு சர்வதேச சமூகத்தின் உதவி தேவைப் படுகிற அளவிற்கு இந்த ஆட்சியின் சூழ்ச்சித்தனமான செயற்பாடுகளும் சொற்புரட்டுகளும் வெற்றிகரமான வையாக அமைந்திருக்கின்றன. இது பெரும் துரதிர்ஷ்டவசமானதாகும். சர்வதேச சமூகத்தைப் பொறுத்த வரை, அரசாங்கத்துடனான பொறுமை எல்லையைக் கடந்து விட்டபோதிலும், நம்பகமான மாற்று அரசாங்கம் ஒன்று இல்லாததால் எதையுமே செய்ய முடியாமல் இருக் கிறது. ஏற்றுமதி, இறக்குமதி வர்த்த கமும் வங்கிமுறையும் பொருளாதார மற்றும் கலாசார வாழ்வும் கூட மேற் குலகில் தங்கியிருக்கின்ற போதி லும், உள்நாட்டு நிலைவரங்களே தீர்க்கமானவையாக அமைகின்றன. சர்வதேச சமூகம் இன்னொரு சர்ச் சைக்குரிய இடத்தில் ஏன் கையை வைத்து அழுக்காக்கிக் கொள்ள வேண்டும்? எந்தவொரு நாடுமே தங்கள் சொந்த நலன்களுக்காக அன்றி வேறு எந்தக் காரணத்துக்கா கவும் இன்னொரு நாட்டின் விவகா ரங்களில் தலையீடு செய்வதில்லை. சகோதரர்கள் மீதான வெறுப்பு பெரி தாக இருக்கக்கூடும். ஆனால், சர்வ தேச சமூகம் ஏன் தன்னைச் சம்பந்தப் படுத்திக் கொள்ள வேண்டும்? சர்வதேச சமூகத்தை எமது விவகா ரங்களில் தலையிட வைப்பதில் எமக்கு நாட்டமிருக்குமானால், முத லில் நாம் சர்வதேச ரீதியில் விவகா ரங்களை நோக்கவேண் டும்.

சிரியாவைப் பாருங்கள். ஒருவரு டத்திற்கும் சற்று கூடுதலான காலத் துக்கு முன்னர் லிபியாவைப் பாருங் கள். பல நாடுகளுக்கு, குறிப்பாக எம்மைச் சுற்றிவரவுள்ள பிராந்தியத் தின் நாடுகளுக்கு எமது விவகாரங்க ளில் பங்கும் ஈடுபாடும் ஏன் இருக்கி




றது என்பதற்கான பதில் இதில் தான் தங்கியிருக்கிறது. ஒரு சிறிய நாட்டி லென்றாலும் கூட, ஒரு சர்வாதிகாரம் வலுப்பெறுவதை அனுமதிப்பதென் பது குறிப்பாக பிராந்தியத்துக்கும் பொதுவில் உலகிற்கும் ஆபத்தான தாகும்.

சிரியாவில் கிளர்ச்சி ஆரம்பித்த நாளிலிருந்து இன்றுவரை சுமார் 50 ஆயிரம் பேர் இறந்து விட்டார்கள். நகரங்கள் எல்லாம் இடிபாடுகளின் குவியல்களாக்கப்பட்டிருக்கின்றன. 7 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிக மானவர்கள் சிரியாவைவிட்டு வெளி யேறி அகதிகளாகியிருப்பதாக ஐக் கிய நாடுகள் மதிப்பிட்டிருக்கிறது. உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்க ளின் தொகை 20 இலட்சத்துக்கும் அதிகம். அசாத்தை மாளிகையில் இருந்து வெளியே இழுத்தெடுத்து மின் கம்பத்தில் தொங்கவிட வேண்டும். ரஷ்யா கூட இப்போது அதற்கு பச்சைக்கொடி காட்டியிருக்கி றது போலத்தெரிகிறது. ஏனென்றால், அவருக்கு அரசியல் தஞ்சம் கொடுப் பதை விடவும் இதுமலிவானது. ஏற்க னவே உண்டான செலவைப் பாருங் கள். பிராந்தியமும் உலகும் புனர் நிர்மாணத்துக்கான செலவைப் பொறுப்பேற்பதைத் தவிர வேறு மார்க்கமில்லை. ஒரு சர்வாதிகாரி முளையிலேயே கிள்ளப்பட்டால் அழிவும் குறைவு, செலவும் குறைவு. அதனால், சிறிய நாடென்றாலென்ன, பெரிய நாடென்றாலென்ன சர்வாதி காரியொருவர் உருவாகுவதைத் தடுப்பது வெளியுலகிற்கு எப் போதுமே பயனுடையதாகும்.

சர்வதேச சமூகம் வெறுமனே ஆர வாரம் செய்யுமே தவிர எந்த நடவ டிக்கையிலும் இறங்கப்போவதில்லை என்று ராஜபக்ஷ ஆட்சி மிகவும் சாமர்த்தியமாக நினைத்துக் கொண்டி ருக்கிறது. எதிர்வரும் மார்ச்சில் ஜெனீ வாவில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையைப் பற்றியோ அல்லது இவ்வருட பிற்பகுதியில் நடைபெற விருக்கும் பொதுநலவரசு நாடுகளின் தலைவர்களின் மகாநாடு ரத்துச் செய் யப்படுவதைப் பற்றியோ ராஜபக்ஷ ஆட்சி கவலைப்படவில்லை. சில ஆரவாரங்களுக்குப் பிறகு, சில கண் டன அறிக்கைகளுக்குப் பிறகு, சர்வ தேச சமூகம் பேசாமல் இருந்துவிடும் என்றும் ஆட்சி மீதோ அல்லது அதன் தலைவர்கள் மீதோ தடை எதையும் விதிக்கப்போவதுமில்லை, தண் டனை வழங்கப்போவதுமில்லை என்றே ராஜபக்ஷாக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். நாடுகளை மதிக்காமல் விடுவதற்கு கொழும் பைச் சர்வதேச சமூகம் அனுமதிக்கும் வரை இலங்கையில் ஜனநாயகத் தையும் மனித உரிமைகளையும் மீள நிலை நாட்டுவதற்கு அதனால் எதை யும் செய்யமுடியாது. ●


# நீதி தேவதையின் மயக்கம்?




**ஷிராணி பண்டாரநாயக்கா பதவி நீக்கப்பட்ட விவகாரத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் வாக்கெடுப்புக்கான தகுந்த தலைப்பாக்குவதற்கு அமெரிக்கா போன்ற நாடுகள் முற்படுமா?**

இப்போதோ, எப்போதோ என்றிருந்த பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவின் பதவியிறக்கம் நடந்தேறிவிட்டது. அவரைத் தொடர்ந்து முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸை பிரதம நீதியரசராக நியமித்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவருக்கு அதிரடியாக பதவிப் பிரமாணமும் செய்து வைத்து விட்டார். அதோடு இலங்கையின் நீதித் துறையில் புதியதொரு சகாப்தம் துவங்கி விட்டது.

ஷிராணி பண்டாரநாயக்கா, நாட்டின் முதல் பெண் பிரதம நீதியரசர் மட்டுமல்ல ஆண்-பெண் இருபாலாரிடையேயும் பாராளுமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்ட முதல் நீதிபதியும் கூட. அவருக்கு முன்னதாக இரண்டு முறை, அப்போதிருந்த பிரதம நீதியரசர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவார்கள் என்ற பேச்சு எழுந்தாலும், அது கடைசி அத்தியாயம் வரை செல்லவில்லை. அதில், பிரதம நீதியரசராக இருந்த நெவில் சமரக்கோன் விவகாரத்தில், பாராளுமன்றம் சில முஸ்தீபுகளை எடுத்தாலும், அவை கடைசி வரை இது போன்று முன்னெடுக்கப்படவில்லை.




என்.சத்தியமூர்த்தி

தற்போது 54 வயதாகும் ஷிராணி பண்டாரநாயக்கா, கடந்த 16 ஆண்டுகளாகவே உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்து வந்திருக்கிறார். அப்படிப் பார்த்தால், உச்ச நீதிமன்ற நீதிபதியாக மிக இளைய வயதில் பதவியேற்றவர்களில் அவரும் ஒருவர். தற்போது பதவிநீக்கம் செய்யப்படாது இருந்திருந்தால், 65 வயது நிரம்பும் வரை, அடுத்த 11 ஆண்டுகள், அவர் பிரதம நீதியரசராக பதவி வகித்து இருப்பார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் தனது மாணவியாக இருந்த ஷிராணி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில், உச்ச நீதிமன்ற நீதிபதியாக பதவிபெறுவதில் அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் முக்கிய பங்கு வகித்தார் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. தற்போது அவரது பதவி நீக்கத்தில் முன்னணியில் இருந்தவரில் அமைச்சர் பீரிஸும் ஒருவர். தனது மாணவி தனது எதிர்பார்ப்புகளை ஏமாற்றி விட்டார் என்ற தொனியில் அமைச்சர் பீரிஸ், ஷிராணியின் பதவி நீக்கம் குறித்த பிரச்சினையில் பத்திரிகைகளில் கருத்து தெரிவித்துள்ளார். அது போன்றே, பாராளுமன்றத்தில் முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, ஷிராணி பண்டாரநாயக்கா பிரதம நீதியரசராக பதவி வகித்தபோது அவர் குறித்து பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்து, அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியது. ஆனால், அத்தகைய குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு முன்வைத்து, அவரை பதவியிறக்கம் செய்யக்கோரி பாராளுமன்றத்தை அணுகியபோது, ஐக்கிய தேசியக் கட்சி தனது நிலையை மாற்றிக் கொண்டது. ஆனால், அந்தக்கட்சியின் எதிர்ப்பு, பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் முறை குறித்தே ஒழித்து அந்த குற்றச்சாட்டுகளில்சாராம்சம் இல்லை என்று இன்று வரை கூறவில்லை.

அந்த விதத்தில், பிரதம நீதியரசருக்கு எதிராக அரசு நடவடிக்கை எடுக்க முடிவு செய்ததன் காரணமே, அரசியல் ரீதியாக ஐக்கிய தேசியக் கட்சி தங்களை முந்திவிடக் கூடாது என்ற எண்ணமே என்று கூடக் கருதப்



பட்டது. ஆனால், இரு தரப்பும் பதவி யிறக்கப் பிரச்சினையில் எதிரணிக ளில் இருந்தாலும், அவர்கள் இருவருமே ஒன்றாகவே செயல்பட் டனர் என்று ஜே.வி.பி போன்ற கட்சி களில் உள்ள சில தலைவர்கள் தற் போது குற்றம் சாட்டியுள்ளனர். இது போன்ற குற்றச்சாட்டை, முன்னாள் இராணுவத் தளபதியும், பின்னாள் ஜனாதிபதி வேட்பாளருமான சரத் பொன்சேகாவும் தொடர்ந்து முன் வைத்து வந்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிராக பாரா ளுமன்றத்தில் குற்றப்பத்திரிகை வாசி த்த அரசு தரப்பு, மன்றத்தின் வெளி யே, அவர் சில எதிர்க்கட்சிகள் மற் றும் அந்நிய சக்திகளுடன் சேர்ந்து, நாட்டில் ''ஆட்சி மாற்றம்'' ஏற்படுவ தற்கு சதி செய்தார் என்பது போன்ற குற்றச்சாட்டுகளை பரவ விட்டுள் ளது. அதிரடியாக இராணுவத் தலை மைத் தளபதி பதவியை இராஜிநாமா செய்துவிட்டு, கடந்த 2010-ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்தவிற்கு எதிராக பொன்சேகா போட்டியிட்ட வேளையிலும், ஆளும் தரப்பு இத்த கைய குற்றச்சாட்டுகளை முன்வைத் தது. அப்போது, கொழும்பில் பதவி யில் இருந்த பல மேலை நாட்டு இராஜதந்திரிகளின் பேச்சும் செயல் பாடும் அந்த குற்றச்சாட்டுகளுக்கு வலுவூட்டுவதாகவே இருந்தது.

இந்தப் பின்னணியில், ஷிராணி பண்டாரநாயக்கா, தன்னுடன் இணை ந்து புதிய அரசியல் கட்சி தொடங்கி, தற்போதைய ஆட்சியாளர்களை பத வியிறக்கம் செய்யவேண்டும் என்று பொன்சேகா கூறிவருவது, எதிர்ம றையான கருத்துகளையும் எண்ணங் களையும் உருவாக்கும். எதிர்வரும் மாதங்களில், பிரதம நீதியரசராக பத வியிறக்கத்திற்கு எதிராக அந்நிய நாடுகள், சர்வதேச அளவில் முயற்சி களை முன்னெடுத்தால், அவற்றை அரசு தரப்பு தனது தற்போதைய குற் றச்சாட்டுகளுக்கான ஆதாரமாகவே கொண்டு, உள்நாட்டில் பிரசாரம் செய்யும். ''போர்க் குற்றங்கள்'' குறித்து ஜெனீவாவில் சர்வதேச சமூ கம் எதிர்வரும் மார்ச் மாதத்தில் மீண்

டும் கேள்வி எழுப்பினால், அதனையும் அரசு தரப்பு, பிரதம நீதியரசராக பதவியிறக்க பிரச்சினையுடன் இணைத்து உள்நாட்டில் பிரசாரம் செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

### சட்டப் பிரச்சினைகள்

எது எப்படியோ, ஷிராணி பண்டாரநாயக்கா தற்போது இலங்கையின் பிரதம நீதியரசர் அல்ல என்பதும், அவரது இடத்தை மொஹான் பீரிஸ் நிரப்பி விட்டார் என்பதும் உண்மை. என்றாலும், தானே தொடர்ந்து பிரதம நீதியரசர் என்ற வகையில், ஷிராணி பேசி வருகிறார். ஆனால், அது எந்த வித நடைமுறைச் சிக்கல்களையும் ஏற்படுத்தி விடவில்லை. தற்போதைய சூழ்நிலையில், மொஹான் பீரிஸின் நியமனம் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்று நாட்டின் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தால் மட்டுமே அந்தப் பதவியில் மீண்டும் ஷிராணி உட்காரும் வாய்ப்பு உருவாகும்.

தற்போதைய நிலைவரப்படி, ஷிராணி பண்டாரநாயக்காவை பாராளுமன்ற நிலையியற் குழு விசாரித்த வழிமுறை சட்டப்படி செல்லாது என்று உச்ச நீதிமன்றத்தை மேற்கோள் காட்டி, மேல்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. அந்த தீர்ப்பின்படி, நீதிபதிகளை பதவியிறக்கம் செய்வதற்கு என்று பாராளுமன்றம் தனியாக ஒரு சட்டம் இயற்றினால் மட்டுமே இது போன்ற விசாரணைகளை மேற்கொள்ள முடியும் என்று நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது. இந்த முறையை எதிர்வரும் காலங்களில் கடைப்பிடிக்கும் என்று அரசு கூறியது.

ஷிராணி பண்டாரநாயக்காவிற்கு எதிரான வழக்கைப் பொறுத்தவரையில், அரசு தரப்பு தற்போது செயல்பாட்டில் உள்ள பாராளுமன்ற சட்டதிட்டங்களுக்கு உட்பட்டே தான் நடப்பதாகவும், அதனால் தனது முடிவு அரசியல் சட்டத்திற்கு எதிரானதல்ல என்ற விதத்தில் விளக்கம் அளித்து வந்துள்ளது. அதேசமயம், இலங்கை உட்பட்ட தெற்காசிய நாடுகள் அனைத்தும் பின்பற்றி வரும் ஜனநாயக மரபுகளின்படி, அரசு அல்லது பாராளுமன்றத்தின் அனைத்துச் செயல்பாடுகள் குறித்தும் முடிந்த கருத்துக் கூறும் அதிகாரம் நீதித்துறை வசமே உள்ளது. இந்தப் பின்னணியில், இதுவே தற்போதைய பிரச்சினையில் சர்வதேச சமூகத்தின் கருத்தும் கூட.

இந்த நிலைப்பாட்டில் மாற்றம்வரும் வரை, நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்கா விடயத்தில், எப்போது பாராளுமன்றக் குழுவின் வழிமுறை ஏற்கத்தக்கதல்ல என்று நீதிமன்றங்கள் தீர்ப்பு அளித்து விட்டதோ, அப்போதே அரசின் நிலைப்பாடு ஆட்டம் கண்டது. என்றாலும், பதவியிறக்கத்திற்குப் பின்னால் அரங்கேறியுள்ள முடிவுகள் காரணமாக புதியதொரு பிரதம நீதியரசர் பதவியேற்றுள்ளார்.

நாளை ஷிராணி பண்டாரநாயக்காவை பதவியிறக்கம் செய்தது செல்லாது என்றே உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் சூழ்நிலை உருவாகுமேயானால், அது தற்போதைய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் என்று கூட வாதிடும் வாய்ப்பு உள்ளது. அதாவது, ஒரு தவறை சரிசெய்யும் முகமாக புதியதொரு தவறு செய்யப்படும் வாய்ப்பு உள்ளது. அது போன்றே, பிரதம நீதியரசராக மொஹான் பீரிஸ் தீர்ப்பு வழங்கிய வழக்குகள், உருவாக்கிய பதவிகள், தேர்ந்தெடுத்த புதிய நீதிபதிகள் என்று பல முடிவுகளிலும் பிரச்சினைகள் உருவாகலாம். அது குறித்தும் அரசும் பிறரும் கவலைப்பட வேண்டும்.

எது எப்படியோ, இலங்கையில் பிரதம நீதியரசர் சார்ந்த பிரச்சினை, அதிபர் முஷாரஃப் பாகிஸ்தானில் பதவி வகித்தபோது கட்டாயமாக பதவி விலக்கப்பட்ட அந்த நாட்டின் பிரதம நீதியரசர் இஃப்திகார் சௌத்ரியின் வழக்கையே நினைவிற்கு கொண்டு வருகிறது. அந்த நாட்டில் முஷாரஃப் பதவி விலக வேண்டியதைத் தொடர்ந்து சௌத்ரி மீண்டும் பிரதம நீதியரசராக பதவியேற்றார். ஆனால், கடந்த கால கசப்பான அனுபவத்தின் தாக்கத்தாலோ என்னவோ, இன்று ஊழல் வழக்குகளை வெளிக் கொண்டு வருகிறேன் என்ற பெயரில் அங்கு அரசியல் சட்டரீதியான குழப்பங்களுக்கு தெரிந்தோ, தெரியாமலோ அடிகோலி வருகிறார். அவற்றின் தாக்கமும் முடிவும், பாகிஸ்தானை கடந்த காலத்திற்கு பின்னோக்கி இழுத்துச் செல்லும் சூழ்நிலையை உருவாக்கி வருகிறது. அத்தகைய நிலைமை இலங்கையில் ஏற்படாது என்று மட்டுமே தற்போது எண்ணத் தோன்றுகிறது.

### சர்வதேசத்தின் கரிசனம்

அரசு சொல்வது போல், பிரதம நீதியரசர் பதவி நீக்கம் குறித்த பிரச்சினையின் பின்னால் அந்நியநாடுகள் இருக்கிறதோ, இல்லையோ, அது குறித்து அமெரிக்கா, கனடா போன்ற நாடுகள் கவலை தெரிவித்து வந்துள்ளன. அரசு மற்றும் பாராளுமன்றத்தின் முடிவு, நீதித் துறையின் சுதந்திரமான செயல்பாட்டிற்கும், அரசியல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு எதிராக அமைந்துள்ளதாக அந்த நாடுகள் கருத்து மற்றும் கவலை தெரிவித்துள்ளன.

இதன் வெளிப்பாடாக, அமெரிக்கா போன்ற நாடுகள் இந்தப் பிரச்சினையை, மார்ச் மாதம் ஜெனீவாவில் கூட உள்ள ஐ. நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் விவாதப் பொருளாக மாற்ற வாய்ப்புண்டு. அடுத்த கட்டத்திற்குச் சென்று, இந்தப் பிரச்சினையை ஜெனீவாவில் வாக்கெடுப்பிற்கான தகுந்த தலைப்பாக்க அந்த நாடுகள் முற்படுமா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். மாறாக, தற்போதைய சூழலில், கடந்த மார்ச் மாதம் "போர்க் குற்றங்கள்" என்ற அடிப்படையில், இலங்கை அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவது குறித்த கவுன்சிலின் தீர்மானத்தை

*(38ஆம் பக்கம் பார்க்க)*

உள்நாட்டு அரசியல்



கலாநிதி தீபிகா உடுகம

# ஜனநாயக மயமாக்கல் நல்லிணக்கத்திற்கான முன்நிபந்தனை

ஒரு சமூகம் என்ற வகையில் போருக்கு பின்னரான காலகட்டத்தில் நல்லிணக்கம் பற்றிய தத்துவத்தை அல்லது அடிப்படை கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்வதற்கு நாம் போதியளவு முயற்சித்தோமா? கடந்த காலத்தில் மீண்டும் மீண்டும் நடைமுறைப்படுத்திய ஒழுங்கற்ற அரசியல் பகட்டு ஆரவாரங்களே எம்மத்தியில் தொடர்கின்றன

*"கொடுங்கோன்மைக்கும், அடக்குமுறைக்கும், எதிரான இறுதி வழியாக, கிளர்ச்சி செய்வதற்கு மனிதன் கட்டாயப்படுத்தப் படாமலிருக்க வேண்டுமானால், சட்டத்தின் ஆட்சியால் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்..."*

மனித உரிமைகளைப் பற்றிய சர்வதேசப் பிரகடனத்தின் முன்னுரையில் குறிப்பிடப்படும் இச் சரளமான எழிலார்ந்த கூற்று சர்வவியாபக உண்மையை எடுத்துக்கூறுகின்றது. இலங்கையில் போருக்குப் பின்னரான விவாதத்தில் இடம்பெறும் கருத்துகளை ஆராயும் போது மேற்படி கூற்றில் பொதிந்துள்ள மெய்யறிவு தொடர்ச்சியாக எனது மனதில் நிழலாடுகிறது.

மனித ஆத்மா விரும்பியவாறு சஞ்சரிக்கும் போது கிளர்ச்சிகளில் ஈடுபடத் தூண்டுவதற்கான சந்தர்ப்பம் மிகக் குறைவு. ஆனால், கொடுங்கோன்மையும், அடக்குமுறையும் மனித ஆத்மாவை சிறைப்படுத்தும் போது கிளர்ச்சிகள் தவிர்க்க முடியாதவையாகும். மக்களின் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் முறைமை மூலம் மனித கௌரவமும், சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படும் போதே விமோசனம் உண்டு. அரச ஆட்சி, மனித இயல்பு மீது கூருணர்வு கொள்ளாமல், அடக்குமுறையைக் கையாண்டால், அமைதியின்மையையும், குழப்பத்தையும் தவிர வேறு ஒன்றையும் நாம் எதிர்பார்க்க முடியாது. இக்கட்டான இச் சந்தர்ப்பத்தில், அரசையும், ஆட்சி அமைப்பு முறையையும் ஜனநாயகமயப்படுத்தாவிட்டால் எமது சகல நடவடிக்கைகளும் பயனற்றதாகிவிடும் என வேறு எப்போதையையும் விட நான் இன்று நம்புகின்றேன். இக்குறிக்கோளை அடைவதற்கு அவசியமான அரசியல் பின்னணியை அல்லது சட்டகத்தை உருவாக்கும் வரை போருக்குப் பின்னரான எதிர்பார்ப்புப் பட்டியலைக் கோருவது அர்த்தமற்ற முயற்சியாகும்.

## நல்லிணக்கம் பற்றிய தேசியக் கருத்தியல் இல்லாமை

போருக்குப் பின்னரான இலங்கையில் நாம் அடைய வேண்டியவை யாவை என்பன பற்றி பல கருத்துகள் உண்டு. பல்வேறு இனக் குழுமங்களுக்கிடையே நல்லிணக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பொது இணக்கப்பாடு உண்டு எனத் தோன்றுகின்றது. நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமாயின், நாம் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தி மீது கவனஞ் செலுத்த வேண்டுமென ஒரு சிலர்

எண்ணுகின்றனர். அரசியல் தீர்வு மீது எமது கவனத்தைச் செலுத்த வேண்டுமென இன்னுஞ் சிலர் யோசிக்கின்றனர். போர்க்குற்றங்களைப் பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரணை செய்து உண்மையைக் கண்டறிவதே மிக முக்கியமானதாகும் என மற்றுமோர் சாரார் எண்ணுகின்றனர். மேற்படி சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பது இன்னும் ஒரு சாராரின் கருத்தாகும். நல்லிணக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்ட அளவீடுகளைத் தயாரித்துக் கொள்வதற்கான குறிகாட்டிகளும், தளநியமங்களும் உண்டு. இவற்றுள் அதிகமானவை அதிகாரத்தைப் பகிர்தல், இடம்பெயர்ந்தோரை மீளக் குடியேற்றல், இராணுவமயமாக்கலை நீக்குதல், சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட அளவீடுகளைத் தயாரித்துக் கொள்வதற்கான குறிகாட்டிகளும், தளநியமங்களும் உண்டு. இவற்றுள் அதிகமானவை அதிகாரத்தைப்பகிர்தல்,இடம்பெயர்ந்தோரை மீளக்குடியேற்றல், இராணுவமயமாக்கலை நீக்குதல், சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட காணிக் கொள்கை, நிறுவனங்களை அரசியல் மயப்படுத்தாமை என்பவற்றை நாம் திட்டவட்டமாக அமுல்படுத்த முடியும்.

ஆனால், ஒரு சமூகம் என்ற வகையில் போருக்குப் பின்னரான கால கட்டத்தில் நல்லிணக்கம் பற்றிய தத்துவத்தை அல்லது அடிப்படைக் கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்ள நாம் போதியளவு முயற்சித்தோமா? அவ்வாறான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை என்றே நான் நினைக்கின்றேன். சிக்கல்கள் நிறைந்த கடந்த காலத்தில் மீண்டும் மீண்டும் நடைமுறைப்படுத்திய ஒழுங்கற்ற அரசியல் பகட்டார வாரங்களே எம்மத்தியில் தொடர்ந்தும் இருந்து வருகின்றன. எமது இன்றைய முயற்சிகளுக்கு வழிகாட்டும் தேசியக் கொள்கையைப் பொறுத்த வரையில் ஒரு வெற்றிடமே நிலவுகின்றது. நல்லிணக்கத்திற்கான ஒரு இலக்கை அடையாளம் கண்டாலும் அடிப்படை நல்லிணக்கக் கொள்கையோ தத்துவமோ இன்றி பொருள் பொதிந்த வகையில் அவற்றை வெற்றிகொள்ள முடியுமா என்ற வினாவை முன்வைக்க விரும்புகின்றேன். கருத்தியல் வெற்றிடத்தில் நல்லிணக்கம் நிலவ முடியுமா? நல்லிணக்கம் பற்றிய ஆத்மீக ரீதியான பரந்துபட்ட சிந்தனையின்றி வெறுமனே சிகிச்சை மூலமும் இயந்திரரீதியான செயற்பாடு மூலமும் நல்லிணக்கத்தை அடைய முடியுமா? அடைய முடியாது என்றே நான் எண்ணுகின்றேன்.

அண்மையில் அவுஸ்திரேலியாவில் தற்போது புலம்பெயர்ந்து வாழும் ஒரு சில இலங்கையர்கள் 'Reconciliation' என்றால் உண்மையில் என்ன? என்று என்னிடம் வினவினார்கள். "நல்லிணக்கம் அல்லது மீளிணக்கம்" என்றால் மீண்டும் நட்புப்பூணுதல் என்று அகராதி பொருள் கூறுகின்றது. ஆனால், அதனை எவ்வாறு அளப்பது என்ற வினா எழுகின்றது? சமத்துவத்தின் அடிப்படையில் சமூக அங்கத்துவம் பற்றி நேர்மையான உணர்வை ஏற்படுத்துவதே அதன் பொருள் என நான் நேரடியாகப் பிரதிபலித்தேன். வாழ்க்கையின் பௌதீகத் துறையை விட உளவியல் துறையை அணுகும் செயற்பாடே நல்லிணக்கம் எனப்படும். எழுத்துமூல உடன்படிக்கைகள், கைலாகு கொடுத்தல் போன்ற கட்புல நடவடிக்கைகளுக்கு மாத்திரம் அது வரையறுக்கப்படவில்லை. நல்லிணக்கம் குறிப்பாக பன்மைத்துவமும், பிரிவுகளும் கொண்ட சமூகச் சூழலை விடயப் பொருளாகக் கொண்டது. கூட்டாகவும், தனிநபர்களாகவும் குறிப்பிட்டதொரு சமூகத்தில் உள்ளார்ந்தரீதியில் உருவாகும் சம அங்கத்துவம் பற்றிய உணர்வை இது வெளிப்படுத்தும் செயற்பாடாகும். தாம் சமமானவர்கள் என ஏனையோரால் நேர்மையாக ஏற்றுக்கொள்ளப்படும் உணர்வாகும். தெளிவாக அடையாளம் காணப்பட்ட திட்டவட்டமான கொள்கையுடனான நல்லிணக்கம் பற்றிய கருத்தியல் எமது பிரதான முன்னுரிமையாக அமைய வேண்டும் என்ற நம்பிக்கையிலேயே இக்கூற்றை நான் வெளியிடுகின்றேன்.

### தென்னாபிரிக்காவின் உபுன்ட்டு (ubuntu) எண்ணக்கருவின் நிலைமாற்றச் சக்தி

உலகம் பூராவும் பல இலட்சக் கணக்கானோர் தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட "புரட்சி" மீது அறிவார்ந்த ரீதியிலும், உணர்வுரீதியிலும் கவரப்பட்டனர். தென்னாபிரிக்க அரசு கறுப்பு இனத்திற்கு எதிரான இன ஒதுக்கல் நிலையிலிருந்து நிலைமாறி சகல இனக் குழுமங்களுக்கு இடையே தாம் சமத்துவமாக இணைக்கப்பட்டிருக்கின்றோம் என்ற உணர்வு நிலை நாட்டப்பட்டது. இந்த உணர்வை ஏற்படுத்தியமை ஒரு நிலை மாற்ற அனுபவமாகும். தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட நிலைமாற்றம் எமக்குப் பெருமகிழ்ச்சியையும், பேரார்வத்தையும் ஏற்படுத்தியதோடு, முன்னுதாரணமாகவும் அமைந்தது. குறிப்பாக ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் (ANC) இதனை நடைமுறைப்படுத்திக் காட்டியது. நெகிழ்ச்சியற்ற அரசியல் முறையின் ஊடாக மாத்திரம் இது அமுலாக்கப்படவில்லை. அவர்களுடைய அரசியலில் சக்திவாய்ந்த ஜனநாயக முறைமையும், மனித நேயம் கொண்ட இதயம் கவரும் குணாம்ச வடிவத்தையும் காண முடிந்தது. நிலைமாற்றம் பற்றிய பேச்சுவார்த்தைகள் முற்றுப்பெற்று, நெல்சன் மண்டேலா புதிய பன்மைத்துவ தேசியக் குடியரசின் ஜனாதிபதியாகச் சத்தியப்பிரமாணம் செய்த பின்னர், ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் அங்கத்தவர்கள் கறுப்பர்களின் அதிகாரத்தைக் காட்சிப்படுத்த, வெற்றிக்களிப்பினால் மயங்கி, வெற்றிக் களியாட்ட விழா நடத்தவில்லை. பிரசித்தி பெற்ற தென்னாபிரிக்கச் சட்டத்தரணியும் ஆபிரிக்கத் தேசியக் காங்கிரஸின் சட்ட ஆலோசகருமான அல்பி சக்ஸ் (Albie Sachs) ஒரு சமயம் ஹர்வர்ட் சட்டக் கல்லூரியில்

மிகப் பிரபல்யமான பிரகடனத்தைச் செய்தார். "தென்னாபிரிக்காவின் நிலைமாற்றம், ஓர் அற்புதமென சிலர் அறிமுகப்படுத்தும் போது எனக்குக் கோபம் வரும். அது ஓர் அற்புதம் அல்ல. அது பல்வேறு முயற்சிகளின் பெறுபேறாகும். குறிப்பாக நிலை மாற்றத்தின் பின்னர், எல்லோரையும் உள்வாங்கிய சமூகத்தைக் கட்டி யெழுப்பவே நாம் செயற்பட வேண் டியுள்ளது. இது கறுப்பர்களுக்கு மாத்திரம் உரித்தான தேசம் அல்ல. பல்வேறு நிறங்களைக் கொண்ட வானவில் தேசம் என்பதை ஆபிரிக்க தேசியக் காங்கிரஸின் இளம் அங்கத் தவர்களுக்கு உணர்த்த கடும் முயற்சி களை மேற்கொள்ள வேண்டியுள் ளது."

இத் தொலைநோக்கு 1993இல் பிரகடனப்படுத்தப்பட்ட தென்னாபிரி க்க இடைக்கால அரசியலமைப்பின் முக்கிய வாசகத்தில் உள்ளடக்கப்பட் டுள்ளது:

போராட்டங்கள், மோதல்கள், சொற்களால் விளக்க முடியாத அவலங்கள், மற்றும் அநீதி ஊடாக வெளிப்படுத்தப்பட்டு, மிகக் கூர்மை யாகப் பிளவுபட்ட கடந்த கால சமூகம், மனித உரிமைகள், ஜன நாயகம், சமாதான சகவாழ்வு என்ப வற்றை ஏற்றுக்கொண்டு செயற்படும், நிறம், இனம், பால் என்பவற்றைக் கருத்திற்கொள்ளாது ஒட்டு மொத்த தென்னாபிரிக்கப் பிரஜைகளுக்கு அபிவிருத்திக்கான சம சந்தர்ப்பங் களை வழங்கும் எதிர்காலச் சமூகத் துக்கிடையே வரலாற்றுரீதியான பாலம் இந்த அரசியலமைப்பு மூலம் உருவாக்கப்படும். தேசிய ஐக்கிய த்தை அடைவதற்கும், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கும் சகல தென்னா பிரிக்க பிரஜைகளின் சமூக நலனைக் காப்பதும், தென்னாபிரிக்க மக்க ளிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதும், சமூகத்தை மீளக் கட்டியெழுப்புவதும், அவசியமாகும்.

மனித உரிமைகள் மிக மோசமான முறையில் மீறப்பட்ட கொடூரமான மோதல்கள் மூலம் மனிதநேயக் கொள்கைகளைப் பொருட்படுத்தா

**யுத்த வெற்றி வெறி வியாபித்ததன் காரணமாக நல்லிணக்கத்தை மீள கட்டியெழுப்புவது தொடர்பில் தொலை நோக்குடனான தத்துவ உருவாக்கத் திற்கு சந்தர்ப்பம் இருக்கவில்லை**

மல் கைவிடுவதற்கும் காரணமான கடந்த கால பேதங்களையும், போரா ட்டங்களையும் கடந்து தென்னாபிரி க்க மக்களின் பாதுகாப்பை உத்தர வாதம் செய்யும் வகையில் இவ்வரசி யலமைப்பு உருவாகியுள்ளது.

பழிவாங்குவதற்குப் பதிலாக புரிந் துணர்வை ஏற்படுத்தும் அவசியத் தையும், பழிவாங்குதல் அல்ல மறுசீர மைப்புகளுக்கான அவசியத்தையும் அடிப்படையாகக் கொண்டு இவ்விட யம் தொடர்பாக பிரவேசிக்க வேண்டும். தண்டனை அளித்தலு க்குப் பதிலாக மன்னிப்பளித்தலே (ubuntu) அவசியப்படுகிறது.

இவ்வரசியலமைப்பு மூலமும், அர்ப்பணிப்பு மூலமும் தென்னாபிரி க்க மக்கள் எமது தேசத்தின் புதிய தொரு அத்தியாயத்தை ஆரம்பிக்கின் றனர்.

மேற்படி அரசியலமைப்பில் "தேசிய ஐக்கியமும் நல்லிணக்கமும்" என்னும் தலைப்பின் கீழ் குறிப் பிடப்படும் பகுதி, தென்னாபிரிக்கா வின் நல்லிணக்கம் பற்றிய தத்துவ த்தை விளக்குகிறது. (ubuntu) என்ற எண்ணக்கரு மனிதநேயத்தையும், சக வாழ்வையும் ஆபிரிக்க மரபுரீதியான கருத்தியலையும் உள்ளடக்குகின்றது. குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணத் தின் மூலம் இதனை வரையறுக்க முடியாவிட்டாலும், தற்போது அரசி யலமைப்பை வரைவிலக்கணஞ் செய்வதற்குப் பயன்படுத்தும் சட்ட ரீதியான தத்துவமாக இது மாறியுள் ளது. உபுன்ட்டு (ubuntu) எண்ணக் கருவின் உள்ளடக்கம் மற்றும் விழு மியங்கள் உட்பட ஏனைய காரணி களோடு மரண தண்டனை எதிரான தாகும் எனவும், அரசியலமைப்பிற்கு முரணானது எனவும் தென்னாபிரிக்க

அரசியலமைப்பு நீதியரசர் லண்கா (Langa), 1995இல் வழங்கிய மக் வன்யானெ (Makwanyane) தீர்ப்பு, தீர்க்கமான மாற்றத்திற்கு வழிகாட் டியது. தெளிவாக வரைவிலக்கணம் கூற முடியாவிட்டாலும், அடையா ளம் என்ற வகையில் அர்த்தம் பொதி ந்துள்ள இவ்வெண்ணக்கரு நல்லிண க்கத்தின் உள்ளடக்கத்தையும், முக்கி யத்தையும் சிருஷ்டித்தது.

### போருக்குப் பின்னரான இலங்கை: காவியப்பண்பில்லா அரசியல்

2009 மே மாத இறுதியில் ஆயுதப் படையினருக்கும், விடுதலைப் புலி களுக்கும் இடையிலான போர் முடி வடைந்தது. ஆனால், தென்னாபிரிக் காவில் ஏற்பட்டது போன்ற அரசியல் நிலைமாற்றம் இங்கு ஏற்படவில்லை. இலங்கையின் ஆயுதப்படையினர் விடுதலைப் புலிகளின் போரிடும் ஆற்றலை அழித்தொழித்து தோல்வி யுறச் செய்தனர். நிலைமாற்றத்திற்குப் பதிலாக திட்டவட்டமான வெற்றி யைப் படையினர் பெற்றனர். வெற்றி யடைந்தோரும், தோல்வியுற்றோரும் உருவாகினர். மத்திய அரசின் அதி காரம் மேலும் உறுதிப்படுத்தப்பட் டது. நல்லிணக்கம் மீளக்கட்டியெழுப் பப்படுதல் என்பன பற்றிய தொலை நோக்குடனான தத்துவம் தொடர் பான எதிர்பார்ப்புகள் இருந்தன. ஆனால், யுத்த வெற்றியோடு வியா பித்த வெற்றியின் வெறி காரணமாக, அத்தகைய தொலைநோக்கிற்கான சந்தர்ப்பம் இருக்கவில்லை. நிறுவன மயமான அரசியல் சிந்தனைக்கு இவ்வெறியின் எல்லைகளை மீறிச் செல்லக்கூடிய ஆற்றல் இருக்க வில்லை.இங்குதன்னுணர்ச்சிப்பாடல்

ரீதியான அரசியல் கிடையாது. இதய த்தில் காவியப்பண்பு கிடையாது.

எங்கு தவறிழைத்தோம்? விடுத லைப் புலிகளைப் போன்ற ஒரு பயங்கரக்குழு குறுகிய காலத்திற் கேனும் எவ்வாறு அங்கீகாரம் பெற் றது? சுமார் முப்பது ஆண்டுகளாக இலங்கையர் ஏன் ஒருவரை ஒருவர் கொலை செய்து கொண்டனர்? ஒரு தேசத்தின் துன்பியல் சம்பவமாக அடையாளம் காணப்பட்ட போரின் இறுதியில் வெற்றியாளர் ஒருவர் இருக்க முடியுமா? பல பரம்பரை களைச் சார்ந்த அரசியல் தலைமை கள், இத்தகைய மோதலுக்குக் கார ணமான காரணிகளுக்கு அரசியல் நடவடிக்கைகள் மூலம் ஏன் தீர்வு காண முடியவில்லை? இவற்றிற்கு விடைகாண அர்ப்பணித்த சந்தர்ப்பம் இருக்கவில்லை. இம் மோதலினால் உயிரிழந்த மக்களை நினைவுகூர்ந்து மௌன அஞ்சலி செலுத்தியதும் கிடையாது. அல்லது துக்க தினம் கொண்டாடுவதற்கான சோக தினம் பிரகடனப்படுத்தப்படவும் இல்லை. நல்லவர்களும் கெட்டவர்களும், வெற்றியாளர்களும் தோல்வியடை ந்தோரும், தேசப்பற்றாளர்களும் தேசத்துரோகிகளும் இருந்தனர். இத் தகைய இரு துருவங்கள் கொண்ட அரசியல் பின்னணியின் கீழ் நல்லி ணக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்ட அரசியலமைப்பிற்கோ அல்லது நன்கு சிந்தித்து தயாரிக்கப் பட்ட நல்லிணக்கத் தத்துவத்திற்கோ இடமிருக்கவில்லை.

இவற்றிற்குப் பதிலாக, 1978இன் அரசியலமைப்பிற்கு மேற்கொள்ளப் பட்ட, 18ஆவது அரசியலமைப்பிற் கான திருத்தமே எமக்கு உண்டு. போரின் வெற்றி காரணமாக வெற்றி வாகை சூடியோர் கூட இத்திருத்தத் தின் உள்ளடக்கத்தைப்போல அதனை நிறைவேற்றுவதற்கு அனு சரித்த வழிமுறையைப் பற்றியும் விர க்தி அடைந்துள்ளனர். நாம் எல் லோரும் அறிந்த வகையில் மேற்படி திருத்தத்தின் மூலம் ஏற்கனவே பலம் பெற்ற நிறைவேற்று ஜனாதிபதிப் பதவிக்கு அதிகாரம் மையப்படுத்தப் பட்டது. ஜனாதிபதிப் பதவியை வகிப்பதற்கான தடைகள் வரைய றைகள் நீக்கப்பட்டன. நீதித் துறை யினதும் அரசினதும் செயற்பாட்டிற்கு அவசியமான மட்டுப்பாடுகள் மற் றும் அதிகார சமநிலையைக் காப்ப தற்கு அவசியமான சுயாதீன நடவடி க்கைகளுக்கு அவசியமான தேர்தல் கள் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் ஆணைக் குழு, அரச சேவைகள் ஆணைக்குழு உட்பட ஏனைய நிறுவனங்களின் உயர் பதவிகளுக்கான நியமனங் களைச் செய்கையில் ஜனாதிபதிக்கு அத்துமீறிய அதிகாரங்கள் உண்டு. அதேசமயம் சில நிறுவனங்களின் அதிகாரம் கரைக்கப்பட்டது. ஆய்வி ற்கோ கலந்துரையாடலுக்கோ இட மளிக்காமல் அவசர சட்ட மூலமாக பதினெட்டாவது அரசியலமைப்பிற் கான திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இக்கட்டத்தில் ஆச் சரியமான முறையில் அரசுக்குத் தேவையான 2/3 அதிகாரத்தைப் பெற்று எதிர்க்கட்சி உறுப்பினர்களில் ஒரு கோஷ்டியினரும் அரசுடன் இணைந்தது. இச் சம்பவங்கள் பெரும்பான்மையினரைப் போலவே சிறுபான்மையினருக்கும் உரித்தான விழிப்புடன் இருக்கும் பிரஜைகள் மீது ஒரு வெறுப்பை ஏற்படுத்தியது. இந்நிலைமை காரணமாக சர்வதேச சமூகத்திலும் கவலை குடிகொண்டது. மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வர லாற்றில் கிடைத்த சந்தர்ப்பம் நெகிழ்ச்சியற்ற அரசியல் காரணமாக இவ்வாறாக வீணாகியது.

> 18ஆவது திருத்தம் ஜனநாயக சந்தர்ப்பங் களை உறுதிப்படுத்தி பல்வேறு கண்ணோட்டங்களுக்கு மதிப்பளித்து அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளத் தயா ரான ஒரு நிறுவனமல்ல இலங்கை அரசு என்ற செய்தியை சிறுபான்மை இனக்குழு மங்களுக்கு தெளிவாகக் கூறி வைத்தது

அரசியலமைப்பிற்கான 18ஆவது திருத்தம் இந்நாட்டு மக்களுக்கு, குறிப்பாக சிறுபான்மைக் குழுமங் களுக்கு எடுத்துக் கூறும் செய்தி யாது? இலங்கை அரசானது ஜன நாயக சந்தர்ப்பங்களை உறுதிப்படுத் தாதபல்வேறுகண்ணோட்டங்களுக்கு மதிப்பளித்து அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளத் தயாரான ஒரு நிறுவனம் அல்ல என்ற செய்தியை தெளிவாக எடுத்துக்கூறியது. அரசு முன்னரை விட பெரிய ஒற்றைப்பாளக்கல் (Monolith) தன்மை கொண்டது என்பதை எடுத்துக் கூறியது. மனித நேயம், நம்பிக்கையை உறுதி செய் யும் ஜனநாயக பாதுகாப்பரண்கள், குணப்படுத்தல் பற்றிய செய்திக ளுக்கு என்ன நடந்தது? பதினெட்டா வது திருத்தம் இத்தகைய அனைத்து இலட்சியங்களுக்கும் எதிரானது.

### எமக்குரிய உபுண்ட்டுவிற்கான (ubuntu) நேரம் இன்னும் வரவில்லை

சாதகமான நிலைமாற்றத்திற்கு அர சியல் கருத்தியல் கோட்பாடு இன்றி யமையாதது. சாதாரணமாக, ஏற் கனவே வரையப்பட்டுள்ள, பொது மக்களின் ஆய்வுக்கு விட வேண்டி யதும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக் கப்படுவதற்கும் தயாரிக்கப்பட்டுள் ளதுமான, அடிப்படை உரிமைகள் பற்றிய புதிய சாசனத்தை அரசாங்கம் ஏன் அலட்சியப்படுத்தியுள்ளது என் பது எனக்கு ஆச்சரியமாகவே உள் ளது. போரின் பின்னர் உருவாகிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த அர சாங்கம் எதுவித ஆர்வத்தையும் காட்

டவில்லை. அத்தகைய ஆர்வம் இருந்திருந்தால், மேற்படி சாசனத்தின் வரைவை மக்களின் விவாதத்திற்கு விட்டு விட்டுப் பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றி இருப்பின், அது உற்சாகமான அர்த்தபுஷ்டியுள்ள சமிக்ஞையாக இருந்திருக்கும். பல்வேறு மக்கள் பிரிவினரின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு இது பாரிய நடவடிக்கையாக அமைந்திருக்கும்.

உரிமைகள் பற்றிய சாசனம் 2005 மகிந்த சிந்தனை நிகழ்ச்சித் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது அன்றைய அரசியலமைப்பு மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் பதவியை வகித்த டியு. குணசேகர அவர்களால் நியமிக்கப்பட்ட உப குழுவினால் வரையப்பட்டது. அது சர்வதேச மனித உரிமைகளைப் பற்றிய குறிகாட்டிகளை அனுசரித்தும், தென்னாபிரிக்கா - இந்தியா போன்ற நாடுகளின் அரசியலமைப்புகளின் சாதகமான குணாம்சங்களைப் பயன்படுத்தியும் தயாரிக்கப்பட்ட விபரமான ஓர் ஆவணமாகும்.

இவ்வரைபு சிவில் அரசியல் உரிமைகள் மாத்திரமல்லாது சமூக கலாசார உரிமைகளையும், தனியாட்களினதும் குழுக்களினதும் உரிமைகளையும் உத்தரவாதப்படுத்தியது. அரசியலமைப்பிற்கான திருத்தத்தின் மூலம் மிகப் பரந்துபட்ட முறையில் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு அரசு முயற்சி செய்திருந்தால் அது நல்லிணக்கம் தொடர்பான உண்மையான செய்தியாக அமைந்திருக்கும். ஆனால், அதற்குப் பதிலாக பாதுகாப்பின்மை, அவநம்பிக்கை என்பவற்றை உருவாக்கும் வழிமுறையையே அரசாங்கம் தெரிவு செய்தது. உரிமைகள் பற்றிய இச் சாசனம் யாராவது ஒரு அதிகாரியின் கிடப்பில் தூசி படிந்த வண்ணம் இருக்கும்.

பதினெட்டாவது அரசியலமைப்புத் திருத்தம் தனிமைப்படும் ஒரு முட்டாள்தனமான நடவடிக்கையாகும். அதே சமயம், போரின் பின்னர் ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் இல்லாதொழிப்பதற்கான ஒரு முன்னோடி நடவடிக்கையுமாகும். பயங்கரவாதத்தை ஓங்கச் செய்யும் குற்றச் செயல்களுக்கு விலக்களிக்கும் சூழலில் சுயாதீன நிறுவனங்களைப் பலவீனப்படுத்தும் ஜனாதிபதிப்பதவிக்கு அத்துமீறிய அதிகாரங்களை வழங்கும் நெகிழாத்தன்மை கொண்ட 18ஆவது அரசியலமைப்புத் திட்டம் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. எந்த ஒரு சட்டத்தையும் மதிக்காத வகையில் வெள்ளை வேன் ஆட்கடத்தல்கள் (White Vanning என்றழைக்கப்படும்) காணாமற் போகச் செய்தல்கள் தொடர்கின்றன. ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் தாக்கப்படுகின்றன. எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் தாக்கப்படுகின்றனர். எதிர்க்கட்சிக் கூட்டங்கள் தாக்குதல்களுக்கு இலக்காக்கப்படுகின்றன. இருளடைந்த போர்ச் சூழலில் மாத்திரம் இடம்பெறக்கூடிய சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதால் பொதுமக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் பாதுகாப்பின்மையும் பயங்கரமும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. போர் ஓய்வடைந்தமை தற்கொலைக்குண்டுதாரிகளின் பயங்கரத் தாக்குதல்கள் ஓய்ந்தமை சாதாரண மக்களின் மனதில் ஓர் நிம்மதியை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மை. பெரும்பாலானோர் விடுதலைப்புலிகளின் வீழ்ச்சியையிட்டு மகிழ்ச்சியடைகின்றனர். ஆனால் போர் ஓய்ந்ததும் ஜனநாயகமும் சட்டத்தின் ஆட்சியும் நீடித்து நிலைக்கும் என்ற பொதுமக்களின் எதிர்பார்ப்பு நிலைநாட்டப்படவில்லை. நாம் எதிர்பார்த்த அமைதி - சமாதானம் நிலைநாட்டப்படவில்லை.

> போர் ஓய்ந்ததும் ஜனநாயகமும் சட்டத்தின் ஆட்சியும் நீடித்து நிலைக்கும் என்ற பொது மக்களின் எதிர்பார்ப்பு நிலைநாட்டப்படவில்லை. நாம் எதிர்பார்த்த அமைதி, சமாதானம் நிலை நாட்டப்படவில்லை

எவ்வாறாயினும் அரச நிறுவனங்கள் மீது மக்கள் இன்று நம்பிக்கை இழந்துள்ளனர். யார் மீது நம்பிக்கை இழந்துள்ளனர். யார் மீது நம்பிக்கை வைப்பது? என்ற கேள்வியையே மக்கள் தொடர்ந்தும் கேட்டு வருகின்றனர். அரசாங்கத்தின் அரசியல் வாதிகளின் ஆசீர்வாதமும் அனுசரணையும் இல்லாதோருக்கும் சமூகத்தில் மிகச் சிறிய இடமே உள்ளது. ஈவிரக்கமற்ற சூழ்நிலை கொண்டு வரும் பயங்கரத்துடன் இணைந்த அரசியல் மயப்படுத்தல் காரணமாக அரச நிறுவனங்கள் பலவீனமடைதல் ஆரோக்கியமான அரச ஆட்சியைப் பிரதிபலிக்கவில்லை.

உதாரணமாக சட்டமா அதிபர் திணைக்களத்தை ஜனாதிபதியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர முயற்சிக்கும் போது, சிவில் சமூக அமைப்புகள் அதற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்த போதிலும், அம்முயற்சி வெற்றியளிக்கவில்லை. அதன் பின்னர் மேற்படித் திணைக்களம் நடைமுறைப்படுத்திய பக்கச் சார்பான நடவடிக்கைகள் பொது மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. நம்பகத்தன்மை பற்றிய பாரிய சந்தேகங்களையும் கிளப்பியுள்ளது. இது நீதி நிர்வாக நிறுவனங்களுக்கு மாத்திரமன்றி, சட்டத்தை செயற்படுத்தும் நிறுவனங்களுக்கும் ஒழுங்கமைப்பு பொறிமுறைகளுக்கும் பொருத்தமுடையது.

## ஜனநாயகமற்ற நல்லிணக்கம்?

பொறுமையின்மை, சட்டத்திலிருந்து விலக்களித்தல், அரசியல் ஒழுங்

கின்மை, கோலோச்சும் இத்தகைய சுற்றாடலில் நல்லிணக்கத்தை எதிர் பார்க்க முடியுமா? அனைவருக்கும் சமமான கவனிப்பு என்ற கொள்கை யின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சட்ட த்தின் ஆட்சி தொடர்ச்சியாக தாக்கப் படும் போது சமமானவர்களின் கூட்டு என்ற உணர்வைப் பரப்ப முடியுமா? தமக்கு பாதுகாப்பு வழங்க வேண்டிய அரச நிறுவனங் கள் உண்டு என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் ஏற்படாதபோது, குறிப்பா கத் தாம் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக உணரும்போது சட்டம் நியாயமாகச் செயற்படாதபோது அவர்கள் எதிர்காலத்தை நம்பிக்கை யோடு நோக்க முடியுமா?

உதாரணமாக முன்னாள் சிறுவர் போராளிகள் உட்பட விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வளிக் கும் நிகழ்ச்சித்திட்டம் பற்றி பல்வேறு கோணங்களிலிருந்தும் பாராட்டுகள் கிடைத்தாலும், இந்நிகழ்ச்சித் திட்ட ங்கள் முற்றுப்பெற்ற பின்னர் அவர் கள் எதிர்நோக்கும் பிரச்சினைக்குரிய விடயங்கள் பற்றி பல சிக்கல்கள் உண்டு. அவர்களுடைய வீடுகளுக் குத் திரும்பிய பின்னர் பொருளா தாரப் பிரச்சினைகளை மாத்திரம் எதிர்நோக்கவில்லை. சமூக ரீதியில் நடுத்தெருவில் கைவிடப்படும் நிலை க்கு மாத்திரம் அவர்கள் மட்டுப்படுத் தப்படவில்லை. அதிக எண்ணிக்கை யிலான ஆயுதப் படையினரின் பிரச ன்னம், தண்டனைகளிலிருந்து விலக் களிக்கும் கலாசாரம், வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் தாக்கம் செலுத்தும் மத்திய நிர்வாகத்தின் தடைகள் என்பன புனர்வாழ்வு பெற்று திரும்பியோரின் வாழ்க்கை யில் பல்வேறு இடையூறுகளை ஏற் படுத்துகின்றன. இவற்றின் பெறு பேறாக தனிநபர் பாதுகாப்பின்மை, அரசியல் பாதுகாப்பின்மை, அரசி யல் பிரதிநிதித்துவமின்மை, எதிர் கால வாழ்க்கை பற்றிய நம்பிக்கையை இழக்கச் செய்கின்றன.

இத்தகைய வெறித்தனமான யதார் த்தம் காரணமாகவே, அரசும் நிர் வாகமும் ஜனநாயகமயப்படுத்தப்பட வேண்டும் என்ற குறிக்கோளில் நான் உறுதியாக நிற்கின்றேன். ஜனநாயக மும் சட்டத்தின் ஆட்சியும் இன்றி பொருள் பொதிந்த நல்லிணக்கம் ஏற்பட முடியாது. உடைந்துபோன, முறிந்துபோன பகுதிகளை ஒன்று சேர்க்கும் பசையாக (Glue) அமை வது ஜனநாயகத்தின் முக்கிய அம்ச ங்கள் இன்றி சட்டத்தின் ஆட்சி இன்றி நல்லிணக்கம் பற்றிய தத்துவத்தைக் கட்டியெழுப்ப முடியாது. பொருளா தார அபிவிருத்தி முக்கியமானது. ஆனால், இவ்வழிமுறையின் மூலம் மாத்திரம் நல்லிணக்கத்தை அடைய முடியாது. அபிவிருத்தி மக்களின் உள்ளங்களில் பதிய வேண்டுமாயின் முதலில் சகல இனக்குழுமங்களும் தீர்மானங்களை மேற்கொள்ளும் நட வடிக்கைகளிலும் அர்த்தபுஷ்டியுடன் பங்கு பற்றும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். இதன் காரணமாகவே ஜனாதிபதி மண்டேலா போன்றவர் கள் சட்டத்தின் ஆட்சியின் ஊடாக சம உரிமைகளை உத்தரவாதம் செய் யும் சக்திவாய்ந்த ஜனநாயக அரசிய லமைப்புச் சட்டகத்தை முதலில் நிலைநாட்டினர்.

ஆனால், இலங்கையைப் பொறுத்த வரையில் நாட்டில் தற்போது ஜன நாயகம் அனேகமாக பாதுகாக்கப்பட் டுள்ளது என்ற ஊகத்துடன் போரு க்குப் பின்னரான நீதி நியாயம். (பரந்துபட்ட அர்த்தத்தில்) பற்றி தேசிய ரீதியாகவும் சர்வதேச மட்டத் திலும் வேண்டுகோள்கள் முன்வைக் கப்படுகின்றன. எனது பார்வையில் முக்கிய கோரிக்கைகளை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்:

அ. உள்நாட்டில் இடம் பெயர்ந் தோரை மீளக்குடியேற்றலும் அவர்களின் பாதுகாப்பும்

ஆ. இடம்பெற்றிருப்பதாகக் கூறப் படும் போர்க் குற்றங்கள் பற்றி விசாரணைகளை மேற்கொள் ளல்.

இ. சிறுபான்மையினரின் மனக் குறைகளை நிறைவேற்றக்கூடிய அரசியல் தீர்வு நோக்கி நடவடி க்கை மேற்கொள்ளல்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை யில் இக் குறிக்கோளை அர்த்த புஷ்டி யுடன் வெற்றி கொள்வதற்கான வாய்ப்பில்லை. ஜனநாயகத்தை மீளக் கட்டியெழுப்புவது பிரதான கோரிக் கையாகக் கருதப்படவில்லை. உதார ணமாக, அரசியலமைப்பிற்கான 18ஆவது திருத்தத்தின் மூலம் சுயாதீன நிறுவனங்களுக்கு ஏற்படும் மட்டுப்பாடுகள் பற்றியோ அல்லது ஊடக நிறுவனங்களோ ஊடகவிய லாளர்களோ தாக்கப்படும் போது அவை சமாந்தரமான அல்லது அவ் வளவு முக்கியத்துவம் வாய்ந்த கோரிக்கைகளாகக் கருதப்பட வில்லை. வேறு வார்த்தைகளில் கூறு வதாயின் கோரிக்கைகளை நிறை வேற்றிக் கொள்வதற்கு ஜனநாயகம் அத்தியாவசியமானது என்பதை முன் நிபந்தனையாக முன்வைத்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட வில்லை.

எனினும், அவசியமான ஜனநாயக

**அரசாங்க அரசியல்வாதிகளின் ஆசிர்வாத மும் அனுசரணையும் இல்லாதோருக்கு சமூகத்தில் மிகச்சிறிய இடமே உள்ளது. ஈவிரக்கமற்ற சூழ்நிலை கொண்டு வரும் பயங்கரத்துடன் இணைந்த அரசியல் மயப்படுத்தல் காரணமாக அரச நிறுவனங் கள் பலவீனமடைகின்ற போக்கு ஆரோக்கி யமான ஆட்சியை பிரதிபலிக்கவில்லை**

நிறுவனங்களும் உத்தரவாதமும் இன்றி, ஏற்கனவே முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றங்கள் விசாரிக்கப்பட்டு உள்நாட்டில் தண்டனை விதிக்கப்படுமா? பலவீனப்படுத்தப்பட்டுள்ள நிறுவனங்களையும் நடைமுறையையும் இக்குறிக்கோளுக்காக மாத்திரம் திடீரென உயிர்ப்பித்து செயற்திறனை ஊக்குவிக்க முடியுமா? இங்கு "உடலாகம"ஜனாதிபதி விசாரணைக் குழுவிற்கு ஏற்பட்ட கதி ஞாபகத்திற்கு வருகின்றது. அரசியல் பித்தலாட்டங்கள் திடீரென மறையுமா? அதே சமயம் மற்றையவரைச் சகிக்காத வன்முறை கோலோச்சும் சூழமைவில் சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான அரசியல் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கான அர்த்தபுஷ்டியுள்ள கலந்துரையாடலை ஆரம்பிக்க முடியுமா? இக்கோரிக்கைகளில் ஜனநாயக நிறுவனங்கள் மற்றும் வழிமுறைகள் பற்றிய தேவைகள் உள்ளடங்கியுள்ளன என சிலவேளைகளில் கூறலாம். ஆனால், ஜனநாயகமே பிரதான கோரிக்கையாக அமைய வேண்டும். என்ற கோரிக்கையை இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன். போருக்குப் பின்னரான குறிக்கோள்களை அர்த்த புஷ்டியுள்ள வகையில் நிறைவேற்றிக் கொள்ளும் அரங்காக இக்கோரிக்கை அமைவதினாலேயே நான் மேற் கூறியவாறு வலியுறுத்துகின்றேன். ஜனநாயகத்தின் மீது அர்ப்பணிப்பு இன்றி நாம் நல்லிணக்கத்திற்கான பாதையை அமைக்க முடியுமா?

ஒரு பிரஜை என்ற வகையில் எனது அவசரக் கோரிக்கைகள் பின்வருமாறு

அரசியலமைப்பிற்கான 18ஆவது திருத்தத்தை வாபஸ் பெறுக. அரசியலமைப்புப் பேரவையை மேம்படுத்தி மீண்டும் அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துக. நீதித்துறையின் சுயாதீனத்தையும் மேற்கூறிய சகல ஆணைக்குழுக்கள், நிறுவனங்கள் என்பவற்றின் சுயாதீனத்தை நிலைநாட்டுக. அரச நிறுவனங்களுக்கான அரசியல் தலையீடுகளையும் அவற்றை அரசியல் மயப்படுத்தலையும் நிறுத்துக. இனத்துவம், பால்நிலை, மொழி, மதம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பாரபட்சங்களைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்க. சட்டங்களை உரிய வழிமுறையில் விசேட சட்டங்களைத் தவிர்ந்த சாதாரணச் சட்டங்கள் செயற்படுத்த இடமளியுங்கள். தவறான நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசியல் சகபாடிகளுக்கான பாதுகாப்பை நிறுத்துக. "பல ஆயிரம் பூக்கள் மலரட்டும்" என்ற கொள்கையைப் பின்பற்றுக. சித்திரவதை, கடத்திச் செல்லுதல், காணாமற்போகச் செய்தல் என்பவற்றை வேரோடு களையுங்கள். நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்களுக்கு இடமளிக்கவும். பொது மக்களின் கருத்துகளை மதிக்கவும்.

மேற்கூறியவை பாரிய கோரிக்கைகள் என்பது உண்மை. எனினும் இந்த அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல், தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் சரியான திசையில் பயணிக்க முடியுமா என்ற பாரிய சந்தேகம் என்னுள் உறுத்துகின்றது. எனது அபிப்பிராயப்படி போருக்குப் பின்னர் ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங்கள் மீது நேர்மையான அர்ப்பணிப்புடன் நடந்து கொண்டிருந்தால், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தை (A/HRC/19/2 of April, 2012) தவிர்த்து இருக்கலாம்.

## போருக்குப் பின்னரான சிவில் சமூகச் செயற்பாடும் "உள்ளூர்த்தீர்வுகளின்" நடைமுறையும்

சிவில் சமூக அமைப்புகளும் சர்வதேசச் சமூகமும் சமர்ப்பித்த, போருக்குப் பின்னரான கோரிக்கைகளையொட்டிய அரசின் எதிர்மொழி, நழுவல் போக்கைக் கொண்டதாகவோ தாக்குதல் போக்கைக் கொண்டதாகவோ அமைந்தது. அடிக்கடி தேசிய இறையாண்மை, தேசிய சர்வதேசச் சதி முயற்சிகள் பற்றி அரசியல் பகட்டாரவாரங்களாகவே அமைந்தன. ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வாக "உள்நாட்டுத் தீர்வுகள்" பற்றி அடிக்கடி பேசப்பட்டது. எனவே, எமது கோரிக்கைகளை முன்வைக்கும் போது இயன்ற விபரங்களுடன் அரசு தன்னார்வத்துடன் (Voluntary) வழங்கியுள்ள உறுதிமொழிகளை ஆய்வு செய்வதும் குறிப்பிடுவதும் முக்கியமாகும். சில வேளைகளில் இவை எமது கோரிக்கைக்கு சிறந்த துலங்கல் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் உண்டு.

முதலில், போர் ஓய்ந்ததும் 2009 மே 27ஆம் திகதி நடைபெற்ற விசேட அமர்வில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையை (A/HRC/S-11/2) நாம் கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். ஜெனீவா நகரில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் நிரந்தரப் பிரதிநிதியின் அலுவலகம் இப் பிரேரணையின் நிறைவேற்றம் இலங்கைக்கான வெற்றியாகப் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தியது (இப் பிரேரணை ஐரோப்பிய ஒன்றியம் விமர்சன ரீதியாக முன்வைத்த பிரேரணையை தோல்வியுறச் செய்தது) அது மாத்திரமல்ல இப்பிரேரணையைத் தயாரித்த முறையைப்பற்றி சூசகமாகத் தெரிவித்திருந்தது. அவ்வாறாயின் இப் பிரேரணையைப்பற்றிய உள்ளடக்கத்தையிட்டு அரசாங்கம் எவருக்கும் குற்றம் சுமத்த முடியாது. வேறு முக்கிய விடயங்களோடு இப்பிரேரணையில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டன.

- சகல மனித உரிமைகளை அபிவிருத்தி செய்வதற்கும், பாதுகாப்பதற்கும் மனித உரிமைகளை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கும் இலங்கை அரசு தன்னை அர்ப்பணித்துள்ளமையை ஏற்றுக் கொள்வதோடு, மனித உரிமைகளைப்பற்றிய பொறுப்புகளையும் சர்வதேச மனித உரிமைகள்சட்டம் பற்றிய அளவுகோல்களையும் குறி காட்டிகளையும் தொடர்ந்து அனுசரிப்பதற்கும் அது தைரிய மூட்டுகின்றது.
- சகல இன மதக் குழுமங்களின்

உரிமைகள் பற்றிய பரஸ்பரம் இணக்கப்பாட்டையும் கௌரவத்தையும் அடிப்படையாகக் கொண்டு, அரசியல் தீர்வையும் நிலைபேறான சமாதானத்தையும் அபிவிருத்தியையும் நோக்கிய வழிமுறையின் மேம்பாட்டிற்காக சகல தரப்பினரிடையே பரந்துபட்ட கலந்துரையாடலை ஆரம்பிப்பதற்கான இலங்கை ஆட்சியாளர்களின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்டு அவற்றை அமுலாக்குவதற்கு பங்கு பற்றும் அனைத்துத் தரப்பினர்களையும் அழைக்கின்றோம்.

மனித உரிமைகளைக் காத்து மேம்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக அர்ப்பணிக்கும் உறுதிமொழியை அளித்திருந்ததோடு, சகல தரப்பினருடன் உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதாகவும், மேற்படி பிரேரணை மூலம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு இலங்கை உறுதிமொழி கூறி இருந்தது. இரண்டாவதாக, 2008இல் கால இடைவெளியிலான மீளாய்வு (universal Periodic Review –UPR) செய்யப்படும் சந்தர்ப்பத்தில் சர்வதேச சமூகத்திற்கு தன்னார்வத்துடன் வழங்கிய உறுதிமொழிகள் மிக முக்கியமானவை.

கால இடைவெளியிலான மீளாய்வு (UPR) வழிமுறை என்பது ஐ.நா. சபையின் சகல உறுப்பு நாடுகளினதும் மனித உரிமைகள் பற்றிய நிலைமைகளை ஆராய்வதற்காக, மனித உரிமைகள் பேரவையின் அனுசரணையுடன் ஐ.நா.பொதுச் சபை அங்கீகரித்து, புதிதாக அறிமுகப்படுத்திய பொறி முறையாகும். இது மோதல்கள் இன்றி ஐ.நா. அங்கத்துவ நாடுகள் தாமாகவே மேற்கொள்ளும் சிருஷ்டிகரமான பிரவேசத்தை அனுசரிக்கும் வழிமுறையாகும்.

இலங்கை தானாகவே தன்னார்வத்துடன் பின்வரும் (UPR) உறுதிமொழிகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ளது.

- தேசிய மனித உரிமை ஆணைக் குழு உள்ளிட்ட தேசிய மனித உரிமைப் பொறிமுறைகளை பலப்படுத்தலையும் பயனுறுதியான தொழிற்பாட்டினையும் வசதிபடுத்தும் அரசியல் அமைப்புச்சபையினை மீளமைப்பதற்கு உதவும் பொருட்டு இலங்கை அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும்.
- சாட்சி மற்றும் பாதிக்கப்பட்டவர் பாதுகாப்புச் சட்டமூலம் ஒன்று விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். சட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிறுவனங்களை ஸ்தாபித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- நாட்டில் உள்ள மனித உரிமை பாதுகாப்புச் சட்டகத்தைப் பலப்படுத்தி இலங்கையின் யாப்பு ரீதியான மனித உரிமை உத்தரவாதங்களை தனது சர்வதேச கடப்பாடுகளுக்கு அமைவாக கொண்டு வரும் மனித உரிமை தொடர்பான அரசியலமைப்பு சாசனம் ஒன்றினை வரைவது தொடர்பான பணிகளை இலங்கை ஆரம்பித்திருக்கிறது. இச் செயன்முறை சிவில் சமூகத்துடன் கலந்தாலோசனைகளில் ஈடுபடுதலையும் உள்ளடக்கும். இந்த நகல் சாசனமும் கலந்தாலோசனைச் செயன் முறையும் மனித உரிமை தொடர்பான ஒரு தேசிய கலந்துரையாடலை உருவாக்கும்.
- தனது மக்களது சிவில், அரசியல் உரிமைகள் மற்றும் பொருளாதார சமூக கலாசார உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதற்கான தனது பற்றுறுதியின் ஒரு பகுதியாக பெண்கள், சிறுவர்கள், முதியோர்கள் வேறுபட்ட ஆற்றலையுடையவர்கள் மற்றும் சமூகத்திலுள்ள பாதிப்பிற்குள்ளாகும் ஏனைய குழுக்களுக்குமான உள்நாட்டு விழுமியங்களையும் சமூகப் பாதுகாப்பினையும் மனித உரிமைகள், நல்லாட்சிக்கான மதிப்பினையும் மேம்படுத்தும் பரந்த சட்டகத்தினுள் தனது அபிவிருத்தி உபாயத்தை இலங்கை தொடர்ந்து இணைத்துக் கொள்ளும்.
- 13ஆவது அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தைப் பயனுறுதியுடன் அமுல்படுத்துவதற்கு இலங்கை நடவடிக்கைகளை எடுக்கும்
- இலங்கை கிழக்கு மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்தியை நோக்கி தொடர்ந்து செயற்படும். இவ்வாறு அபிவிருத்தி செய்வது வாழ்க்கைத்தரத்தையும் சமூக பொருளாதார கலாசார உரிமைகளை அடைந்து கொள்வதையும் மேம்படுத்துவதோடு, ஜனநாயக நிறுவனங்களது பலப்படுத்தலுக்கும் சுமுகமான செயற்பாட்டுக்கும் உதவும். மிகச் சிறந்த நடைமுறைகள், நல்லாட்சி, அரசியல் பன்மைத்துவம் ஆகியவற்றை பரப்பி ஆழமாக மனதில் பதியச் செய்தலை மேம்படுத்துவதோடு, முன்னாள் போராளிகளது குறிப்பாக சிறுவர், இளம் வயதினரது புனர்வாழ்விற்கும் சமூகத்துடனான மீளிணைவிற்கும் நடவடிக்கைகளை எடுக்கும்.
- அரச கரும மொழிக் கொள்கையினை அமுலாக்குதலும் இரு மொழிப்பயன்பாட்டினை குறிப்பாக பாதுகாப்புப்படைகளிலும்

> ஜனநாயக இடைவெளியை சிருஷ்டிப்பதற்கு நாம் தயாராக வேண்டும். போருக்குப் பின்னரான நிகழ்ச்சி நிரலை நாம் தயாரித்துக்கொள்ள வேண்டும். நல்லிணக்கத்திற்கான கோட்பாடுகளை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும். அரசியல் தீர்வுக்கான அத்திவாரத்தை இடுவதற்கு நாம் பங்களிப்பு செய்ய வேண்டும்

பொலிஸிலும் அரச சேவையினு ள்ளும் தொடர்ந்து ஊக்குவித்தல் (பார்க்கவும்: Report of the working group on Sri Lanka on Universal Periodic Review, A/HRC/8/46மேற் குறிப்பிட்டுள்ள பந்திகளின் இலக்கங்கள் மூல அறிக்கையில் காணப்படும் வகையில் அமைந்துள்ளன.)

மூன்றாவதாக, ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்ற பாடங்களும் நல்லிணக்கமும் பற்றிய ஆணைக் குழுவின் (LLRC) பரிந்துரைகளின் அமுலாக்கம் பற்றியும் அறிக்கையிட வேண்டும். எதிர்பாராத வகையில் LLRC ஆணைக்குழு நல்லிணக்க த்தை ஏற்படுத்திக் கொள்வதற்கான சிறந்த பரிந்துரைகளை முன்வைத்துள் ளது. நல்லிணக்கத்திற்கும் ஜனநாயக ஆட்சிக்கும் இடையே சக்திவாய்ந்த உறவுநிலை நிலவுகிறது என்ற முடிவிற்கு அமையவே மேற்படி பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள் ளன. அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாறு "அர்த்தபுஷ்டியுள்ள வகையில் அதிகாரப்பகிர்வின்மையுடன் ஒன்றி ணைந்த நல்லாட்சி இன்மை காரண மாக சட்டத்தின் ஆட்சி மீது அக்கறை காட்டாமையால் இனங்களுக்கி டையே திருப்தியின்மை ஏற்பட்டுள் ளமை ஒரு காரணமாக அமைந்துள் ளது. (8.185)

LLRC ஆணைக்குழு பரிந்துரை களில் பின்வரும் விடயங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளன:

- பன்மைத்துவ இனங்களின் மனக் குறைகளுக்கு அரசியல் தீர்வுகள்
- சட்டத்தின் ஆட்சியையும் மனித உரிமைகளையும் பாதுகாத்தல்
- நல்லாட்சியும் அரசியல் பண்பாடும்
- நிறுவன ரீதியான மறு சீரமைப்பு கள்
- மொழிக்கொள்கை
- சம சந்தர்ப்பங்கள்
- மதச் சுதந்திரம்
- நல்லிணக்கத்துக்கு துணையான கலாசார நடவடிக்கைகள்
- தேசிய கீதம்

(LLRC அறிக்கை பந்திகள் 288-325 2011)

ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் எவற்றை நடைமுறைப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது என எமக்குத் தெளிவாகத் தெரியவில்லை. கொடு த்த அழுத்தங்களுக்கும் கோரிக்கை களுக்கும் விடையாக "உள்நாட்டுத் தீர்வாகவே" LLRC ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. நீண்டகாலக் கண்ணோட்டத்தில் நோக்கும்போது இலங்கை அரசு தனது உள்நாட்டு தீர்வுகளை தானாகவே புறக்கணிக்க முடியாது.

## பிரஜாவுரிமையை மீளக் கண்டுபிடிப்பதன் அவசியம்

ஒரு மாற்றத்திற்காக அரசுக்கு அழு த்தத்தைக் கொடுப்பதற்காக அரசினது பரிந்துரைகளையும் உறுதிமொழி களையும் மேற்கூறிய மூலங்களிலி ருந்து (Sources) கண்டு பிடிக்க முடியும். நாம் இவ்வழுத்தத்தைக் கொடுக்க எவ்வளவு முயலுகின் றோம் என்பதே பிரச்சினையாகும்.

போருக்குப் பின்னர் இலங்கைக்கு கிடைத்திருக்கும் இச் சந்தர்ப்பத்தை தவறவிடுவோமாயின் அது அரசி னதும் அரசின் ஜனநாயக விரோத இயல்பு மாத்திரம் காரணமாக அமையமாட்டாது. பிரஜைகள் என்ற வகையில் நாமும் யாருக்குப் பின் னைய நிகழ்ச்சி நிரலைத் தயார்செய்ய இயலாமையே அதற்குக் காரணமாக அமையும் என்பதே எனது நேர்மை யான கருத்தாகும். அண்டைய நாடு களைப்போலவே ஒட்டுமொத்தமாக இலங்கையின் பொதுமக்களின் நிகழ் ச்சி நிரல் கட்டாயமாக பலம்வாய்ந்த அரசியல் தலைவர்களின் விருப்பத் தின் பேரிலேயே இடம் பெறுகிறது. ஏற்கனவே தயாரிக்கப்பட்ட எந்த வொரு நிகழ்ச்சி நிரலுக்கும் பிரஜை கள் என்ற வகையில் நாம் திருப்தி அடைகின்றோம். ஒரு சில அரசசார் பற்ற அமைப்புகள் மூலம் முன்வைக் கப்படும் எதிர்ப்புகளைத் தவிர பொது மக்களின் பிரச்சினைகளை யிட்டு செயற்படும் உறுதியான சமூகத்தலைமீடுகளை நாம் காண முடியாதுள்ளது.


இலங்கையின் பலவீனமான பிரஜைகள், நிலைபேறான சமூக இயக்கங்கள் என்பன இல்லாமை ஆட்சியாளர்களை நல்லாட்சி நோக்கி வழிப்படுத்த முடியாத பிரதான இரண்டு காரணிகளாகும். பல ஆண்டுகளாக, குறிப்பாக 1980களின் ஆரம்பத்தில், தொழிற்சங்க இயக்கம் ஒடுக்கப்பட்ட பின்னர், நாம் வெறு மனே வாக்காளர்களாகச் செயற்படுவ தில் திருப்தி கண்டுள்ளோம். பூரணத் துவம் கொண்ட பிரஜா உரிமையை யும் உண்மையான பெறுமானங் களையும் மீளக் கண்டுபிடிப்பதற்காக, எமது மனங்களைத் தயாரித்துக் கொள்வதற்கான காலம் வந்துவிட் டது. பகிரங்க விவாதங்கள் மூலமும் ஸ்தாபன சக்தியின் மூலமும் எமது நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துக் கொள் வோம். அரசை ஜனநாயகமயமாக்கு மாறும், எமது ஜனநாயக இடை வெளியை சிருஷ்டிப்பதற்கும் நாம் தற்போது தயாராக வேண்டும். போரு க்குப் பின்னைய நிகழ்ச்சி நிரலை நாம் தயாரித்துக் கொள்ள வேண்டும். நல்லிணக்கத்திற்கான தத்துவக் கோட்பாடுகளை நாம் சிருஷ்டித்துக் கொள்ள வேண்டும். உண்மையை நிலைநாட்டுவதற்கு நாம் செயற்பட வேண்டும். அரசியல் தீர்வுக்கான அத்திவாரத்தையிட நாம் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

எம்மை நாமே பலப்படுத்த வேண் டிய தேவை முன் எப்போதையையும் விட, போருக்குப் பின்னரான இன் றைய கட்டத்தில் மிகவும் இன்றிய மையாதது. இதனை நாம் நிறை வேற்றத் தவறினால் எம்மிடமிருந்து தவறிப்போன நீண்ட பட்டியலில் மற்றுமோர் தோல்வி கண்ட சந்தர்ப் பத்தை (விசேடமான தனிநிலையா னது) சேர்ப்பதற்கு எமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். ●

**(கலாநிதி தீபிகா உடுகம பேராதனை பல்கலைக்கழக சட்டத் திணைக்களத்தின் தலைவர்)**

# இனவாதத்தை நியாயப்படுத்தும் போக்குகள்

இந்தியா சுதந்திரம் அடைந்து 65 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் மதச்சார்பின்மை வேர்விடவில்லை. விட்டுக்கொடுக்கும் உணர்வும் வறண்டு கொண்டு போகிறது. பிரிட்டிஷார் வெளியேறும் போது அவர்களின் உருவாக்கமான இனவாதமும் வெளியேறிவிடும் என்று நான் நம்பியது தவறாகப் போய்விட்டது




முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் பாரதிய ஜனதா கட்சி முன்னரைப் போன்று தற்போது ஆரவாரமாகப் பேசுவதில்லை. இதற்கு இரு காரணங்கள் இருக்க முடியும் என்பது எனது அபிப்பிராயம்.

ஒன்று, 2014 முற்பகுதியில் நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு தோன்றக்கூடிய அரசியல் சூழ்நிலைகளை அந்தக்கட்சி மனதிற்கொண்டு செயற்படுகிறது. லோக்சபாவில் பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்கு மதச்சார்பற்ற கட்சிகளின் ஆதரவு தேவை. முஸ்லிம்களுக்கு விரோதமான எந்தவிதமான கருத்துமே பாரதிய ஜனதாவுக்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்தி, சாத்தியமான கூட்டணியொன்றை அமைப்பதற்கான வாய்ப்புகளை ஆபத்திற்குள்ளாக்கிவிடக்கூடும்.

இரண்டாவது, இடதுசாரிக்கட்சிகளைக்கூட, “மென்மையான இந்துத்வா'' பீடித்திருக்கும் ஒரு நேரத்தில், தாராளவாதப் போக்குடையதாக தன்னைக் காட்டிக்கொள்வது தனக்கு வசதியானதாக இருக்கும் என்று பாரதிய ஜனதா உணருகிறது. கடந்த சில வருடங்களில் காங்கிரஸ் கட்சி அதன் மதச்சார்பற்ற நம்பகத்தன்மையைப் படிப்படியாக இழந்து கொண்டுவருகிறது போலத் தோன்றுகிறது. இதற்கு ஏதாவது சான்று தேவையென்றால், அண்மையில் நடைபெற்ற குஜராத் மாநில சட்டசபைத் தேர்தல் தாராளமாக சான்றுகளைத் தருகிறது. பாரதிய ஜனதா தொண்டர்களினதும் பொலிசாரினதும் உதவியுடன் 2002ஆம் ஆண்டு முதலமைச்சர் நரேந்திர மோடி குஜராத்தில் செய்ய முயற்சித்த இனச்சுத்திகரிப்பு குறித்து காங்கிரஸ் கட்சி தேர்தல் பிரசாரங்களின் போது ஒரு போதுமே பேசவில்லை. முஸ்லிம்கள் கொல்லப்பட்டது குறித்து பேசினால் இந்துக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்படும் ஆபத்து ஏற்படக் கூடுமென்று காங்கிரஸ் நினைத்தது.

இது நிச்சயமாக இந்தியா பூராகவுமுள்ள முஸ்லிம்களுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும். ஏனென்றால், பெரும்பாலும் முஸ்லிம்கள் காங்கிரஸுக்கு ஆதரவாகவே வாக்களித்து வருகிறார்கள். இருந்தும் கூட, முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை, எந்தக் கட்சி தாராள மனப்பான்மை கொண்டது என்பதைக் கண்டுபிடிப்பது மிகப்பெரிய திரிசங்கு நிலையாகும். முஸ்லிம் சமூகத்தை தீவிரவாத மயப்படுத்துவது இதற்கு மறுமொழி அல்ல என்றாலும் அதுவே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தீவிரவாத மயப்படுத்துகின்ற போக்கு முஸ்லிம் சமூகத்தை மாசுபடுத்துவதற்கான சான்றாகப் பயன்படுத்தப்படும். இந்து பயங்கரவாதத்துக்கு எதிராக முஸ்லிம் பயங்கரவாதம் மேவிவிடமுடியாது. இதற்கு எண்ணிக்கையே காரணம்.

சில முஸ்லிம்கள் விரக்தியின் விளைவாக வன்முறையை நாடுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். ஆனால், இந்தப் பாதையையே முஸ்லிம் சமூகம் தெரிந்தெடுக்க வேண்டுமென்று பஜ்ரக்தள், ராம் சேனா, விஸ்வ இந்துபரிஷத் போன்ற இந்து தீவிரவாத அமைப்புகள் விரும்புகின்றன. மலேதான், அஜ்மீர், ஹைதராபாத் ஆகிய நகரங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளில் இருந்து இந்த அமைப்புகளின் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. ஆரம்பத்தில் பொலிஸார் வழமையாகச் செய்வதைப் போன்று, முஸ்லிம்கள் மீதே இக்குண்டு வெடிப்புகள் தொடர்பில் சந்தேகிக்கப்பட்டது. முஸ்லிம் இளை

ஞர்கள் கைது செய்யப்பட்டனர். ஹைதராபாத்தில் முஸ்லிம் இளைஞர்கள் படுமோசமாகத் தாக்கப்பட்டார்கள். ஆனால், விரிவாக விசாரணைகள் இந்துக்களின் கைவரிசையே குண்டுவெடிப்புகள் என்பதை நிரூபித் தன.

முஸ்லிம் இளைஞர்கள் அடாத்தாகக் கைது செய்யப்படுவது அந்தச் சமூகத்துக்கு பெரும் கவலையைக் கொடுக்கிறது. இதற்குப் பரிகாரம் தேடி இந்துக்கள் உட்பட தூதுக்குழுவொன்று பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தது. நடவடிக்கை எடுப்பதற்கு அவர் அளித்த உறுதிமொழி தடுப்புக்காவலில் உள்ள முஸ்லிம் இளைஞர்களின் எண்ணிக்கையைக் குறைத்தது. ஆனால், முஸ்லிம் சமூகத் துக்கு அதனால் திருப்தி ஏற்பட்டதாக இல்லை. பல முஸ்லிம் இளைஞர்கள் தொடர்ந்தும் விசாரணை ஏதுமின்றி சிறையில் வாடுகிறார்கள். அவர்கள் உயர்கல்வியைத் தொடருவதற்கு அல்லது தொழில்வாய்ப்பைப் பெறுவதற்குப் பயன்படுத்தப் படக்கூடிய பல வருடங்கள் வீணாகின்றன.

இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையேயான தூரம் அதிகரிக்கின்றது என்பது எனக்கு பெருங்கவலையைத் தருகிறது. அவர்களுக்கிடையே சமூகத்தொடர்புகள் இல்லாதிருக்கின்றது. விட்டுக்கொடுத்துச் செயற்படும் மனோபாவமும் அருகிக் கொண்டு போகிறது. குஜராத் கலவரத்துக்குப் பிறகு பாரிய வன்செயல் எதுவும் இடம்பெறவில்லை என்பது ஆறுதல் தருகிறது. இந்த இனவாதத்தை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தக்கூடியதாக இருக்கிறது என்று அர்த்தப்படுத்திவிடக்கூடாது. அசாம் அதற்கு பிந்திய உதாரணம்.

அண்மையில் நான் கேரளாவுக்குச் சென்றிருந்தேன். இடதுசாரிகள் கூட மாசுபட்டுப் போயிருப்பதைக் கண்டேன். கிறிஸ்தவர்கள் தங்கள் செல்வாக்கை விரிவுபடுத்திக்கொண்டிருக்கிற ஒரே மாநிலம் இதுதான். இந்துக்களும் முஸ்லிம்களும் நல்லெண்ணத்துக்கு விரோதமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விசித்திரம் என்னவென்றால், மதமேலாதிக்க உணர்வு அதிகரிக்கும்போது நல்ல பொருளாதாரத் தத்துவம் கூட தோல்விகண்டுவருகிறது. எமது கோடிப்புறத்தில், உத்தரப் பிரதேசத் தில் நூற்றுக்கணக்கில் சிறுசிறு இனக்கலவரங்கள் இடம்பெற்றிருக்கின்றன. ஊடகங்கள் அவற்றுக்கு பிரசித்ததைக் கொடுக்கவில்லை. உண்மையில், பெரியதாக இல்லாவிட்டால், ஊடகங்கள் இனக்கலவரங்களைப் பற்றிப் பேசுவதில்லை.

23 வயது யுவதி கும்பலொன்றினால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதைக் கண்டித்து சாதிகளையும் மதங்களையும் சேர்ந்த மாணவர்கள் டில்லியில் அணிதிரண்டு ஆர்ப்பாட்டம் செய்தார்கள். கொடுங்கோன்மையை எதிர்ப்பதில் தாங்கள் ஒன்றிணைந்து நிற்பதை அவர்கள் உலகிற்கு காட்டினார்கள். மறுபுறத்தில் தவறான பாதையில் சென்றால் வன்முறைகள் வெடிக்கும் என்பதையும் டில்லி ஆர்ப்பாட்டங்கள் நிரூபித்தன.

இனவாதம் என்பது பிரிட்டிஷாரின் உருவாக்கம் என்றும் அவர்கள் வெளியேறும் போது இனவாதமும் வெளியேறிவிடுமென்று காங்கிரஸ் தலைவர்களான அப்துல் கலாம் ஆசாத், கான் அப்துல் கபார் கான் ஆகியோர் நினைத்ததைப் போன்றே நானும் நம்பினேன். ஆனால், எனது நம்பிக்கை தவறானது என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

உபகண்டப் பிரிவினைக்கு முன்னதாக நான் கண்ட பைத்தியக்காரத்தனம் மேற்பரப்புக்குச் சற்றுக்கீழாக இன்னமும் கூட இருக்கிறது. அரசியல் கட்சிகள் அவற்றுக்கு தேர்தல்களின் போது அல்லது வேறு சந்தர்ப்பங்களில் அனுகூலமானதாக அமையுமென்று காணும்போது அந்த வெறித்தனத்தை முன்னரங்கத்திற்குக் கொண்டுவருகின்றன. சுதந்திரமடைந்து 65 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் கூட, மதச்சார்பின்மை வேர்விடவில்லை. விட்டுக் கொடுக்கும் உணர்வு வரண்டு கொண்டு போகிறது.

மதச்சார்பின்மைக்கு வாய்ப்பு ஒன்றைக் கொடுக்கவேண்டுமானால், அதற்கு ஒரு வழி, மதச்சார்பின்மைக்கு ஊறு விளைவிப்பவர்களைத் தண்டிக்க வேண்டியதேயாகும். பாபர் மசூதியைத் தகர்த்தவர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை. அதே போன்றே ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் கொல்லப்பட்டமைக்காக மோடி மீதும் எந்த நடவடிக்கையும் இதுவரையில்லை. குற்றப் பொறுப்புடையவர்கள் சுதந்திரமாக நடமாடக்கூடியதாக சூழ்நிலை இருக்கிறது.

ஆனால், இதனால் முஸ்லிம்களின் மனோ நிலை எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். 1984 ஆம் ஆண்டு சீக்கியர்கள் கொல்லப்பட்டமைக்காக காங்கிரஸ் கட்சியை குற்றங்கூறுகிறது பாரதிய ஜனதா. குஜராத்தில் நடந்தவற்றைச் சுட்டிக்காட்டி பதிலுக்கு பாரதிய ஜனதாவைச் சாடுகிறது காங்கிரஸ். விவாதத்துக்குரிய விடயமென்ற வகையில் இரு நிகழ்வுகளிலும் கனதி இருக்கிறது. ஆனால், மதச்சார்பின்மையைப் பற்றி என்ன சொல்வது? இந்தியாவின் பண்பு எங்கே?


இனவாதம் நியாயப்பாட்டை பெறுகின்றமை குறித்து எனக்கு அசௌகரியமான உணர்வு இருக்கிறது. மேலும் கூடுதலானவர்கள் வெறிபிடித்தவர்களாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். பொலிஸார் அல்லது ஏனைய பாதுகாப்புப் படைகள் கூட இந்த மாசடைதலில் இருந்து தப்பவில்லை. தாராளப் போக்கு இல்லையென்றால் ஜனநாயகத்துக்கு அர்த்தமில்லை என்பதை விளங்கிக் கொள்கிறார்கள் இல்லை. அரசியல் முறைமையில் இருந்த வெறுப்புணர்வும் பக்கச்சார்பும் இல்லாதொழிக்கப்பட வேண்டும். ஜனநாயகம் தப்பிப்பிழைக்க வேண்டுமென்றால் இதைச் செய்தேயாக வேண்டும்.

***(59ஆம் பக்கம் பார்க்க)***

## எல்லையோரம் பதற்ற நிலை

# மீள முடியாத பின்னடைவில் சமாதான முயற்சிகள்








எம்.பி.வித்தியாதரன்



# அதிகரிப்பு

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் 2013 ஆம் ஆண்டு கெட்ட சகுணத்துடனே தொடங்கியிருக்கிறது. சமாதான முயற்சிகள் மீண்டும் நெருக்கடிக்குள்ளாகியிருக்கின்றன. வழமைபோன்று வேறுயாருமல்ல பாகிஸ்தான் இராணுவமே குற்றவாளி. இரு நாடுகளுக்குமிடையே காஷ்மீரைப் பிரிக்கும் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டில் இம்மாதம் 6 ஆம் திகதியிலிருந்து பாகிஸ்தான் இராணுவம் போர்நிறுத்த உடன்படிக்கையை திரும்பத் திரும்ப மீறியிருக்கிறது. இருநாடுகளும் 2003 ஆம் ஆண்டில் போர் நிறுத்த உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தன.

ஜம்மு நகரில் இருந்து 220 கிலோ மீற்றர் தொலைவில் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டுக்கு அண்மையாக இந்திய இராணுவ ரோந்துப் பிரிவினர் மீது பாகிஸ்தானியப் படைவீரர்கள் தாக்குதல்கள் நடத்தியதாக இந்திய அரசாங்கம் கூறுகிறது. இந்த தாக்குதலையடுத்து இருதரப்பினர்களுக்குமிடையே கடுமையான துப்பாக்கிப் பிரயோகம் அரைமணித்தியாலத்திற்கும் கூடுதலான நேரம் இடம்பெற்றது. இதில் பாகிஸ்தான் வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். இந்த இழப்பையடுத்து பாகிஸ்தான் இராணுவம் அதன் தாக்குதல்களை தீவிரப்படுத்தியது. இந்திய பிராந்தியத்திற்குள்ளே நடத்திய முற்றுகையொன்றில் அவர்கள் இந்திய இராணுவத்தினால் விரட்டியடிக்கப்படுவதற்கு முன்பதாக இரண்டு இந்திய படைவீரர்களைக் கொன்றனர்.


உண்மையில் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டையில் இராணுவ வீரர்களோ அல்லது குடிமக்களோ கொல்லப்படுவது அல்லது காயமடைவது என்பது வழமையான நிகழ்வுகளே யாகும். ஆனால், கொல்லப்பட்ட இந்திய படைவீரர்கள் பாகிஸ்தான் இராணுவத்தினரால் நடத்தப்பட்ட விதம் குறித்தே இந்திய பாதுகாப்புப் படைகளும் இந்திய மக்களும் சீற்றம் கொண்டிருக்கிறார்கள். இந்தியப் படைவீரர்களின் சடலங்களை முரட்டுத்தனமாகக் கையாண்ட அவர்கள் ஒருபடைவீரரின் தலையைத் துண்டித்து எடுத்துச்சென்றிருக்கிறார்கள். கார்கில் போரின் தொடக்கத்தில் இந்திய இராணுவ ரோந்து படைப்பிரிவொன்றிற்கு பாகிஸ்தானிய இராணுவத்தினர் செய்த கொடூரங்கள் குறித்து மிக அண்மையில் டில்லிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த பாகிஸ்தான் உள்துறையமைச்சர் ரெஹ்மான் மாலிகியின் கவனத்திற்கு இந்திய அரசாங்கம் கொண்டு வந்திருந்தது.

இந்த விவகாரம் உச்ச நீதிமன்றம் வரை சென்றிருக்கிறது. சர்வதேச நீதிமன்றத்திற்கு இதை ஏன் கொண்டு போக முடியாதென்று காரணம் கூறுமாறு இந்திய அரசாங்கத்திடம் உச்ச நீதிமன்றம் கேட்டிருக்கிறது.

2000 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியப் படைவீரரின் தலையை பாகிஸ்தான் இராணுவத்தினர் துண்டித்த நான்காவது சம்பவம் இது. முதல் சம்பவம் 2000ஆம் ஆண்டு இடம்பெற்றது. 2ஆவது சம்பவம் 2011 இல் இடம்பெற்றது. இதில் இரு படைவீரர்களின் தலைகள் துண்டிக்கப்பட்டன. இதை இராணுவத் தளபதி ஜெனரல் பிக்ரம் சிங்கும் ஒத்துக்கொண்டிருக்கிறார். அண்மையில் நிருபர்களிடம் பேசிய அவர் "ஆம் அவ்வாறு நடந்துதான் இருக்கிறது. உண்மையை நாம் மறைக்க முடியாது" என்று சொன்னார்.

இந்தியப் படைவீரர்களின் சடலங்கள் பாகிஸ்தானியரால் மீண்டும் கண்டதுண்டமாக்கப்பட்டதையடுத்து நாட்டு மக்களிடையே சீற்றம் அதிகரித்திருக்கிறது. மும்பாயில் பாகிஸ்தானிய பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல்களுக்குப் பிறகு இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்துவதற்கு கடுமையாக முயற்சித்துக்கொண்டிருக்கும் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங்கின் அரசாங்கம் மக்கள் மத்தியிலும் படையினர் மத்தியிலும் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பின் காரணமாக தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. வழமையாக மென்மையான தொனியில் பேசுகின்ற பிரதமர் கடும் தொனியில் பேச நிர்ப்பந்திக்கப்பட்டார். பாகிஸ்தானுடன் இனிமேல் வழமை போன்று காரியங்களைச் செய்ய முடியாது என்று அவர் கூறியிருக்கிறார். இந்தியப் படைவீரரின் தலையைத் துண்டித்தவர்கள் கைது செய்யப்பட வேண்டும் என்று பிரதமர் கேட்டிருக்கிறார். ரெஹ்மான் மாலிக் டில்லி வந்திருந்தபோது சில வாரங்களுக்கு முன்னர் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான விசா ஏற்பாடுகளில் தளர்வைச் செய்வதற்கு இணக்கம் காணப்பட்டது. ஆனால் அந்த தளர்வு ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தற்போது தாமதிக்கப்பட்டிருக்கிறது.

**பாகிஸ்தானுடன் இனிமேல் வழமை போன்று காரியங்களைச் செய்ய முடியாது**



பாகிஸ்தான் இராணுவத்தின் நடவடிக்கை கடுமையாக ஆட்சேபிக்கத்தக்கது என்றும் இந்தியப் படைவீரரின் சடலத்தை பாகிஸ்தானியர்கள் மனிதாபிமானமற்ற முறையில் கையாண்டிருக்கிறார்கள் என்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி கூறியிருக்கிறார். டில்லியில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரை இந்திய வெளியுறவு அமைச்சு செயலாளர் அழைத்து ஆட்சேபத்தை தெரிவித்திருக்கிறார். ஆனால், பாகிஸ்தான் எந்தத் தவறையும் செய்யவில்லை என்று கூறிக்கொண்டிருக்கிறது.



**பாகிஸ்தானியர் எடுத்த ஒரு தலைக்கு பதிலாக அவர்களின் பத்து தலைகளை எடுக்க வேண்டும்**

இந்தியா அடுத்து என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற விடயத்தைப் பொறுத்தவரையில் சகல தெரிவுகளையும் மனதிற்கொண்டிருக்கிறது என்று விமானப்படைத் தளபதி கூறியிருக்கிறார். தற்போதைய செயன்முறைகளும் உடன்படிக்கைகளும் பயனளிக்கவில்லையென்றால் இந்தியா வேறுவழிகளைப் பார்க்க வேண்டியிருக்கும் என்று அவர் கடும்தொனியில் குறிப்பிட்டிருக்கிறார். பாகிஸ்தானியப் படைவீரினால் ஆத்திரமூட்டப்பட்டால் ஆக்ரோஷமாக நடந்துகொள்ளுமாறு சகல படைப்பிரிவுகளுக்கும் உத்தரவிட்டிருப்பதாக இராணுவத் தளபதி கூறியிருக்கிறார். பாகிஸ்தான் படையினரின் செயல் கொடூரமானது. மன்னிக்கப்படமுடியாதது. சகல தர்க்கங்களையும் நியாயங்களையும் மீறுகின்ற செயலை பாகிஸ்தானியர்கள் செய்திருக்கிறார்கள். படைவீரர்கள் சம்பந்தப்பட்ட விதிமுறைகளுக்கு விரோதமானது இந்தச் செயல் என்று அவர் கண்டித்திருக்கிறார்.

பாகிஸ்தான் சொல்வதை நம்புவதற்கு இந்தியாவில் யாருமே தயாராகவில்லை. இந்தியா மிகவும் கடுமையான முறையில் பாடங்களை படித்திருக்கிறது. பாகிஸ்தான் எப்போதுமே முதலில் தனது தவறான நடத்தைகளை மறுத்தே வந்திருக்கிறது. மும்பாயில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் விடயத்திலும்

பாகிஸ்தான் இவ்வாறே நடந்து கொண்டது. இந்தியாவினால் உயிருடன் பிடிக்கப்பட்ட பயங்கரவாதிகளில் ஒருவர் பாகிஸ்தான் பிரஜை இல்லை என்றே இஸ்லாமாபாத் கூறியது. ஆனால் அதே பயங்கரவாதியை தங்களது மகனென்று பாகிஸ்தானில் அவனின் பெற்றோர் ஊடகங்களுக்கு கூறியிருக்கிறார்கள்.

1999 இல் இந்தியப் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாயும் பாகிஸ்தானியப் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் இரு நாடுகளுக்குமிடையேயான உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் உற்சாகமாக பேசிக்கொண்டிருந்த போது கார்கில் பகுதியில் தீவிரவாதிகளுடன் சேர்ந்து பாகிஸ்தானிய இராணுவத்தினர் ஊடுருவல் செய்தது இன்னொரு காரணம். அப்போது கூட பாகிஸ்தான் இந்த ஊடுருவலில் தனது படையினர் சம்பந்தப்படவில்லை என்று முதலில் மறுத்தது. அன்றைய அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன் உரிய நேரத்தில் தலையீடு செய்திருக்காவிட்டால் கார்கில் மோதலின் தன்மை மிகவும் வேறுபட்டதாகப் போயிருக்கும்.





ஆத்திரமூட்டும் அறிக்கைகளை விடுக்காமல் பேசித்தீர்வு காண்பதே விவேகமானது

இத்தடவை கூட தீவிரவாதிகளின் பங்கு இருக்கவில்லையென்று முற்று முழுதாக நிராகரிக்க முடியாது. ஏனென்றால் மும்பைத் தாக்குதலின் சூத்திரதாரி ஹபீஸ் சயிட் இரு இந்தியப் படைவீரர்கள் கொல்லப்படுவதற்கு இருநாட்கள் முன்னதாக பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் எல்லைப்பகுதிகளில் இருந்ததாக புலனாய்வு அமைப்புகள் அறிவித்திருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் சுசில் குமார் ஷிண்டே கூறியிருக்கிறார். "ஹபீஸ் சயிட் பாகிஸ்தான் கட்டுப்பாட்டு காஷ்மீர் பகுதிக்குள் பிரவேசித்து சில ஆட்களுடன் பேசியதாக எமக்குக் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. கடந்த சில மாதங்களாக ஜம்மு காஷ்மீரிலும் ஊடுருவல் முயற்சிகள் அதிகரித்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது" என்று ஷிண்டே கூறினார். உள்ளூர் தளபதிகளும் துருப்புகளும் சயிட்டினாலும் அவரின் ஆட்களினாலும் தூண்டப்பட்டிருக்கலாம். இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் மேம்படுவதை சயிட் கும்பல் விரும்பவில்லை. அத்துடன் காஷ்மீர் விவகாரங்கள் ஓரங்கட்டப்பட்டுக் கொண்டு வருவதினாலும் அவர்கள் கவலையடைந்திருக்கிறார்கள். ஆனால், தங்களது இலக்கை அடைவதற்கான வழிகளிலொன்றாக இந்தியாவை அவர்கள் ஆத்திரமூட்ட முயற்சிக்கிறார்கள் போலும். அதே வேளை, பாகிஸ்தான் சிவிலிய அரசாங்கம் இம்ரான் கான் போன்ற அரசியல்வாதிகளினாலும் மதத் தலைவர்களினாலும் கடுமையான அளவிற்கு நெருக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டுக்கொண்டிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

பாகிஸ்தான் கூறுகின்ற காரணங்கள் எவையாக இருந்தாலும் இந்தியா மென்மையான நிலைப்பாட்டை எடுக்க முடியாது. ஏனென்றால், அயல் நாட்டின் பொறுப்பற்ற நடத்தைகளுக்கெதிராக இந்தியாவின் ஆத்திரம் அதிகரித்துக்கொண்டுவருகிறது. காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் பொதுத்தேர்தலை அடுத்த வருடம் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. இத்தகைய ஒரு சூழ்நிலையில் பாகிஸ்தான் படையினரின் செயலுக்கு பொருத்தமான முறையில் பதிலடி கொடுப்பது குறித்து இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் பேசியிருக்கிறார். இருநாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளை சீர்குலைக்கும் முயற்சியாகவே அண்மைய தாக்குதல்களை அவர் நோக்குகின்றார். பாகிஸ்தானை மையமாகக் கொண்டியங்கும் தீவிரவாதிகளினால் 2008 ஆம் ஆண்டு மும்பையில் நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து பாகிஸ்தானுடனான சமாதான முயற்சிகளை இந்தியா இடை நிறுத்திக் கொண்டது. கடந்த வருடம் பெப்ரவரியில் தான் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கக்கூடியதாக இருந்தது.

பாதுகாப்பு விவகாரம் தொடர்பான அமைச்சரவைக் கமிட்டி அவசரமாகக்கூடி பாகிஸ்தானுக்கெதிராக கடுமையான போக்கைக் கடைப்பிடிப்பதற்கு தீர்மானித்தது. இதையடுத்து இரு நாடுகளுக்குமிடையேயான புதிய விசா உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதை இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. விளையாட்டுத்துறை உறவுகளையும் ஆர்வமிழக்கச் செய்ய வேண்டுமென்ற முனைப்பும் காட்டப்பட்டது. உண்மையில் சில தினங்களுக்கு முன்னர்தான் உள்துறை

அமைச்சர் ஷிண்டே தான் ரெஹ்மான் மாலிக்குடன் கைச்சாத்திட்ட விசா உடன்படிக்கை மறுநாள் நடைமுறைப்படுத்தப்படும் என்ற அறிவிப்பை விடுத்திருந்தார். அரசாங்கத்தின் கடுமையான சமிக்ஞையை அடுத்து இந்தியன் ஹொக்கி லீக் ஆரம்ப வைபவத்தில் பங்கேற்கவிருந்த பாகிஸ்தானிய விளையாட்டு வீரர்களை இந்திய ஹொக்கி சங்கம் திருப்பி அனுப்பியது. இந்தியா நடத்தவிருக்கும் உலகக் கிண்ணப்போட்டியில் பாகிஸ்தான் பெண்கள் கிரிக்கெட் அணியின் கதியும் அந்தரத்தில் தொங்குகிறது என்று தெரியும். உண்மையில் பாகிஸ்தான் ஆண்கள் கிரிக்கெட் அணிக்கு அதிர்ஷ்டம் தான். அவர்களுக்கும் இந்திய கிரிக்கெட் அணிக்கும் இடையேயான ஒரு நாள் போட்டிகளும் ரி-20 போட்டிகளும் எல் லையில் பதற்ற நிலை ஏற்படுவதற்கு முன்னதாகவே முடிந்துவிட்டன.



**பாகிஸ்தான் படையினரின் செயலுக்கு பொருத்தமான முறையில் பதிலடி கிடைக்கும்**

பொதுமக்களின் நெருக்குதல்களும் எதிர்க்கட்சித் தலைவி சுஷ்மா சுவராஜின் அறிக்கையுமே அரசாங்கத்தின் நிலைப்பாட்டை உண்மையில் மாற்றியமைத்திருக்கின்றன போலத் தோன்றுகின்றது. கொல்லப்பட்ட படைவீரரின் விதவை மனைவியரை சந்தித்த பிறகு சுஷ்மா சுவராஜ் பாகிஸ்தான் இராணுவம் துண்டித்த ஒரு தலைக்குப் பதிலாக பத்து தலைகளை இந்தியா எடுக்க வேண்டும் என்று ஆவேசத்துடன் கூறியிருந்தார். அவரது இந்தக் கூற்று ஹெம்ராஜ், சுதாகர் சிங் என்ற கொலையுண்ட இரு படைவீரர்களும் பணிபுரிந்த 13 ராஜ் புட்டனா ரைபிள் ரெஜிமென்ட் துருப்புகளின் உணர்வுகளை எதிரொலிப்பதாக இருந்தது.

பாகிஸ்தான் இராணுவத்தின் பற்றுறுதி சந்தேகத்திற்கிடமானதாக இருக்கின்ற ஒரு சமாதான முயற்சி தொடர்பில் அக்கறைகாட்டி அரசியல் ரீதியில் இந்தியா ஆபத்தை விலைக்கு வாங்க வேண்டியதில்லை என்று அரசாங்கத்தின் அவசரக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. பாகிஸ்தான் அரசாங்கத்திற்கெதிராக கிளம்பியிருக்கும் மதத்தலைவர் தாகிர் உல் கத்ரிக்கு மறைமுகமாக ஆதரவளிப்பது போன்ற குறிப்பிட்ட சில அரசியல் நகர்வுகளையும் பாகிஸ்தானிய இராணுவம் செய்கிறது போலத் தெரிகிறது. இராணுவம் ஆதரவுச் சமிக்ஞையைக் காட்டியிராவிட்டால் 50 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்ட கூட்டமொன்றை தாகிரினால் நடத்தியிருக்க முடியாது. எதிர்வரும் செப்டெம்பரில் ஓய்வு பெறுவதற்கு பாகிஸ்தான் இராணுவத் தளபதி அஷ்பாக் பர்வேஸ் கயானி திட்டமிடுகிறார். அவரது அத்திட்டம் தொடர்பில் இருக்கக்கூடிய நிச்சயமற்ற தன்மையையும் நிலைவரங்களை சிக்கலாக்குகின்றது.

அரசியல் மட்டத்தில் நோக்குகையில் பாகிஸ்தானுடன் தற்போது ஏற்பட்டிருக்கின்ற முறுகல் நிலையைப் பொறுத்தவரை கடும்போக்காளரின் இடத்தை பாரதிய ஜனதா எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகுவதை அரசாங்கத் தலைமைத்துவம் விரும்பவில்லை. பாகிஸ்தானிடமிருந்து உருப்படியான பதில்கள் வராமல் இருக்கின்ற போதிலும் கூட அந்த நாட்டுடன் மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கின்றமைக்காக பிரதமர் மன்மோகன் சிங்கை பல காங்கிரஸ் தலைவர்களும் தொண்டர்களும் கண்டனம் செய்கிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

இந்திய அரசாங்கம் எடுத்திருக்கும் கடும் நிலைப்பாடு பாகிஸ்தானில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது போல் தெரிகிறது. பல நாட்களாக மறுப்புகளை தெரிவித்ததுடன், மாத்திரம் அல்ல இந்தியாவிற்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்திய பாகிஸ்தான் ஜனவரி 16ஆம் திகதி (பதற்ற நிலை மூண்டு 10 நாட்களுக்குப் பிறகு) போர் நிறுத்த உடன்படிக்கையை உறுதியாக கடைப்பிடிக்க முன்வருவதாக அறிவித்தது. அதன் வெளியுறவு அமைச்சர் ஹினா றபானி கார் பதற்ற நிலையில் ஏற்படக்கூடிய எந்த அதிகரிப்பும் ஆபத்தான விளைவுகளை கொண்டுவரும் என்பதை ஒத்துக்கொண்டார். முன்னதாக போர் வெறித்தனமாக இந்தியா பேசுவதாக குற்றம் சாட்டிய ஹினா றபானி கார் 2003 முதல் நடைமுறையில் இருந்து வரும் யுத்த நிறுத்தத்தை இறுதியாகக் கடைப்பிடிப்பது குறித்தும் கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டுடன் சம்பந்தப்பட்ட விவகாரம் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்வருவதாகவும் அறிவித்தார்.

எல்லைகளுக்கு குறுக்கே இரு நாடுகளினதும் அரசியல் தலைவர்களும் இராணுவத் தலைவர்களும் ஏட்டிக்குப் போட்டியாக ஆத்திரமூட்டும் வகையிலான அறிக்கைகளை விடுப்பதற்குப் பதிலாக இரு நாடுகளும் சம்பந்தப்பட்ட விவகாரங்களை வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்தில் பேசி தீர்வு காண்பது புத்திசாலித்தனமானது. பாகிஸ்தானும் இந்தியாவும் தெற்காசியாவில் மிகவும் முக்கியமான நாடுகள். பேச்சுவார்த்தைகள் மூலமாக பிரச்சினைகளைக்

கையாண்டு சமாதானத்தை உறுதிப் படுத்துவதில் இரு நாடுகளுக்கும் இருக்கின்ற பொறுப்புணர்வை வெளிக்காட்ட வேண்டியது அவசிய மானது என்று பாகிஸ்தான் வெளியு றவு அமைச்சர் கூறினார்.

742 கிலோமீற்றர் நீளமான கட்டுப் பாட்டு எல்லைக்கோட்டில் 10 நாட்க ளில் இடம்பெற்ற யுத்த நிறுத்த மீறல்க ளில் இரண்டு இந்தியப் படைவீரர் களும் 4 பாகிஸ்தானிய படைவீரர் களும் கொல்லப்பட்டார்கள்.

இந்தியாவும் பாகிஸ்தானும் பரம வைரிகள். 1947 இல் சுதந்திரத்தை தொடர்ந்து இடம்பெற்ற உபகண்ட பிரிவினைக்குப் பிறகு இரு நாடுக ளும் நான்கு தடவைகள் போரைச் சந்தித்தன. எல்லையோரங்களில் தாக் குதல்கள் நடைபெறுவது வழமை யான நிகழ்வுபோலாயிற்று. இரு நாடு களினதும் படைகள் எண்ணற்ற தட வைகள் போர் உடன்படிக்கைகளை மீறியிருக்கின்றன. சுதந்திரத்திற்குப் பிறகு பாகிஸ்தான் இடையறாது இந்தியாவின் முதுகில் குத்தியிருக்கி றது. சர்வதேச அரங்கில் என்னதான் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டாலும் அதையெல்லாம் பொருட்படுத்தா மல் பயங்கரவாத குழுக்களைப் பயன்படுத்தி மறைமுக யுத்தமொன் றினூடாக இந்தியாவிற்கு தொல்லை கொடுப்பதை பாகிஸ்தான் அரசாங் கம் தொடர்ந்துகொண்டே இருக்கி றது. இந்தியாவிற்குள் குழப்பநிலை உருவாக்குவதில் பாகிஸ்தான் முனைப்புடன் செயற்பட்டு வந்திருக் கின்றது என்பதற்கு பல உதாரணங் கள் உண்டு. அதேவேளை எல்லை யோரங்களில் ஊடுருவி மிகவும் கொடூரமான தாக்குதல்களை மேற் கொண்டும் பாகிஸ்தானியர்கள் இந்தி யாவிற்கு நெருக்கடிகளை கொடுத்தி ருக்கிறார்கள்.

மும்பையில் 2008 நவம்பர் 26 பாகிஸ்தானிய பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் இந்திய மண்ணில் இதுகாலவரையில் இடம்பெற்றிருக் கக்கூடிய மிகப்பெரிய தாக்குதல்க ளில் ஒன்றாகும். அதில் குறைந்த பட்சம்166பேர்கொல்லப்பட்டார்கள். பெரும் எண்ணிக்கையானவர்கள் காயமடைந்தார்கள். பயங்கரவாதிக ளின் மும்பை முற்றுகை 60 மணித்தி யாலங்களுக்கும் மேலாக நீடித்தது. 2001 டிசம்பர் 13 ஆம் திகதி பாகிஸ் தானின் அனுசரணையுடனான பயங் கரவாதிகள் இந்திய பாராளுமன் றத்தை தாக்கினார்கள். பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் இருநாடுக ளுக்கும் இடையிலான உறவுகளைச் சீர்செய்யும் முயற்சியாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பெர்வேஸ் முஷாரப்பை ஆக்ரா உச்சி மகாநாட் டுக்கு வருமாறு அழைப்பு விடுத்தி ருந்த ஒரு கட்டத்தில் பாராளுமன்றம் மீதான அந்த தாக்குதல் நடைபெற் றது.

அதற்கு முன்னதாக, 1999 இல் கார்கில் பகுதியில் பாகிஸ்தான் தாக் குதல்களைத் தொடுத்து பல மலைக் குன்றுகளைக் கைப்பற்றியது. படு மோசமான சண்டைக்குப் பிறகு இந்திய இராணுவம் பாகிஸ்தானிய துருப்புகளை பனிமயமான குன்றுக ளில் இருந்து விரட்டியடித்தது. இந் தியா அந்தப் போரில் சுமார் 1000 படைவீரர்களை இழந்தது. கார்கில் போருக்கு முன்னதாக வாஜ்பாய் லாகூருக்கு பஸ்ஸில் சென்று பாகிஸ் தான் பிரதமர் நவாஸ்ஷெரீப்பை சந் தித்தார். ஆனால் பிரதியுபகாரமாக பாகிஸ்தான் இந்தியாவிற்கு முதுகில் குத்தி கார்கில் பகுதிக்குள் ஊடுரு வல் செய்தது.

1999 டிசம்பரில் காத்மண்டில் இருந்து புறப்பட்ட இந்தியன் எயார் லைன்ஸ் ஐ.சி.814 விமானம் பாகிஸ் தானிய பயங்கரவாதக் குழுவொன்றி னால் கடத்தப்பட்டது. தலிபான்க ளின் கட்டுப்பாட்டில் இருந்த ஆப்கானிஸ்தானின் கந்தகாருக்கு கொண்டுசெல்லப்பட்ட அந்த விமா னத்தில் கடத்தல்காரர்கள் இந்தியப் பயணியொருவரை சுட்டுக்கொன்ற னர். மௌலானா, மசூத், அஸ்கர் உட்பட மூன்று கொடூரமான பயங்கர வாதிகளை இந்தியா விடுதலை செய்த பிறகே பயணிகளுடன் விமா னம் விடுவிக்கப்பட்டது.

## அடிமட்ட ஜனநாயகத்தை தகர்த்தல்

தீவிரவாத நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஜம்மு காஷ்மீ ரில் அடிமட்ட ஜனநாயகத்தை சீர் குலைப்பதற்கு பயங்கரவாதிகள் முயன்றுகொண்டிருக்கிறார்கள். அடி மட்ட ஜனநாயக நிறுவனங்களை மீட்டெடுப்பதில் மாநில அரசாங்கம் கண்ட வெற்றியினால் பொறாமை கொண்ட தீவிரவாதிகள் மக்களி னால் தெரிவுசெய்யப்பட்ட பஞ்சாய த்து உறுப்பினர்களை அச்சுறுத்தி வருகிறார்கள்.அண்மையில் ஷோபூர் மாவட்டத்தில் பொமை என்ற கிரா மத்தில் ஹபிபுல்லா மிர் என்ற பஞ்சா யத்து தலைவரை தீவிரவாதிகள் சுட் டுக்கொன்றனர். இனம் தெரியாத பயங்கரவாதிகள் ஹபிபுல்லா மிர்ரை அவரது வீட்டு வளவிற்குள் வைத்து சுட்டதாக பொலிஸார் தெரிவித்த னர். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல் லப்படும்போது அவர் இறந்துவிட் டார். இதே மாவட்டத்தில் இன்னொரு பஞ்சாயத்து உறுப்பினரான 45 வய தான பெண்மணி கழுத்தில் சுடப்பட் டார். தற்போது அவர் ஸ்ரீநகர் ஆஸ் பத்திரியில் உயிருக்காகப் போராடு கின்றார்.

கடந்த வருடம் ஆளும் தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முஹ மட் ஷாபி என்ற பஞ்சாயத்து உறுப்பி னரை தீவிரவாதிகள் சுட்டுக்கொன்ற னர். ஒருவருட கால இடைவெளிக் குள் சுட்டுக்கொல்லப்பட்ட நான்கா வது பஞ்சாயத்து உறுப்பினர் இவரா வார். 23 வருட கால இடைவெளிக் குப் பிறகு ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் பஞ்சாயத்து சபைகளுக் காக தேர்தல்களை நடத்தி மாநில அர சாங்கத்தினால் அடிமட்ட ஜனநாயக நிறுவனங்களை மீண்டும் செயல்பட வைக்கக்கூடியதாக இருந்தது. இது தீவிரவாத அமைப்புகளுக்கு பெரும் சவாலாக அமைந்தது. இந்தத் தேர்தல் களில் 80 சதவீதமான வாக்காளர்கள் வாக்குகளை பதிவுசெய்தார்கள் என் பது குறிப்பிடத்தக்கது.

ஒருவருடத்திற்கும் அதிகமான காலமாக பஞ்சாயத்து அதிகாரிகளை

பதவிகளை ராஜிநாமா செய்யுமாறு அச்சுறுத்தி வந்தன. பதவி விலகா விட்டால் கொல்லப்படுவீர்கள் என்ற எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. சகல பஞ்சாயத்து உறுப்பினர்களையும் பதவிவிலகுமாறு கோரும் கையெழுத்துச் சுவரொட்டிகள் மாநிலத்தின் பல்வேறு கிராமங்களிலும் கடந்த வருடம் காணப்பட்டதாக பொலிஸார் கூறினர். ஆனால் இந்த அச்சுறுத்தல்களை பொலிஸார் உண்மையானதென்று நம்பவில்லை.

எவ்வாறெனினும் 2000க்கும் அதிகமான பஞ்சாயத்து உறுப்பினர்களில் சுமார் 400பேர் மேற்கண்ட 4 கொலைகளையும் அடுத்து பதவி விலகினர். இப்போது மேலும் 20 பிரதிநிதிகள் விலகியிருக்கிறார்கள். இருந்தபோதிலும் கூட அவர்களின் பாதுகாப்பு தொடர்பான கோரிக்கையில் அக்கறைகாட்டுவதற்கு மாநில அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் தவறிவிட்டன. அவர்கள் எதை விரும்புகிறார்கள்? தீவிரவாதிகளின் முன்பாக மக்கள் பிரதிநிதிகள் மண்டியிடுவதையா அரசாங்கம் விரும்புகிறது? உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் கடந்த வருடம் செய்யப்பட்ட நல்ல பணிகள் எல்லாம் சீர்குலைந்து போய்விடக்கூடிய ஆபத்திருக்கிறது. பிராந்தியத்தில் தீவிரவாதிகள் சொல்வது மாத்திரமே நடக்கிறது என்ற செய்தியை உலகிற்கு கொடுக்கும். இதையா ஜம்மு காஷ்மீர் மாநில முதலமைச்சர் விரும்புகிறார்.

இந்த நிகழ்வுகள் எல்லாம் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் என்ன படிப்பினையைக் கொடுத்திருக்கின்றன? என்றால் இரு நாடுகளின் இராணுவங்களும் ஒத்துழைக்காத பட்சத்தில் சமாதான முயற்சிகள் ஒரு போதுமே வெற்றியளிக்கப்போவதில்லை. இது ஒரு பாடம். பாகிஸ்தான் இராணுவத்திற்கும் ஐ.எஸ்.ஐ. உளவுப் பிரிவிற்கும் தீவிரவாதிகளுக்கும் இடையேயான நெருக்கம் இல்லாமல் செய்யப்பட வேண்டும். ஏனென்றால் இந்த அமைப்புகள் தான் பாகிஸ்தானை நடத்திக்கொண்டிருக்கின்றன. பாகிஸ்தானின் எந்தவொரு சிவில் அரசாங்கத்தினாலும் இதைச் செய்யக்கூடியதாக இருக்குமா? அவ்வாறு செய்யக்கூடியதாக இருக்குமேயானால் மாத்திரமே சமாதான முயற்சிகள் வெற்றியளிக்கும். அல்லாவிட்டால் சமாதானப் பேரணிகளுடன் சேர்ந்து பல கார்கில்களும் இடம்பெற்றுக்கொண்டே இருக்கும்.


---

*(20ஆம் பக்கத்தொடர்ச்சி)*

செயல்படுத்தியமை - அல்லது, செயல்படுத்தாமை குறித்த பிரச்சினைகளை சர்வதேச சமூகம் ஜெனீவாவில் மீண்டும் அலசவேண்டும் என்று குரல் எழுப்பலாம்.

இதோடு விடயம் நின்றுவிடப் போவதில்லை. இந்த ஆண்டின் பிற்பகுதியில் ''கொமன்வெல்த் நாடுகளின் உச்சி மகாநாடு'' இலங்கையில் நடைபெற உள்ளது. அரசியல்-பொருளாதார ரீதியாக கொமன்வெல்த் அதிகமாக எதனையும் சாதித்து விடவில்லை. என்றாலும், இலங்கை அரசு எதிர்வரும் மகாநாட்டை கௌரவ பிரச்சினையாகக் கருதி வருகிறது. ஆனால், ''போர்க் குற்றங்கள்'' என்ற காரணத்தைக் கூறி கனடா போன்ற உறுப்பு நாடுகள் மகாநாடு இலங்கையில் நடத்தப்படக் கூடாது என்று கோரி வந்துள்ளன.

கொமன்வெல்த் நாடுகளில் சில, தற்போது, ''பிரதம நீதியரசர் பதவி நீக்கம்'' என்ற காரணத்தைக் காட்டி, இலங்கையில் உச்சி மகாநாடு நடைபெற்றால், அதனை தாங்கள் புறக்கணிக்கப் போவதாக அவற்றில் சில கோடிட்டுக் காட்டியுள்ளன. பிரதம நீதியரசர் பிரச்சினை குறித்து, லண்டன் நகரை தலைமையிடமாகக்



கொண்ட கொமன்வெல்த் குழுவின் தலைமைச் செயலகமும் இது போன்ற கவலைகளை தெரிவித்துள்ளன. எனவே, உச்சி மகாநாட்டின் எதிர்காலமும் கேள்விக் குறியாகியுள்ளது. அவ்வாறே உச்சிமகாநாடு இலங்கையில் நடக்கும் போது, பிரதம நீதியரசர் பிரச்சினையை ஏதேனும் உறுப்பு நாடு, மேடைக்குள்ளேயோ, அல்லது வெளியேயோ, அதனை விவாதப் பொருளாக மாற்றலாம். அது சமயத்தில், ஜெனீவாவில் மனித உரிமைக் கவுன்சில், இந்த ஆண்டின் இரண்டாவது கூட்டத்தை நடத்த இருக்கும் நிலையில் அதுவும் இலங்கைக்கு மேலும் பிரச்சினையாக இருக்கலாம்.


என்றாலும், இந்தப் பிரச்சினைகள் எல்லாமே அரசு எதிர்பாராததோ அல்லது எதிர்நோக்காததோ அல்ல. அப்படி என்றால், இது போன்ற அரசு தலைமையின் கௌரவ பிரச்சினைகளையும் மீறி, அரசு குறித்த சர்வதேச சமூகத்தின் கவலைகள் மற்றும் கரிசனத்தையும் கண்டு கொள்ளாமல், பிரதம நீதியரசர் பதவி நீக்கம் குறித்து அரசு ''தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்'' என்று செயல்படுமேயானால், அத்தனை அளவிற்கு அது கவலைப்படும் நிலைமை உள்நாட்டில் உருவாகி உள்ளது என்றே எண்ணத் தோன்றுகிறது. அது சில அரசு தலைவர்கள் கூறி வருவது போல் ''ஆட்சி மாற்றம்'' குறித்த சதிச் செயலினை செயலிழக்கச் செய்யும் முயற்சியா? என்ற கேள்வியும் உடன் எழுகிறது. அதில் உண்மை இருந்தால், இப்போதாகிலும் அரசு அது குறித்த விவரங்களை நாட்டு மக்களுடன் பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டும்.

உள்நாட்டு அரசியல்

இலங்கையின் இறுதி வந்தேறு குடிகள்

# தொடர்ந்து ஒதுக்குதலுக்கு உள்ளாகும் மலையக தமிழ் மக்கள்

இன்றைய மலையக மக்கள் தமது அடிப்படைப்பிரச்சினைகளை வெற்றிகொள்ள வேண்டுமாயின் அனைத்து மலையகத் தலைமைகள் மத்தியிலும் உரிமைகளை வென்றெடுப்பது தொடர்பாக ஒரு பரந்துபட்ட இணக்கப்பாடு உருவாகுதல் அவசியம்



பெ.முத்துலிங்கம்

இலங்கை என்றவுடன் நினைவிற்கு வருவது ஈழத்தமிழர் பிரச்சினையும் அவர்களது போராட்டமுமேயாகும். இலங்கையில் மட்டுமே இரு அடையாளங்களைக் கொண்ட தமிழர் வாழ்கின்றனர். ஒரு பிரிவினர் ஈழத்தமிழர், இன்னுமொரு பிரிவினர் இந்தியத் தமிழர். ஆனால் இந்தியத் தமிழர் பற்றியோ அல்லது இத்தமிழரது போராட்டங்கள் அல்லது வாழ்நிலை பற்றிய விடயங்கள் இன்றைய அரசியல் அரங்கில் பெரிதாகப் பேசப் படுவதில்லை.

இலங்கையானது பூர்வீக மக்களைக் கொண்ட நாடல்ல. மாறாக வந்தேறு குடிகளால் உருவான நாடாகும். இலங்கையின் வேடுவர், பழங்குடியினர் என இனம் காணப்பட்டாலும் இக்குடிகளும் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து குடிபெயர்ந்த குடிகளாகவே கருதப்படுகின்றனர். மானிடவியல் ஆய்வின்படியும் இலங்கையின் புனை சரித்திரக் காவியம் எனக்கூறப்படும் மகாவம்சம் என்றதனடிப்படையிலும் இந்தியத் துணைக் கண்டத்திலிருந்தே மக்கள் குடிபெயர்ந்தனர். இலங்கையின் இரு பெரும் பூர்வீக இனங்களில் ஒன்றான சிங்களவர் வட இந்தியாவிலிருந்தே குடிபெயர்ந்துள்ளனர் என மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயன் என்ற வடநாட்டின் இளவரசனின் வழித்தோன்றலாகவே சிங்களவர் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.ஆனால் சிங்கள தொல்பொருள் ஆய்வாளரான பேராசிரியர் பரனவிதாரணவின் கூற்றின்படி சிங்களவர்கள் இன்றைய வங்காள தேசமான கிழக்கு வங்க தேசத்திலிருந்தே இலங்கைக்கு குடிபெயர்ந்துள்ளனர். விஜய்சிங் என்பவனின் தலைமையின் கீழேயே குடிபெயர்ந்துள்ளனர். பூர்வீகத் தமிழரான ஈழத்தமிழர் தென்னிந்தியாவிலிருந்தும் சமகாலத்தில் குடிபெயர்ந்துள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. இக்குடிப்பெயர்வுகள் கிறிஸ்து வருடத்திற்கு முன்னர் நடைபெற்றுள்ளன. பதின்மூன்றாம் நூற்றாண்டின்போது அரேபியர்கள் வருகைதந்துள்ளதுடன், இந்திய முஸ்லிம்களும் இலங்கையில் குடியமர்ந்துள்ளனர்.

இதன் பின்னர் பதினெட்டாம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோரப் பகுதியை தம்வசமாக்கிக் கொண்டனர். இந் நூற்றாண்டின் இறுதியில் இலங்கையின் கரையோரப்பகுதியை தமதாக்கிக்கொண்ட ஆங்கிலேயர்

1818 வரை சுயாதீனமாகவிருந்த கண்டி இராச்சியத்தை தமதாக்கிக் கொண்டனர். 1818 முதல் முழுத் தீவினையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த ஆங்கிலேயர் மத்திய மலைநாடான கண்டியின் கால நிலை பானப்பயிர்ச்செய்கைக்கு உகந்ததாகக் காணப்பட்டமையினால் பானப்பயிர் உற்பத்தியில் 1823 முதல் ஈடுபடலாயினர். முதலில் கோப்பிப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்தனர். கோப்பிப்பயிர்ச்செய்கையை ஆரம்பித்த ஆங்கிலேயர், அப்பயிர்ச்செய்கையில் ஈடுபட சுதேசிகளான சிங்கள மக்கள் மறுத்தமையினால் தென்னிந்தியாவிலிருந்து தமிழ்த் தொழிலாளர்களை அழைத்து வந்தனர். கோப்பி தோட்டப்பயிர்ச் செய்கையில் ஈடுபட 1824 முதல் இலங்கைவர ஆரம்பித்த ஒரு சிலர் மீண்டும் தமது சொந்த ஊர்களுக்குச் சென்றதுடன், பலர் இலங்கையிலேயே தங்கலாயினர். 1825 க்கும் 1879 க்கும் இடையில் 11,326 பேர் இலங்கையில் நிரந்தரமாகத் தங்கலாயினர். 1867 இல் ஒருவகை நோய் கோப்பிப் பயிர்ச்செய்கையை தாக்கியதுடன், அதற்கு மாற்றீடாக தேயிலைப்பயிர்ச்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. தேயிலைப்பயிர்ச்செய்கைக்கு பாரிய அளவு நிரந்தரத் தொழிலாளர்கள் தேவைப்பட்டமையினால் 1869களின் பின்னர் பெருமளவு இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையில் குடியமரலாயினர். இவ்வாறு இந்தியாவிலிருந்து வந்தமர்ந்த இறுதிக்குடிகளே இன்று இந்தியத் தமிழர் என்றும் மலையகத் தமிழர் என்றும் அழைக்கப்படுகின்றனர். இதேவேளை நகர்ப்புறத் தொழில்களில் ஈடுபடுத்த மலையாளிகளும் அழைத்து வரப்பட்டனர். இவர்களுடன் இன்னுமொரு இனத்தவரும் ஆங்கிலேயரால் அழைத்துவரப்பட்டனர். அவர்கள் ஜாவாவைச் சேர்ந்த மலாயர்களாவர். இவர்கள் பொலிஸ், சிறைச்சாலை போன்ற தொழில்களில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களுடன் ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயரும் கலந்த பர்கர் எனும்

**தொடர்ந்து ஒதுக்குதலுக்கு உள்ளாகும் மலையக தமிழ் மக்கள்**

பிரிவினரும் இலங்கையின் நிரந்தரக் குடிகளாயினர். இவ்வகையில் பார்க்குமிடத்து பர்கரைத் தவிர ஏனைய அனைத்து இனங்களும் இந்திய வம்சாவளியினரே. ஆனால் இன்றைய மலையகத் தமிழரை மட்டும் தொடர்ந்து இந்தியத் தமிழராக அடையாளப்படுத்துகின்றனர்.

தோட்ட மற்றும் நகரங்களில் குடியமர்ந்த நிரந்தர அண்மைய இந்தியக் குடியேறிகள் கோப்பி உற்பத்தியுடன் இலங்கையில் குடியேறிய அண்மைய வந்தேறிகளான தென்னிந்தியத் தமிழ்த் தொழிலாளர்கள், தேயிலை உற்பத்தியின் போது பெருமளவில் குடியேறியதுடன், இவ்வுற்பத்திகளுடன் தோன்றிய இணை தொழிற்துறைகளான பாதை உருவாக்கல், இரும்புப்பாதை உருவாக்கல் போன்ற தொழில்களில் இந்தியத் தமிழர் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட பட்டிணங்கள், நகரங்கள், மாநகரங்கள் போன்றவற்றின் சுத்திகரிப்புத் தொழில்களிலும் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். ஆரம்பத்தில் தோட்டங்களில் மட்டும் குடியமர்ந்த தென்னிந்திய தமிழ்த் தொழிலாளர்கள் நகரங்களின் தோற்றத்துடன் மலைநாட்டினைத் தவிர்ந்த கொழும்பு, கண்டி, மாத்தளை, பதுளை, காலி, யாழ்ப்பாணம், திரு

> பறங்கியர்களைத்தவிர இலங்கையில் வாழும் ஏனைய அனைத்து இனத்தவர்களும் இந்திய வம்சாவளியினரே. ஆனால், இன்றைய மலையகத்தமிழரை மாத்திரம் தொடர்ந்தும் இந்திய வம்சாவளியினர் என்று அடையாளப் படுத்துகின்றனர்

கோணமலை, மட்டகளப்பு, மாத்தறை உள்ளிட்ட நாட்டின் அனைத்து நகரங்களிலும் குடியமர்ந்தனர். தென்னிந்திய தமிழ்த் தொழிலாளர்களின் வருகையைத் தொடர்ந்து தென்னிந்திய தமிழ் வர்த்தக சமூகத்தினரும் கொழும்பை வந்தடைந்து வர்த்தகத்தில் ஈடுபடலாயினர். இவர்கள் அனைவரும் இந்திய வம்சாவளித் தமிழர் என அழைக்கப்பட்டனர்.

அதேவேளை வடஇந்திய வர்த்தகர்களான மேமன், குஜராத்தி, போரா, பார்ஸி முதலானோரும் கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கலாயினர்.ஆனால் இவர்கள் இந்திய வம்சாவளி தமிழர் எனும் அடைமொழிக்குள் உள்ளடக்கப்படவில்லை. அவர்கள் இந்தியர் என்றே அழைக்கப்பட்டனர்.

### முதல் ஒதுக்கல்

இந்தியாவையும் இலங்கையையும் ஆட்சி புரிந்து வந்த ஆங்கிலேயர் உள்ளூர் பிரஜைகளையும் ஆட்சியில் பங்கேற்கச் செய்யும் வகையில் 1931 இல் வாக்குரிமையை வழங்கினர். வாக்குரிமையை வழங்கும் போது அண்மைய இந்திய வழித்தோன்றல்களான தோட்டத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படக்கூடாது என சிங்களத் தலைவர்களான எஸ்.டபிள்யு. ஆர்.டீ.பண்டாரநாயக்க, டி.எஸ். சேனாநாயக்க போன்றோரால் கூறப்பட்டது. எனினும் ஆங்கிலேயர் சிலவரையறைகளுடன் இந்திய வம்சாவளியினருக்கு வாக்குரிமையை வழங்கினர்.அத்துடன் இலங்கையில் அரசர் காலத்தில் நிலவிய கிராம சபை முறையை அறிமுகப்படுத்தினர். 1935 இல் கிராமசபை கட்டளைச் சட்ட சட்டத்திற்கு திருத்தச்சட்டம் கொண்டுவந்தனர். இச்சட்டத்திற்கமைய வாக்குரிமை பெற்ற மக்கள் கிராம சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்து கிராமசபையை நிருவகிக்கும் பொறுப்பினை ஏற்றனர். ஆனால் இச்சட்டம் கொண்டுவரப்பட்டவேளை கிராமசபை நிர்வாகத்தில் இந்திய தோட்டத்தொழிலாளர்களை ஈடுபட அனுமதியளிக்கக் கூடாது என எஸ்.டபிள்யு.ஆர்.டீ.

பண்டாரநாயக்க, டி.எஸ்.சேனாநாயக்க உள்ளிட்ட பல சிங்களத் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இச்சந்தர்ப்பத்தில் இந்தியத் தொழிலாளர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கு பொறுப்பாய் இருந்த இந்திய அதிகாரி சேர்.பாஜ்பாய் சிங்களத் தலைவர் எதிர்ப்பதற்கான காரணத்தை வினவினார். இதற்குப் பதிலளித்த எஸ்.டப்ள்யு.ஆர்.டீ. பண்டாரநாயக்க இந்தியத் தொழிலாளர்களுக்கு கிராமசபைகளில் பங்கு பற்றிய அனுபவமில்லை. ஆகையால் இவர்களுக்கு இவ்வுரிமையை வழங்க முடியாது எனக்கூறினார். இதற்குப் பதிலளித்த சேர்.பாஜ்பாய் இந்தியத் தொழிலாளர்கள் இந்திய கிராம பஞ்சாயத்தில் பங்கு கொண்டவர்கள். ஆகையால் அவர்களை இணைத்துக்கொள்ளலாம் எனக்கூறினார். ஆனால் இக்கருத்தினை இலங்கைத்தலைவர்கள் ஏற்கமறுத்ததுடன், இந்தியத் தொழிலாளர்களுக்கு அவ்வுரிமை வழங்கப்படவில்லை. இலங்கைத் தலைவர்களது இவ் ஜனநாயக மறுப்பு நடவடி க்கையைக் கண்டித்து சேர்.பாஜ்பாய் தென்னிந்தியத் தொழிலாளர்கள் இலங்கை செல்வதை தடைசெய்தார். இத்தடை உத்தரவு 1939 வரை அமுலிலிருந்தது.

இக்கிராம சபை கட்டளைச்சட்டத் திருத்தத்துடன் தோட்டங்கள் கிராமங்களிலிருந்து வேறுபடுத்தப்பட்டு தோட்ட முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. கிராமசபை நிர்வாகத்திலிருந்து தோட்டங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டன.

கிராமசபை நடவடிக்கைகளிலிருந்த இந்திய தோட்டத்தொழிலாளர்களை ஒதுக்குவதில் இலங்கையின் சிங்கள அரசியல் தலைவர்கள் வெற்றி கண்ட போதிலும் டொனமூர் ஆணைக்குழுவினரால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பின் கீழ் இந்தியத் தோட்டத்தொழிலாளர்களுக்கு மத்திய அரசில் பங்கு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. டொனமூர் ஆணைக்குழுவினால் அறிமுகப் படுத்தப்பட்ட சட்டசபைக்கு தமது பிரதிநிதியை தெரிவு செய்யும் வாய்ப்பு தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைத்தது. இதற்கமைய 1931க்கும் 1947இற்கும் இடைப்பட்டகாலத்தில் நான்கு பிரதிநிதிகளை சட்டசபைக்கு தெரிவு செய்யும் வாய்ப்பைப் பெற்றனர். பின்னர் 1940களின் பின்னிறுதியில் இலங்கை வந்த சோல்பரி ஆணைக்குழுவினர் விதந்துரைத்த அரசியலமைப்பின்படி இந்திய வம்சாவளித் தோட்டத்தொழிலாளர்கள் 1947ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்களில் தம் சார்பில் பாராளுமன்றத்திற்கு ஏழு பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்பினைப்பெற்றனர்.

## தொடர்ந்து ஒதுக்குதலுக்கு உள்ளாகும் மலையக தமிழ் மக்கள்

> பிரஜாவுரிமைப் பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் மலையக இளைஞர்களும் வடக்கு, கிழக்கு போராட்டத்துடன் இணைந்து விடுவர் என்ற ஜே.ஆர்.ஜெயவர்தன அரசாங்கத்தின் அச்சமே மலையக மக்களின் பிரஜாவுரிமையை துரிதப்படுத்த சட்டத்திருத்தத்தை 1986ஆம் ஆண்டு கொண்டுவர வைத்தது. ஆனாலும் நடைமுறைப்படுத்தலில் தாமதம் காட்டப்பட்டது

### குடியுரிமைப்பறிப்பு

இவ்வாறு மத்திய ஆட்சியில் பங்கேற்ற அண்மைய இந்திய வம்சாவளி தோட்டத்தொழிலாளர்களை வெறுமனே உரிமையில்லா உழைக்கும் பட்டாளமாக வைத்திருக்கும் நிலைப்பாட்டினைக்கொண்டிருந்த எஸ். டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் டி.எஸ். சேனாநாயக்கவும் தம் முயற்சியில் சற்றும் தளரவில்லை. 1947 இல் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்கிய பிரித்தானியர் 1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கினர். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தவுடன் சுதந்திர இலங்கையின் முதற் பிரதமராகும் வாய்ப்பு டி.எஸ். சேனநாயக்கவிற்கே கிட்டியது. சுதந்திர இலங்கையின் முதற் பிரதம மந்திரி தமது முதற் பணியாக இந்திய வம்சாவளி மலையகத் தோட்டத் தொழிலாளர்களை குடியுரிமையற்றவர்களாக்கும்முயற்சியில்ஈடுபட்டார். சுதந்திர இலங்கையின் முதல் சட்டமாக குடியுரிமைச் சட்டத்தினை 1948 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதி அறிமுகப்படுத்தினார். இச்சட்டத்தின் மூலம் இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் குடியுரிமையற்றவர்களாக்கப்பட்டனர். இச்சட்டம் முதல் வாசிப்பிற்கு எடுத்துக்கொள்ளப் பட்டவேளை இந்தியத் தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய இலங்கை - இந்திய காங்கிரஸ், இடதுசாரிக்கட்சிகளான கம்யூனிஸ்ட், சமசமாஜக் கட்சிகள் மற்றும் வடகிழக்கு வாழ் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ்க் காங்கிரஸ் என்பன எதிர்ப்பினைத் தெரிவித்தன. பின்னர் இரண்டாவது வாசிப்பின்போது அச்சட்டத்திற்கு தமிழ்க் காங்கிரஸின் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் தமது ஆதரவினை வழங்கலானார். திரு. ஜி.ஜி.யின் நிலைப்பாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவித்த மற்றுமொரு தலைவரான தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் இக்காட்டிக்கொடுத்தலை ஒரு காரணமாக முன்வைத்து அக்கட்சியிலிருந்து வெளியேறினார். இன்று இந்தியத் தமிழ்த் தொழிலாளர்களின் உரிமையைப்பறித்தவர்கள் நாளை பூர்வீகத் தமிழரின் உரிமைகளையும் பறிக்கலாம் எனக்கூறி தமிழரசுக்கட்சி எனும் பெயரில் புதிய கட்சியை 1952 இல் ஆரம்பித்தார். அக்கட்சியின் கொள்கைப்பிரகடனத்தில் இந்திய வம்சாவளி மலையக மக்களின் குடியுரிமையை ஒரு கோரிக்கையாக முன்வைத்தார்.

ஐந்து தசாப்தங்களாகியும் நாடற்றவர் பிரச்சினையை முழுமையாகத்

தீர்ப்பதற்கு குடியுரிமை மறுப்பிற்கெதிராக பாராளுமன்றத்தில் குரலெழுப்பிய கட்சிகள், மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கவில்லை. பாராளுமன்றத்தில் இம்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கை-இந்திய தொழிலாளர் காங்கிரஸ் (இன்றைய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்) 1952 இல் சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொண்டது. இப்போராட்டத்தை பலாத்காரத்தை மேற்கொண்டு அரசாங்கம் முறியடித்தது. இந்நடவடிக்கையுடன் மக்கள் போராட்டத்தை இ.தொ.கா. நிறுத்திக்கொண்டது. இடதுசாரிக் கட்சிகள் எவ்வித போராட்டத்தையும் மேற்கொள்ளவில்லை. இம்மக்கள் மத்தியில் செயற்பட்டுவந்த இலங்கை திராவிடர் கழகம் மட்டும் ஆர்ப்பாட்டக் கூட்டங்களை மலையகம் முழுவதும் அவ்வப்போது நடத்தி வந்தது. இதன் உச்சகட்ட நடவடிக்கையாக 1963 ஆம் ஆண்டு பண்டாரவளையில் நாடற்றோர் மறுப்பு மகாநாட்டை நடத்தியது. இம்மகாநாடு பாராளுமன்ற உறுப்பினர் கே.எம்.பி. இராஜரத்னா தலைமையிலான சிங்கள இனவெறியர்களால் முறியடிக்கப்பட்டது. மகாநாட்டில் கலந்துகொண்டோர் இனவெறியர்களால் தாக்கப்பட்டனர். பண்டாரவளைக்கு அண்மையிலுள்ள சிறு நகரங்களிலுள்ள தமிழ் மக்களும் தாக்கப்பட்டனர். இச்சிறு இனக்கலவரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றது. இவ்விவாதங்களின்போது நாடற்றோர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதன் அவசியம் பற்றி வலியுறுத்தப்பட்டது.

இதன் விளைவாக 1964ஆம் ஆண்டு இந்தியாவிற்கு விஜயத்தை மேற்கொண்ட அன்றைய பிரதமர் திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்க இந்தியப்பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியுடன் ஒரு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இவ்வொப்பந்தத்தின் படி 300,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கவும் இந்தியா 525,000 பேருக்கு குடியுரிமை வழங்கவும் இணக்கம் காணப்பட்டது. எஞ்சியிருக்கும் 150,000 பேரின் பிரச்சினைக்கு பிறகு தீர்வு காணப்படும் என இணக்கம் காணப்பட்டது. மேலும் இவ்வொப்பந்தத்தினை 15 வருடங்களுக்குள் நடத்தி முடிப்பதென இணக்கம் காணப்பட்டது. இந்திய வம்சாவளி மலையகத் தமிழரின் கருத்துகளைக் கேட்டறியாது செய்யப்பட்ட இவ்வொப்பந்தத்தினை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் இலங்கைத் திராவிடர் கழகம் என்பன எதிர்த்ததுடன், இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டாமெனக் கோரின. சில மாதங்களின் பின்னர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தமது முடிவினை மாற்றிக்கொண்டு இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும்படி தோட்டத் தொழிலாளர்களைக் கோரியது. இலங்கைத் திராவிடர் கழகம் இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டாம் எனும் கோரிக்கையைத் தொடர்ந்து முன்னெடுத்தது. எவ்வாறாயினும் இவ்வொப்பந்தத்திற்கமைய 600,000பேர் இலங்கைக்கு விண்ணப்பித்திருந்தனர். இதன் பின்னர் மீண்டும் ஒரு ஒப்பந்தம் 1974இல் இலங்கைப்பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கவிற்கும் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி இலங்கை 75,000 பேருக்கு குடியுரிமையை வழங்கவும் இந்தியா 75,000 பேருக்கு குடியுரிமையை வழங்கவும் இணக்கம் காணப்பட்டது.

**தொடர்ந்து ஒதுக்குதலுக்கு உள்ளாகும் மலையக தமிழ் மக்கள்**

இப்பின்புலத்தில் இவ்வொப்பந்தங்களின் விளைவாக கணிசமான பிரிவினர் வாக்குரிமை பெற்றனர். இதன் விளைவாக 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் 1947க்குப் பின்னர் முதலாவது பாராளுமன்றப் பிரதிநிதியை நுவரெலிய மாவட்டத்திலிருந்து மலையக மக்கள் தெரிவு செய்தனர். திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் பாராளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டார். இச்சம்பவம் மலையக மக்கள் மத்தியில் இலங்கை நமது நாடு எனும் நம்பிக்கையை மீண்டும் தோற்றுவித்தது. எனினும் 1977ஆம் ஆண்டு பொதுத் தேர்தலைத் தொடர்ந்து நடைபெற்ற இனக்கலவரத்தின் போது மலையகத் தமிழர் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இக்கலவரத்தின் போது கண்டி அந்தானை தோட்டத்தைச்சார்ந்த இளம் பெண் தொழிலாளி சக சிங்களத் தொழிலாளர்களால் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டதுடன், பல மலையகத் தமிழர்கள் கொல்லப்பட்டனர். இதனால் இலங்கை குடியுரிமைக்கு விண்ணப்பித்த சிலர் அதனை நிராகரித்துவிட்டு இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கலாயினர். இக்கலவரத்தின் பின்னர் இந்தியக் குடியுரிமைக்காக விண்ணப்பித்தவர்களின் குடியகல்வு வேகமடைந்தது.

இந்நிலையில், 1978ஆம் ஆண்டு திரு.தொண்டமான் அவர்கள் ஜே.ஆர்.ஜயவர்தனவின் அரசாங்கத்தில் அமைச்சராகினார். இது மலையக மக்கள் மத்தியில் மீண்டும் நம்பிக்கையை ஊட்டியது. இதன் பின்னர் 1981இல் இரத்தினபுரி மாவட்டத்தில் மலையக மக்கள் சிங்களவர்களால் தாக்கப்பட்டதுடன், அதனைத்தொடர்ந்து 1983ஆம் ஆண்டு ஜூலையில் பாரிய இனக் கலவரம் நடைபெற்றது. தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட வட கிழக்குத் தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களான வட கிழக்குப் பிரதேசங்களுக்குச் சென்றனர். பாரிய உயிரிழப்புகளைச் சந்தித்த இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் இந்தியாவின் தமிழகமே தமது சொந்த ஊர் எனக்கருதலாயினர். இதே வேளை ஜே.ஆர். இன் அரசாங்கத்தில் அமைச்சராகவிருந்த திரு. தொண்டமான் இந்தியாவிற்குச் சென்று ஒட்டுமொத்த மலையக மக்களை தமிழ் நாட்டின் கிராமங்களில் குடியமர்த்தும்படி கோரினார்.

எனினும் இவ்வெண்ணம் பின்னர் மாற்றமடையலாயிற்று. வடக்கில் முனைப்படைந்த ஆயுதப்போராட்டம் மற்றும் மலையக முற்போக்குச்

சக்திகள் முன்வைத்த ''மலையகமே தமது தாயகம்'' எனும் கருத்து இம் மாற்றத்திற்கு காரணமாயமைந்தது.

இதேவேளை, 1985 ஆம் ஆண்டு வடக்கின் போராளிக்குழுக்களுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற ''திம்பு'' கலந்துரையாடலின்போது போராளிக் குழுக்களினால் முன்வைக்கப்பட்ட நான்காம் கோரிக்கையில் நான்காவது கோரிக்கையாக மலையகத் தமிழ் மக்களின் பிரஜாவுரிமை கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது மலையக மக்கள் மத்தியில் உளரீதியாகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதேவேளை ஜே.ஆர். அரசாங்கத்திற்கும் இது தாக்கத்தை ஏற்படுத்தியது. இப்பிரச்சினையைத் தீர்க்காவிடில் மலையக இளைஞர்கள் வடக்குப் போராட்டத்துடன் இணைந்து விடுவர் என ஜே. ஆரின் அரசாங்கம் அஞ்சியது. திம்பு கலந்துரையாடலின் பின்விளைவாக ஜே.ஆர். அவர்கள் மலையக மக்களின் நாடற்ற நிலையை நீக்கும் வகையில் பிரஜாவுரிமைச் சட்டத்திற்கு 1986ஆம் ஆண்டு பிரஜாவுரிமை வழங்குதலை துரிதப்படுத்த திருத்தமொன்றினைக் கொண்டு வந்தார். ஆனால் இதனை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் காட்டப்பட்டது. இதனை எதிர்த்து திரு.தொண்டமான் தலைமையிலான இ.தொ.கா. சத்தியாக்கிரகப் போராட்டத்தை 1988இல் நடத்தியது. இதன் விளைவாக இத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தச் செய்யும் வகையில் 1988ஆம் ஆண்டு மீண்டும் ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் மூலம் மேலும் இலங்கை குடியுரிமைக்கு விண்ணப்பித்த பிரிவினருக்கு குடியுரிமை கிடைத்தது. ஆயினும் இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பித்து பின்னர் இலங்கையில் வாழ நினைத்தவர்களுக்கு இத்திருத்தச் சட்டம் மூலம் குடியுரிமை கிடைக்கவில்லை. இவர்களுக்கும் குடியுரிமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கை மலையகத்தில் வலுப்பெற்றது. மலையகக் கட்சிகளும் சிவில் அமைப்புகளும் இக்

**தொடர்ந்து ஒதுக்குதலுக்கு உள்ளாகும் மலையக தமிழ் மக்கள்**

கோரிக்கை சார்பாக தொடர்ச்சியாக ஏற்புரை செய்து வந்தன. இறுதியாக 2003ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பிரஜாவுரிமை திருத்தச் சட்டத்துடன் நாடற்றோர் பிரச்சினை சட்ட ரீதியாக முழுமையாகத் தீர்க்கப்பட்டது. ஆனால் தம்மை வாக்காளராகப் பதிவு செய்வதில் இம்மக்கள் தொடர்ந்து பிரச்சினையை எதிர்கொண்டு வருகின்றனர். இலங்கையின் வாக்காளர் பட்டியலில், வாக்காளர் விபரம் ஒவ்வொரு வருடமும் பதிவு செய்யப்படுகின்றது. ஏலவே வாக்காளர் பட்டியலில் பதிவு செய்த ஒருவர் குறிப்பிட்ட வருடத்தில் பதிவு செய்யாவிடின் மறுவருடம் பதிவு செய்யலாம். ஆனால் இந்திய வம்சாவளி மக்கள் பதிவு செய்யாது மறு வருடம் பதிவு செய்யச் சென்றால் அவர்கள் தாம் இலங்கை நாட்டவர் எனும் சத்தியக்கடிதத்தை வழங்க வேண்டும்.

### நாட்டின் பிரஜையானாலும் அபிவிருத்தியில் பங்கில்லை

1935 ஆம் ஆண்டு கிராமசபை கட்டளைச்சட்டம் கொண்டுவந்தவேளை தோட்டத்தொழிலாளர்களை அச் சபைகளுக்குள் உள்வாங்குவதை அன்றைய சிங்களத் தலைமைகள் தடுத்தமைக்கான பிரதான காரணம் தோட்டத் தொழிலாளர் சிங்கள மக்களுக்கு இணையாக அபிவிருத்திக்கான உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகளை அனுபவிக்க இடமளிக்கக் கூடாது என்பதாகும். இதனை உறுதி செய்யும் வகையில் சுதந்திரம் பெற்றவுடன் பிரஜாவுரிமைச் சட்டத்தை அறிமுகப்படுத்தி பத்து லட்சம் மக்களை நாடற்றவராக்கி ஐந்து தசாப்தங்களாக அபிவிருத்திக்கான எவ்வித உரிமைகளையும் அனுபவிக்க முடியாதவர்களாக்கினர். சுதந்திரத்திற்குப் பின் வகுக்கப்பட்ட பத்தாண்டு மற்றும் ஐந்தாண்டு திட்டங்களிலிருந்து தோட்டத்துறையைச் சார்ந்த மக்கள் ஒதுக்கி வைக்கப்பட்டனர். 1977ஆம் ஆண்டின் பின்னர் மலையக மக்கள் அரசியல் ரீதியாக தமது பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்திற்கும் ஏனைய மக்களவைகளுக்கும் தெரிவு செய்த போதிலும் அபிவிருத்திக்கான வாய்ப்பினைப் பெறுவதில் தடைகளை எதிர் கொண்டனர். 1988கள் முதல் மாகாண சபை மற்றும் பிரதேச சபைகளுக்கு தம் பிரதிநிதிகளை தெரிவு செய்து வருகின்றனர். ஆனால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஏனைய இனப்பிரதிநிதிகளைப்போல் சுதந்திரமாக தம்மக்களுக்கு சேவையாற்ற முடியவில்லை. முதலாவது மத்திய மாகாணசபை ஒன்றுகூடலின்போது தோட்டக்குடியிருப்புகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும் அதிகாரம் மாகாணசபைக்கு இல்லையெனக் கூறப்பட்டது.

> புதிதாக அறிமுகப் படுத்தப்பட்ட பிரதேச சபைகளுக்கான தேர்தலின் போது மலையக பிரதேசத்தில் இரு பாரிய பிரதேச சபைகளின் ஆட்சியதிகாரத்தை மலையகக்கட்சிகள் கைப்பற்றின. ஆனால் பிரதேச சபைகளின் நிதியைக் கொண்டு தோட்ட குடியிருப்புகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள சட்ட ரீதியான அதிகாரம் இல்லை

மாகாணசபைத் தேர்தலைத்தொடர்ந்து புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேசசபைகளுக்கான தேர்தலின் போது மலையகப் பிரதேசத்தில் காணப்பட்ட இரு பாரிய பிரதேச சபைகளின் ஆட்சியதிகாரத்தை மலையகக் கட்சிகள் கைப்பற்றின. ஆனால் இங்கும் பிரதேச சபைகளின் நிதியைக்கொண்டு தோட்டக்குடியிருப்புப் பகுதிகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள சட்ட

ரீதியான அதிகாரம் இல்லையெனக் கூறப்பட்டது.

ஏலவே குறிப்பிட்டதன்படி முப்பது களில் கொண்டுவரப்பட்ட கிராம சபை திருத்தச் சட்டத்தின்படி தோட்டக்குடியிருப்புகளும் அவற்றில் வாழும் மக்களும் கிராம நிர்வாகத்திலிருந்து விலக்கப்பட்டனர். இவ் விலக்கலானது சுதந்திரத்திற்குப்பின்னர் தொடர்ந்து பேணப்பட்டதுடன், 1987 இல் புதிதாக உருவாக்கப்பட்ட பிரதேச சபைகள் சட்டத்திலும் உள்ளடக்கப்பட்டது. பிரதேச சபை சட்டத்தின்33ஆவதுஇவ்வுறுப்புரையின்படி மலையக மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவரால் பிரதேச சபையின் நிதியைக்கொண்டு தோட்டக்குடியிருப்பு பகுதிகளில் அபிவிருத்தி வேலைகளைச் செய்ய முடியாது. இதனால் மாகாண சபைக்குத் தெரிவு செய்யும் பிரதிநிதிகளினாலும் தோட்டக்குடியிருப்புகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள முடியாது. இருப்பினும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டினைக் கொண்டு சிறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியும் என்பதால் இவ்வடிப்படை உரிமை மீறல் விடயத்தின்பால் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரிதும் அக்கறை செலுத்துவதில்லை.

### பிரதேச சபை நிதியினை தோட்டக்குடியிருப்புகளின் அபிவிருத்திக்கு பயன்படுத்தியமையினால் பிரதேச சபை கலைப்பு

2007ஆம் ஆண்டு உடபளாத்த எனும் பிரதேச சபைக்கு தெரிவு செய்யப்பட்ட மலையகப் பிரதிநிதிகள் பிரதேச சபையின் அங்கீகாரத்துடன் பிரதேச சபை நிதியைக் கொண்டு நிவ்பீகொக் மற்றும் மெல்போர்ட் தோட்டங்களில் தண்ணீர்த் தொட்டி மற்றும் படிக்கட்டுகளை நிர்மாணித்தனர். இச்சபை உறுப்பினர்கள் பிரதேச சபை நிதியைப் பிழையாகக் கையாண்டுள்ளனர் என மத்திய மாகாண சபை முதல்வரால் கலைக்கப்பட்டது.

**தொடர்ந்து ஒதுக்குதலுக்கு உள்ளாகும் மலையக தமிழ் மக்கள்**

கலைக்கப்பட்டதற்கான காரணங்களில் பின்வரும் காரணங்கள் குற்றமாகக் குறிப்பிடப்பட்டது.

1. நிவ் பீகொக் தோட்ட குடியிருப்புகளுக்கு குடி தண்ணீர்த் தொட்டியை அமைத்துக் கொடுத்தல்
2. மெல்போர்ட் தோட்டத்திற்குச் செல்லும் பாதையை செப்பனிடல்
3. நிவ் பீகொக் தோட்டக்குடியிருப்புகளுக்கு தண்ணீர் தாங்கி ஒன்றை அமைத்தல் என்பன சிலவாகும்.

உடபளாத்தசபை கலைக்கப்பட்டதுடன், மலையக சிவில் அமைப்புகள் பரப்புரையை மேற்கொண்டன. அண்மையில் நடந்த மாகாண சபைத் தேர்தலின்போது அனைத்து மலையகக் கட்சிகளும் பிரதேச சபை சட்டத்தின் உறுப்புரை 33 ஐ நீக்க செயற்படுவதாக சூளுரைத்தனர். ஆனால் இதுவரை இவ்வுறுப்புரை நீக்கப்படாமலேயே இருக்கின்றது.

> தேசிய நீரோட்டத்திலிருந்து திட்டமிட்டே ஒதுக்கப்பட்டு வந்த மலையகத் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் அவ்வப்போது தேசிய மற்றும் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக அடிப்படைப்பிரச்சினைகளுக்கு தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், அந்த மக்களை அபிவிருத்தியிலிருந்து ஒதுக்குவதற்காக அமைக்கப்பட்ட அரசாங்க நிர்வாகப் பொறிமுறை நீக்கப்படாமல் அவ்வாறே இருக்கிறது

### அரச செயலக சேவைகளைப் பெறுவதில் ஒதுக்கல்

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட அரச பொதுச் சேவைகள் நிர்வாக முறையே இன்றும் சிலமாற்றங்களுடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மாநகரங்களைச் செயலக மையமாகக் கொண்டமைந்த அரச செயலக சேவைகள் 1987 முதல் பிரதேச செயலகங்களுக்கு பகிரப்பட்டன. இதற்கமைய பிரதேச செயலாளரின் கீழ் மத்திய அமைச்சுகளைச் சார்ந்த உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டு அரச சேவைகள் மக்களைச் சென்றடையும் பொறிமுறை உருவாக்கப்பட்டது. இதற்கமைய ஒவ்வொரு செயலகத்திலும் குறைந்தது 23 கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்கள உத்தியோகத்தர்கள் கிராமங்களுக்குச் சென்று அரச பொதுச்சேவைகள் மக்களைச் சென்றடையச் செயற்படுகின்றனர். ஆனால் இவ் உத்தியோகத்தர்கள் ஒருவரேனும் தோட்டங்களுக்குச் செல்வதில்லை. தோட்டங்களுக்கு இவ் உத்தியோகத்தர்கள் செல்ல வேண்டும் என இதுவரை அரசாங்கம் பணிக்கவும் இல்லை. அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்வதில்லை. இதே வேளை அரசாங்கத்தால் வழங்கப்படும் வாழ்வாதார ஊக்குவிப்புத் திட்டங்களும் இம்மக்களுக்கு கிடைப்பதில்லை. கைவிடப்பட்ட அல்லது எவ்வித வாழ்வாதாரங்களும் இல்லாதவர்களுக்கு கோழி மற்றும் ஆடு வளர்த்தல் உள்ளிட்ட சுயவருமானத் திட்டங்களை பல்வேறு பிரதேச செயலகங்கள் ஊடாக அரசாங்கம் அமுல்படுத்துகின்றது. மேலும் இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சிகளும் சுய வருமான திட்டங்களும் வழங்குகின்றது. அத்துடன் முதியோருக்கான வாழ்வாதார திட்டங்களையும் அமுல்படுத்தி வருகின்றது.ஆனால் இவையனைத்தும் இம்மக்களை சென்றடைவதில்லை. மாறாக ஒரு சிலர் வலுக்கட்டாயமாக இவற்றினைப்பெறுவதற்கு செயலக உத்தியோகத்தர்களை நாடினாலும் சட்டச் சிக்கலைக் காரணம் காட்டி அவற்றினை வழங்குவதில்லை.

அண்மையில் கம்பளை நகரத்திற்கு அண்மையிலுள்ள வவுகபிட்டிய கிரா

மத்தினைச் சார்ந்த வருவாயற்ற முதியவர்களுக்கு கோழி வளர்ப்பிற்கான நிதி வழங்கும் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. வவுகபிட்டிய கிராமப்பிரிவின் கீழ் சோகம தோட்டத்தின் ஜீ.சி பகுதி (டிவிசன்) இணைக்கப் பட்டுள்ளது. இதனால் ஜீ.சி. பகுதி தோட்டத்தில் பணியாற்றி ஓய்வு நிலையிலுள்ள முதியவர்கள் வாழ்வாதார உதவியைப் பெறுவதற்காக கிராமசேவகரினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்திற்குச் சென்றுள்ளனர். அக்கூட்டத்தின்போது ஏனைய கிராமங்களைச்சார்ந்த முதியவர்களுக்கு கோழி வளர்ப்பிற்கான நிதி வழங்கப்பட்டது. ஆனால் சோகம ஜீ.சி. பகுதியை (தோட்டத்தை) வசிப்பிடமாகக் கொண்ட முதியவர்களுக்கு நிதி வழங்கப்படவில்லை. முதியவர்கள் கிராம அலுவலரிடம் கேட்ட போது கிராம அலுவலர் மிகவேதனையுடன் சட்டத்திற்கமைய தோட்டப் பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைய முடியாது எனக்கூறியுள்ளார். இதேபோல் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம் உடபளாத்த செயலகத்துடன் தொடர்புகொண்டு நிவ் பீகொக் ஒபி மற்றும் கலுகல்ல எனும் தோட்டங்களைச்சார்ந்த யுவதிகளுக்கு கொரிக்கும் உணவுப் பண்டங்களைத் தயாரிக்கும் பயிற்சியை பிரதேச செயலகம் ஊடாக பெற்றுக்கொடுத்தது. வெற்றிகரமாக பயிற்சியை முடித்த யுவதிகளுக்கு பண்டங்களை விற்பதற்கான வியாபார உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கு வதிவிட முகவரியை யுவதிகளிடம் செயலக அதிகாரிகள் கேட்டுள்ளனர்.யுவதிகள் தமது தோட்ட முகவரியை கொடுத்துள்ளனர். அதனைப் பெற்றுக் கொண்ட பதிவு செய்யும் அதிகாரி அதனை நிருபிக்கும் வகையில் தோட்ட அதிகாரியிடமிருந்து கடிதம் ஒன்றினை கொண்டுவரும்படி கோரியுள்ளார். தோட்ட அதிகாரியோ தோட்டத்தில் வேலை செய்யாத யுவதிகளுக்கு தம்மால் வதிவிட கடிதம் வழங்க முடியாது எனக்கூறி விட்டார். இதனால் அந்தயுவதிகளுக்கு வியாபாரப் பதிவினைப் பெற முடியாது போயுள்ளது. ஆனால் இப் பிரச்சினை கிராமத்தில் வசிக்கும் இளைஞர், யுவதிகளுக்கு கிடையாது.

**தொடர்ந்து ஒதுக்குதலுக்கு உள்ளாகும் மலையக தமிழ் மக்கள்**

## தோட்டங்களுக்கான சிறப்பு பத்தாண்டுத் திட்டம்

சுதந்திரத்திற்கு முன்னும் பின்னரும் தேசிய ரீதியான அபிவிருத்தி திட்டங்களிலிருந்த ஒதுக்கப்பட்ட மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கை ஐம்பதுகளில் மலையக தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டது. அதன் முதற் கட்டமாக ஐம்பதுகளில் முதன்மைக் கோரிக்கையாக பிரித்தானியர் வசமிருந்த பெருந்தோட்டங்களை அரசமயமாக்கவேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டது. வைத்திய சேவைகள், கல்வி உட்பட அனைத்து அரச சமூக சேவைகளும் தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கும் வழங்க வேண்டும் எனும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ஐம்பதுகளில் முன்வைக்கப்பட்ட இக்கோரிக்கை 1972-75களிலேயே நடைமுறைப் படுத்தப்பட்டது. அதாவது தோட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்டன. ஆனால் இதனை நடைமுறைப்படுத்துகையில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் கடும் எதிர்விளைவுகளுக்கே முகம் கொடுத்தனர். கிராமங்களுக்கண்மையிலிருந்த தோட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்ட வேளை ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் தோட்டங்களிலிருந்து பலாத்காரமாக சிங்கள அரசியல் வாதிகளின் உதவியுடன் அடித்து விரட்டப்பட்டனர். தோட்ட சுவீகரிப்பின் பின்னர் காணித்துண்டுகளை பிரித்தளிக்கும் போது தோட்டத் தொழிலாளர்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை. மாறாக தோட்டக்குடியிருப்புகளில் எவ்வித வசதிகளுமின்றி வாழ அனுமதியளிக்கப்பட்டது. இவ்வாறு வாழ அனுமதிக்கப்பட்டவர்கள் எவ்வித வசதிகளுமின்றி இடிந்த லயக்காம்பிராக்களில் வாழ்வதை இன்றும் காணலாம். சுவீகரிக்கப்பட்ட தோட்டங்களின் பாடசாலைகள் தேசிய கல்வித்திட்டங்களின் கீழ் கொண்டுவரப்பட்டது. ஆயினும் வைத்திய சேவை உட்பட அனைத்துச் சேவைகளும் தோட்ட முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்டது. பாரிய தோட்டங்கள் அனைத்தும் இரு அரசாங்க கூட்டுத் தாபனங்களின் கீழ் கொண்டுவரப்பட்டபோதிலும் அம்மக்களுக்கான பொதுச் சேவைகளை வழங்கும் பொறுப்பினை மீண்டும் தோட்டங்களுக்கு வழங்கியதன் மூலம் மலையக மக்களை ஒதுக்கும் வேலை தொடரப்பட்டது. பல தோட்டங்களும் தோட்டப்பாடசாலைகளும் மூடப்பட்டன.

## 1992இல் மீண்டும் தனியார் மயமாக்கலும் ஒதுக்கலும்

அரசுடைமையாக்கப்பட்ட தோட்டங்கள் நட்டமடைந்தமையைச் சுட்டிக் காட்டி மீண்டும் தோட்டங்கள் தனியார் கம்பனிகளுக்கு 1992இல் வழங்கப்பட்டன. இச்சந்தர்ப்பத்தில் தோட்ட வைத்திய சேவையை தேசிய வைத்திய சேவையுடன் இணைக்கும் படியும் மற்றும் தேசிய பொது வேலைத்திட்டமிடல்களின் போது மலையகத் தோட்ட மக்களையும் உள்ளடக்குக என்ற கோரிக்கையை தொழிற்சங்கங்களும் சிவில் அமைப்புகளும் முன்வைத்தன. இக்கோரிக்கைக்கு அரசாங்கம் செவிசாய்க்கவில்லை. தோட்ட மக்களுக்கான சமூக சேவைகளை அரசின் பொது வேலைத்திட்டத்தின் கீழ் உள்ளடக்காது மீண்டும் தோட்ட மக்களை தேசிய சமூக சேவைகளிலிருந்து ஒதுக்கும் நோக்கத்துடன் தோட்ட மக்களது சமூக சேவைகளை கவனிக்கவென தனியான அமைப்பொன்றை உருவாக்கியது. டிரஸ்ட் என சுருக்கமாக அழைக்கப்படும் (தோட்டக் குடியிருப்பு மற்றும் மனித வள அபிவிருத்தி நிறுவனம்) நிறுவனம்

உருவாக்கப்பட்டு தோட்ட குடியிருப்புகளின் சுகாதாரம், குடியிருப்பு திருத்த வேலைகள் மற்றும் சமூக நலமேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொறுப்பு இந்நிறுவனத்திடம் வழங்கப்பட்டது. இந்நிறுவனத்தின் சேவைகள் பாரிய கம்பனிகளின் கீழுள்ள 402 தோட்டங்களை மட்டுமே சென்றடைகின்றது. இதன் சேவை 200 தனியார் தோட்டங்கள் மற்றும் 25 ஆயிரம் சிறு தோட்ட உடைமையாளர்களின் கீழ் பணியாற்றும் மலையக மக்களைச் சென்றடைவதில்லை.

தோட்ட உட்கட்டமைச்சின் நீக்கமும் பத்தாண்டு அபிவிருத்தித் திட்ட நீக்கமும் இவ்வொதுக்கலைக் கருத்திற் கொண்டு மலையக மக்களின் அபிவிருத்தியை மேம்படுத்தவென தனியான அமைச்சொன்றினை மறைந்த அமைச்சர் சௌமிய மூர்த்தி தொண்டமான் முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிக்காவிடம் கோரினார். திருமதி சந்திரிக்கா தோட்ட உட்கட்டமைச்சு எனும் அமைச்சினை வழங்கினார். இவ்வமைச்சுக்கான நிதியினைப் பெறுவதில் பல்வேறு சிரமங்களை திரு. தொண்டமான் எதிர்கொண்ட போதிலும் இவ்வமைச்சின் ஊடாக சில அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதேவேளை அமைச்சின் ஊடாக குறை அபிவிருத்தியைக் கொண்ட மலையகத் தோட்ட மக்கள் நாட்டின் ஏனைய மக்களுடன் சமநடை போடும் வகையில் பத்தாண்டு திட்டமொன்று சிவில் அமைப்புகளின் பங்களிப்புடன் 2007ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. இத்திட்டத் தயாரிப்பானது ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட அமைப்பின் அனுசரணையுடனே தயாரிக்கப்பட்டது. ஆனால், இவ்வமைச்சு இன்றைய அரசாங்கத்தால் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதுடன், பத்தாண்டு திட்டமும் கைவிடப்பட்டுள்ளது.

## எதிர்காலச் சவால்களும் மலையகத் தலைமைகளும்

மலையக மக்களது அரசியல் வரலாற்றினைப் பொறுத்தவரை 1935 முதல் தேசிய நீரோட்டத்திலிருந்து திட்டமிட்டு ஒதுக்கப்பட்டே வருகின்றனர். அவ்வப்போது தேசிய மற்றும் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக மலையக மக்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், இம்மக்களை அபிவிருத்தியிலிருந்து ஒதுக்குவதற்காக அமைக்கப்பட்ட அரசாங்க நிர்வாகப்பொறிமுறை நீக்கப்படாமல் அவ்வாறே இருக்கின்றது.

## தொடர்ந்து ஒதுக்குதலுக்கு உள்ளாகும் மலையக தமிழ் மக்கள்

குடியுரிமைப் பிரச்சினை தீர்க்கப்பட்டபோதிலும் இன்று அரசாங்கத் தொழில் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகையில் நீங்கள் வம்சாவளி பிரஜையா அல்லது பதிவுப் பிரஜையா எனக்கேட்கப்படுகின்றது. நான்கு தலைமுறைகளைக் கடந்த பின்னரும் மலையகத் தமிழர் பதிவுப் பிரஜையென்றே குறிப்பிட வேண்டியுள்ளது. இது இவர்களை இரண்டாம் தரப் பிரஜையாக கணிக்க வாய்ப்பளிக்கின்றது.

தேசிய பொது வேலைத்திட்டங்களைத் திட்டமிடுகையில் தோட்டத் துறை குடியிருப்புகள் உள்ளடக்கப்படுவதில்லை. 1997 முதல் மலையக மக்கள் சார்பாக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்த போதிலும் பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் முன்வைக்கப்படும் போது தோட்டக்குடியிருப்புப் பகுதிகளை உள்ளடக்க முடியாதுள்ளது. ஆகக்குறைந்தது பத்தாண்டுத் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதியைக் கூட பெறமுடியாதுள்ளது.

குடியுரிமைப் பிரச்சினை தீர்க்கப்பட்ட போதிலும் அரசாங்க தொழில் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற போது நீங்கள் வம்சாவளிப் பிரஜையா அல்லது பதிவு பிரஜையா என்று கேட்கப்படுகின்றது. நான்கு தலைமுறைகளைக் கடந்த பின்னரும் மலையகத் தமிழர்கள் தங்களை பதிவுப் பிரஜை என்று கூறவேண்டியுள்ளது

பொதுச் சுகாதார சேவைத்திட்டத்தில் மலையகத் தோட்ட வைத்திய சேவை இதுவரை இணைக்கப்படாமலுள்ளது. காலத்திற்குக் காலம் அரசாங்கத்தால் நிலமற்ற மக்களுக்கு காணி வழங்கப்படுகின்றது. ஆனால், முழுமையாக நிலமற்ற சமூகமாக காணப்படும் மலையகத் தமிழர்களுக்கு காணிகள் வழங்கப்படுவதில்லை. இதேவேளை இம்மக்களின் ஒரு பிரிவினராக மாநகர, நகர மற்றும் பிரதேசசபைகளில் தொழில் புரியும் இந்திய வம்சாவளித் தமிழர்களும் இதே வகையான ஒதுக்கலுக்குட்பட்டே வாழ்கின்றனர். இவர்களது குடியிருப்புகளும் லயங்களாகவும் குடிசைகளாகவும் காணப்படுகின்றன. இவர்களுக்கும் நகர வீட்டுத்திட்டங்களின் போது வீடுகள் வழங்கப்படுவதில்லை. மேற்கூறப்பட்ட அடிப்படை உரிமைகளை இன்றைய மலையக மக்கள் அனுபவிக்க வேண்டுமாயின் மலையக அரசியல் தலைமைகள் மற்றும் தொழிற்சங்க அரசியற் கட்சிகள் மத்தியில் மூலஉபாய ரீதியான வேலைத்திட்டம் இருக்கவேண்டும். இவ்வேலைத்திட்டமானது மேற்கூறப்பட்ட அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்வதை கொண்டமைந்ததாகவும் காலஎல்லையைக் கொண்டதாகவும் அமைய வேண்டும்.

இப்பின்புலத்தில் இன்றைய மலையக மக்கள் தமது அடிப்படைப் பிரச்சினைகளை வென்று கொள்ள வேண்டுமாயின் அனைத்து மலையகத் தலைமைகள் மத்தியில் உரிமைகளை

வென்றெடுப்பது தொடர்பாக ஒரு இணக்கப்பாடு உருவாகுதல் அவசியமாகும். அதாவது அனைத்து மலையகக் கட்சிகளும் தமது கட்சி வேலைத்திட்டங்களில் பின்வரும் விடயங்களை முதன்மை விடயங்களாக முன்வைத்து அதனை வென்றெடுக்கவென தனித்தோ அல்லது கூட்டாக இணைந்து நாட்டின் கொள்கை வகுப்பாளர் மத்தியில் ஏற்புரை செய்வதுடன், மக்கள் மத்தியிலும் ஏற்புரை செய்ய வேண்டும். இவ் ஏற்புரை செயற்பாட்டில் மலையக சிவில் அமைப்புகளையும் ஒன்றிணைத்துக்கொள்ள வேண்டும். அதே வேளை சிவில் அமைப்புகளும் இவ்வடிப்படை விடயம் தொடர்பாக ஏற்புரையை மேற்கொள்ள வேண்டும். வேலைத்திட்டம் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்

1. நாட்டில் காணப்படும் பிரஜாவுரிமைச் சட்டத்திற்கு திருத்தம் ஒன்றினை கொண்டு வரச்செய்வதன் மூலம் அண்மைய இந்திய வம்சாவழி மக்களை பதிவுப் பிரஜை என அடையாளப்படுத்துவதை நீக்குதல். அதேவேளை மலையகத் தமிழர் என அடையாளப்படுத்தும் படி கோரல்
2. நாட்டின் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்ய விண்ணப்பிக்கையில் மீண்டும் மீண்டும் சத்தியக்கடிதம் கோருதலை தடை செய்தல்
3. அரசாங்க தோட்டக் குடியிருப்புகள் மற்றும் அதனைச் சுற்றிய பகுதிகளை கிராமங்கள் எனப் பிரகடனப்படுத்தி பிரதேச சபைகள் அதிகாரத்தின் கீழ் கொண்டு வருதல்
4. தோட்டப்பகுதியில் கிராமப்பிரிவுகளை அதிகரிக்கக் கோரல்
5. தோட்ட மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் பிரதேச செயலகங்களை அதிகரிக்கக் கோரல்
6. பிரதேச செயலக செயற்பாடுகளை தோட்டக்குடியிருப்பு பகுதிகளுக்கு விஸ்தரிக்கும் வகையில் தமிழ் ஆளணிகளையும் நிதி ஒதுக்கீட்டையும் வழங்கக் கோரல்
7. காணிப் பகிர்வின்போது அரச தோட்டங்களில் குடியிருப்போருக்கு முன்னுரிமை அளிக்கச் செய்தல்.
8. காணிப் பகிர்வின்போது தனியார் தோட்டங்களில் குடியிருப்போருக்கு முன்னுரிமை அளிக்கச் செய்தல்
9. தோட்ட சுகாதார சேவையை பொதுச் சுகாதார சேவையின் கீழ் கொண்டு வருதல்
10. பத்தாண்டு திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட திட்டங்களை அமைச்சுகளினூடாக அமுல்படுத்த நிதி கோரல்
11. அரச விண்ணப்பங்களில் பதிவுப் பிரஜையா? எனக்கோருவதை நீக்கல்
12. நாட்டின் அனைத்து மாநகர, நகர மற்றும் பிரதேச சபைகளின் கீழ் பணியாற்றும் தமிழ்த் தொழிலாளர்களுக்கு நகர வீட்டுத்திட்டங்களின் போது வீடு வழங்கக் கோரல் ●

GET சமகாலம் DELIVERED TO YOUR HOME

3 months 600/-

6 months 1200/-

1 Year 2,400/-

Please complete the form given below, along with your Cheque/Money Order written in favour of 'Express Newspapers (Ceylon) (Pvt) Limited' and send it to our Head Office at No185,Grandpass Road, Colombo 14,Sri Lanka.
Tel:+94-11-7322700 / 7738046 Fax:+94-11-7767700

*For more details, please contact :*
Overseas & Local Subscriptions
**S.Surainie** - E-mail : subscription@kalaikesari.lk
Tel:+94 11 7322783

Subscription rates (inclusive postage) and delivery within Colombo.

ORDER FORM :

சமகாலம்

**Manager Subscriptions**
**Samakalam**
**No. 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.**
**Tel : +94-11-7322783 / +94-11-7322741**
**Fax : +94-11-4614371**

FOLD HERE

**SUBSCRIBER INFORMATION :**

Title :...................... Last Name :........................................

First Name :...........................................................................

Organization :........................................................................

Address :...............................................................................

.............................................................................................

Phone :.................................. Mobile :................................

Fax :.................................... E-mail :................................

Payment : Amount Rs..........................

☐ Cash ☐ Cheque

Payable to : **Express Newspapers (Cey.) (Pvt) Ltd.**

Bank :................................ Cheque No :.............................

Signature :..............................

# கலைஞர் வீட்டுக் கலாட்டா

கலைஞர் உயிருடன் இருக்கும் போது தலைவர் யார் என்ற கேள்வி ஏன்? இது அழகிரியின் ஆவேசம். கழக செயற்பாடுகளை பொறுத்தவரை சகலதிலும் தானே சீனியர் என்பது ஸ்டாலினின் வாதம். அழகிரியையும் கனிமொழியையும் விட கழகத்திற்குள் பெரும்பான்மை ஆதரவு ஸ்டாலினுக்கே




பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி திருச்சியில் தி.மு.க. ராஜ்ய சபை எம்.பி. சிவாவின் இல்லத் திருமணம். அந்த மணவிழாவிற்கு தலைமை தாங்குபவர் தி.மு.க. தலைவர் கருணாநிதி. வரவேற்புரை மு.க. ஸ்டாலின். முன்னிலை மு.க. அழகிரி, நன்றியுரை கனிமொழி. வித்தியாசமான இந்த திருமண அழைப்பிதழ் தி.மு.க. நிர்வாகிகளின் கண்களுக்கு குளிர்ச்சியூட்டும் விதத்தில் இருக்கிறது. ஏனென்றால், "எனக்குப் பிறகு சமுதாயப் பணிகளை ஸ்டாலின் தொடருவார்" என்று கலைஞர் கருணாநிதி அறிவித்த பிறகு, இந்த நால்வரும் ஓரிடத்தில் சங்கமம் ஆகும் நிகழ்வு இந்த "திருச்சி சிவா" இல்லத் திருமணம் ஆகும். திருச்சியில் நடப்பதற்கு சென்னையில் ஒரு "வெள்ளோட்டம்" கடந்த 17ஆம் திகதி மாங்கொல்லையில் நடைபெற்றது.




அது கனிமொழி தலைமை தாங்கும் கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் சார்பில் நடத்தப்பட்ட பொங்கல் விழா. இதை தி.மு.க. "தமிழர் திருநாளாக" கொண்டாடி வருகிறது. கனிமொழியின் கண் அசைவில் இயங்கும் அமைப்பு நடத்திய விழாவிற்கு, கலைஞர் கருணாநிதி, மு.க. ஸ்டாலின், கனிமொழி உள்ளிட்ட மூவரும் ஒரே மேடையில் தோன்றி காட்சி தந்தார்கள். "வாய்ப்புக் கிடைக்கும் போது தலைவர் பதவிக்கு ஸ்டாலினை முன்மொழிவேன்" என்று தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்திற்கு பிறகு தி.மு.க. தலைவர் செய்த பகிரங்க அறிவிப்பிற்குப் பிறகு அரங்கேறிய காட்சி இது- அதுவும், தி.மு.க. விற்குள் தலைவர் பதவிக்கான "போர்மேகங்கள்" சூழ்ந்திருக்கின்ற சமயத்தில் நடைபெற்ற இந்த 'வெள்ளோட்ட'த்தை திருச்சிக்கு "முன்னோட்டமாக" தி.மு.க.வினர் பேசுகிறார்கள்.

தி.மு.க. தலைவர் பதவிக்கான "ஆட்டக்களத்தில்" இப்படியொரு முட்டல், மோதல் இந்த முறை

தி.மு.க. தலைவரின் குடும்பத்திற்குள்ளேயே உருவாகியிருப்பதுதான் உச்சகட்ட பரபரப்பு. மத்திய அமைச்சராக இருக்கும் மு.க. அழகிரியைப் பொறுத்தமட்டில், ''கலைஞர் உயிருடன் இருக்கும் போது தலைவர் யார் என்ற கேள்வி ஏன்?'' என்கிறார் ஆவேசமாக. இந்தக் கருத்திலிருந்து ஸ்டாலினோ, கனிமொழியோ கூட வேறுபட முடியாது. ஆனால் இதில் எங்கே ''நெருடல்'' கட்டிப் புரண்டு சண்டை போடுகிறது என்றால், கட்சிக்குள் மூவருக்கும் உள்ள சீனியாரிட்டியின் அடிப்படையில்தான்! தன் சீனியாரிட்டியை ஸ்டாலினே பல சமயங்களில் பொது மேடைகளில், பேட்டிகளில் விளக்கியுள்ளார். ''1966 வாக்கிலேயே'' 'இளைஞர் தி.மு.கழகம்' என்ற அமைப்பை கோபாலபுரத்தில் துவங்கி அந்த விழாவிற்கு கலைஞர், எம்.ஜி.ஆர், ம.பொ.சி. போன்றவர்களை எல்லாம் அழைத்து வந்திருக்கிறேன். அண்ணாவின் பிறந்த நாள் விழாவைக் கொண்டாட அண்ணாவையே ஒரு முறை அழைத்தேன் என்று பேட்டி கொடுத்தார் ஸ்டாலின். 1971 சட்டமன்ற தேர்தலில் சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் போட்டியிட்ட தி.மு.க. தலைவர் கருணாநிதியை ஆதரித்து ஸ்டாலின் பிரசாரம் செய்ததால், முதன் முதலில் கட்சி தேர்தல் பிரசாரம் செய்ததிலும் நான் சீனியர் என்றார். 1996ஆம் வருடத்திலேயே சென்னை மேயரானார். அதுவும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆகவே, அரசு நிர்வாகத்திற்கு ''முதல் அனுபவமாக'' சென்னை மாநகர மேயர் பணியை எடுத்துக் கொள்ளலாம் என்று ஸ்டாலின் ஆதரவாளர்கள் தங்கள் வாதத்தை முன்வைக்கிறார்கள். ஆகவே மும்மூர்த்திகளில் ஸ்டாலினே முதற் கண்ணாக நிற்கிறார்.



இந்த ''சீனியாரிட்டி'' அந்தஸ்து அழகிரிக்கோ, கனிமொழிக்கோ இல்லை. ஏனென்றால் அழகிரி முதலில் பாராளுமன்ற உறுப்பினரானது 2009 பாராளுமன்றத் தேர்தலின் போதுதான்! தி.மு.க. தலைவர் கருணாநிதி முதுகுத்தண்டுவட ஒப்ரேஷனுக்காக சென்னையில் உள்ள பிரபல ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நேரம்...அங்கு வந்த அழகிரி, ''நான் மதுரை பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடுகிறேன்'' என்று திடீரென்று கூறிவிட்டார். மூத்த தலைவர்கள் எல்லாம் திடுக்கிட்டுப் போனார்கள். பிறகு, உண்மையிலேயே அழகிரி தேர்தலில் நிற்பதில் சீரியஸாக இருக்கிறாரா என்பதை அப்போது சீனியர் அமைச்சராக இருந்த ஆர்க்காடு வீராச்சாமி மூலம் ''வேவு'' பார்த்த கட்சித் தலைமை அவரை மதுரை பாராளுமன்ற வேட்பாளராக்கியது. அழகிரியும் வெற்றி பெற்று அமைச்சரானார். கனிமொழி ராஜ்ய சபை எம்.பி.யானதும் 2007 இல் தான். குறிப்பாக ''தினகரன் பத்திரிகையில்'' வெளிவந்த ''ஸ்டாலின், அழகிரி'' இருவரில் யாருக்கு செல்வாக்கு என்ற சர்வேயினால் மதுரையில் உள்ள தினகரன் அலுவலகம் தாக்கப்பட்டு தீ வைத்து கொளுத்தப்பட்டது. அதையொட்டி தயாநிதி மாறனுக்கும், தி.மு.க. தலைமைக்கும் ஏற்பட்ட மோதலில் டெல்லி அரசியலை கவனிக்கவே கனிமொழி களமிறக்கப்பட்டார். இந்த வகையில் பார்த்தால், கட்சிக்குள் அழகிரி, ஸ்டாலின், கனிமொழி ஆகியோரில் ஸ்டாலின்தான் சீனியர்மோஸ்ட். ''என் சீனியாரிட்டியின் அடிப்படையில் 'தலைமைப் பொறுப்பை' ஏற்பதற்கு இன்னும் எவ்வளவு நாள் நான் காத்திருக்க வேண்டும்?'' என்ற ஆதங்கம் ஸ்டாலினுக்கு இருக்கிறது. அதுவும் உத்தரப்பிரதேச முதல்வராக தன் மகன் அகிலேஷ்யாதவை முலாயம்சிங் யாதவ் நியமித்த பிறகு, இந்த ஆதங்கம் ஸ்டாலினின் குடும்பத்திற்கும் வந்து விட்டதுதான் தி.மு.க.விற்குள் மையம் கொண்டிருக்கும் ''தலைவர் பதவி'' புயலின் பின்னணி.

நாம் தி.மு.க. வட்டாரத்தில் பேசினோம். தி.மு.க. எம்.பி ஒருவர், ''தி.மு.க.வில் தற்போது 36 மாவட்டச் செயலாளர்கள். இவர்களில் 35 பேர் ஸ்டாலின் பக்கம்தான் இருக்கிறார்கள். ஒரேயொரு மாவட்டச் செயலாளர் மு.க. அழகிரி பக்கம் நிற்கிறார். அவர் மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் மூர்த்தி. கனிமொழிக்கோ மாவட்டச் செயலாளர்களின் ஆதரவு ஏதுமில்லை. தி.மு.க.வில் உள்ள 90 சதவீத நிர்வாகிகளும், தொண்டர்களும் ஸ்டாலின் ஆதரவாளர்கள் என்றால், மு.க. அழகிரிக்கும், கனிமொழிக்கும் உள்ள ஆதரவாளர்களும், தொண்டர்களும் 10 சதவீதத்திற்குள்தான் இருக்கும். ஆகவே, கட்சிக்குள் ஸ்டாலின்தான் செல்வாக்கு மிக்கவர். அழகிரிக்கும், கனிமொழிக்கும் ''கடலளவு ஆசை'' இருக்கலாம். ஆனால் ''கையளவுதான்'' ஆதரவாளர்கள் இருக்கிறார்கள்.'' என்றார் சுவாரஸ்யமாக. இன்னொரு தி.மு.க. முன்னாள் அமைச்சரோ, ''தி.மு.க.வில் மெஜாரிட்டி ஸ்டாலினுக்குத்தான் இருக்கி

றது. நாளைக்கே பொதுக்குழுவில் தலைவர் பதவிக்கு தேர்தல் வந்தால் கூட, ஸ்டாலின்தான் வெற்றி பெறுவார். ஆனால், பிரச்சினை அதுவல்ல. ஸ்டாலினை விரும்பும் இந்த மெஜாரிட்டி கலைஞரைப் புறந்தள்ளி விட்டு ஸ்டாலினை தலைவராக்க வேண்டும் என்று நினைக்கவில்லை. அதனால் தான் சென்ற சட்டமன்றத் தேர்தல் முடிந்ததும் நடைபெற்ற தி.மு.க. பொதுக்குழுவில் ஸ்டாலினுக்கு தலைவர் பதவி கொடு என்று சிலர் குரல் எழுப்பி கலாட்டா செய்ய, "இங்கேயே தேர்தலை வைத்துப் கொள்ளலாமா?" என்று சவால் விட்டார் கலைஞர்" என்று நினைவு கூர்ந்தார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு நெருக்கமான வட்டாரத்தில் இருப்பவர்களோ, "கலைஞர் இத்தனை வருடம் தலைவராக இருக்கிறார் என்றால், அவருக்கு என்று சில சில பிரத்தியேக தகுதிகள் உள்ளன. போர்க்குணம் நிரம்ப இருக்கிறது. ஆனால் இதையெல்லாம் ஸ்டாலின் இன்னும் வளர்த்துக் கொள்ளவில்லை. இதுமாதிரியொரு சூழ்நிலையில் தி.மு.க.விற்கு ஸ்டாலினை தலைவராக்கினால் ஆளும் கட்சியாக இருக்கும் அ.தி.மு.க.வை அவரால் எதிர்கொள்ள முடியுமா? என்ற சந்தேகம் தி.மு.க. தொண்டர்களிடம் இருக்கிறது. ஏனென்றால் தமிழக வாக்காளர்களிடம் கலைஞருக்கு உள்ள ஈர்ப்பு சக்தி இன்னும் ஸ்டாலினுக்கு வரவில்லை என்பதே உண்மை. அ.தி.மு.க. எதிர்கொள்ளும் முழுத்தகுதியும் ஸ்டாலினுக்கு வரட்டும் என்பதற்காகவே கலைஞர் பொறுமை காக்கிறார். அதை மனதில் வைத்தே, "வாய்ப்பு வந்தால்" ஸ்டாலினை தலைவராக முன்மொழிவேன் என்று கலைஞர் "பொடி" வைத்து பேசியுள்ளார். அதன் அர்த்தம், ஸ்டாலின் "பன்முகத் தலைவராக" உருவாகும் வரை நான்தான் தலைவர் என்பதுதான் கலைஞர் விடுத்துள்ள மெஸேஜ்." என்றார் சற்று வித்தியாசமாக.

ஸ்டாலினுக்கு இருக்கும் இந்த "வீக்னஸ்" மு.க. அழகிரி மற்றும் கனிமொழி ஆகியோருக்கு கட்சிக்குள் சேர்ந்துள்ள "சொத்துகள்"! இவற்றை மூலதனமாக வைத்து அரசியல் பண்ணும் மு.க. அழகிரி "தலைவர் இருக்கும் போது ஸ்டாலினை தலைவராக்க முயற்சிப்பது ஏன்" என்று முரசு கொட்டுகிறார். இதனால் மு.க. அழகிரிக்கும், தி.மு.க. தலைவர் கருணாநிதிக்குமே கருத்து வேறுபாடு நிகழ்ந்து, தந்தையும், மகனும் கடந்த ஒரு மாதமாக சந்தித்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். மதுரையில் ஜனவரி 30ஆம் திகதி நடைபெறும் மு.க. அழகிரியின் பிறந்த நாள் விழாவிற்கே தி.மு.க. தலைவர் கருணாநிதி போவாரா அல்லது அழகிரி வந்து சென்னையில் இவரைச் சந்திப்பாரா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. இதற்கிடையில், "சவுக்கு" எடுத்து நிற்கும் அழகிரியை "சமரசம்" செய்ய கலைஞர் கருணாநிதியின் மூத்த சகோதரி மகன் அமிர்தம் "சமாதானப் புறாவாக" சென்றார். அவரிடம் சீறிப்பாய்ந்த அழகிரி, "நான் என்ன தலைவர் பதவியா கேட்டேன்? தலைவர் இருக்கும் போது ஸ்டாலின் ஏன் என்றுதான் சொன்னேன். அறிவாலயத்தில் (தி.மு.க. தலைமைக் கழகம்) ஒரு அறை கேட்டேன். இதுவரை கிடைக்கவில்லை. என் சொந்த மாவட்டத்தில் உள்ள மாநகரச் செயலாளரையே எனக்கு எதிராக திருப்பி விடுகிறீர்கள். இந்நிலையில் நான் ஏன் கட்சிப் பொறுப்பில் இருக்க வேண்டும். தென் மண்டல தி.மு.க. அமைப்புச் செயலாளர் பதவி, மத்திய அமைச்சர் பதவி அனைத்தையும் ராஜிநாமா செய்துவிடுகிறேன். சாதாரண கட்சிக்காரனாக இருக்கிறேன்" என்று காரசாரமாக பேசினாராம். இதற்கு முன்பு அவருக்கும், கட்சித் தலைமைக்கும் ஏற்பட்ட பிரச்சினையில் மூன்று முறை தன் மத்திய அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்ய முன்வந்தவர் அழகிரி என்பது குறிப்பிடத்தக்கது. இது பற்றிக் கூறும் உள்வட்டாரப் பிரமுகர் ஒருவர், "ஆப்பரேஷன் பெயிலியர் என்றாலும் பயணம் வெற்றியே. அழகிரி பிரச்சினையை பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்பதும், எதிர்காலத்தில் (கலைஞருக்குப் பிறகு) ஸ்டாலின் தி.மு.க. தலைவராக அழகிரி எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார் என்பதும் அமிர்தம் போன்ற செய்தியாக எங்கள் தலைவருக்கு கிடைத்திருக்கிறது" என்கிறார்.

ஆனால் இதையெல்லாம் நம்பி ஸ்டாலின் "கம்பல்சரி வெயிட்"டில் இருக்க விரும்பவில்லை. "எனக்குப் பிறகு ஸ்டாலின்" என்ற தி.மு.க. தலைவரின் பேச்சை அக்கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையான முரசொலியில் "என் வாரிசு ஸ்டாலின்" என்ற ரீதியில் வெளியிட சில ஸ்டாலின் ஆதரவு தலைமைக் கழக நிர்வாகிகள் முயற்சி செய்தார்களாம். அது நடக்கவில்லை. "எனக்குப் பிறகு ஸ்டாலின் என்று அறிவித்த தலைவருக்கு நன்றி" என்று அனைத்து தி.மு.க. மாவட்ட செயலாளர்களும் தீர்மானம் போட வேண்டும் என்று பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி முன்னாள் அமைச்சர் பொன்முடி மாவட்ட செயலாளராக இருக்கும் விழுப்புரம் மாவட்ட தி.மு.க.வின் சார்பில் முதல் தீர்மானம் போடப்பட்டது. ஆனால், பிற மாவட்டச் செயலாளர்கள் அதை 'பாலோவ்' பண்ணவில்லை. திடீரென்று நிறுத்தப்பட்டு விட்டது. பிறகு, ஸ்டாலினே சில கூட்டங்களில், 'எனக்குப் பிறகு சமுதாயப் பணிகளை ஸ்டாலின் கவனிப்பார் என்று தலைவர் அறிவித்ததைப் பார்த்து பெருமிதப்படுகிறேன்' என்று தன்னைத் தானே புகழ்ந்து கொண்டார். இனியும் பேசப் போகிறார். அடுத்த கட்டமாக கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் நியமனத்திலும் ஸ்டாலின் தீவிரம் காட்டி வருகிறார் என்று தகவல். "ஸ்டாலின் வெறி உள்ளவர்களை பொதுக்குழு உறுப்பினர்களாக பரிந்துரை செய்ய வேண்டும்" என்று தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் மத்தியிலேயே அனல் பறக்கும் பிரசாரம் நடக்கிறது. இதற்கான முதல் முயற்சி சென்னை மாவட்டத்தில் எடுக்கப்பட்டு விட்டதாக கட்சி நிர்வாகிகள் சொல்வதைக் கேட்க முடிகிறது. அது மட்டுமன்றி

புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் பெரியண்ணன் அரசு “தலைவர் தளபதி” என்று பொங்கல் வாழ்த்து கட்அவுட்களே வைத்து விட்டார்.

தி.மு.க. தலைவர் பதவி தேர்தலில் கட்சியின் பொதுக்குழுவிற்குத்தான் முக்கிய பங்கு. அங்கு மெஜாரிட்டி உறுப்பினர்கள் வாக்களித்தால்தான் ஒருவர் தி.மு.க. தலைவராக வர முடியும். அந்த பொதுக்குழு உறுப்பினர்களில் தன் ஆதரவாளர்களை பெருக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார் ஸ்டாலின். ஆனால், நம்மிடம் பேசிய தி.மு.க. மூத்த நிர்வாகி ஒருவர், “ஸ்டாலினை தலைவராக்கக் கூடாது என்று கலைஞர் ஒரு போதும் நினைக்கவில்லை. அவர்தான் அடுத்த தலைவர் என்ற செய்தியை ஒவ்வொரு கட்டத்திலும் தொண்டர்களுக்கும், வெளி உலகிற்கும் கூறி வருகிறார். ஸ்டாலினை முன்னிறுத்துவதற்கு தடையாக இருப்பார் என்று நினைத்த வைகோவிடம் எப்படி கலைஞர் கோபப்பட்டாரோ, அதே மாதிரித்தான் ஸ்டாலினுக்கு முட்டுக்கட்டை போட நினைக்கும் அழகிரி மீதும் இப்போது கோபப்படுகிறார். ஸ்டாலினும் தி.மு.க. இளைஞர் அணிக்கு புத்துணர்வு அளித்துள்ளார். அதில் சந்தேகமில்லை. சமீப காலங்களில் தி.மு.க. கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்களில் தென்படும் இளைஞர்களின் முகங்களே அதற்கு சாட்சியாக இருக்கிறது. ஆனால், “நீதான் தி.மு.க.” என்று கலைஞர் சுட்டிக்காட்டிய பிறகும், கட்சிக்குள் தனக்கென்று தனியாக ஒரு அணியை ஸ்டாலின் அணியை உருவாக்குவதுதான் கலைஞருக்குப் பிடிக்கவில்லை. அழகிரி, கனிமொழி போன்றோரை ஆதரிக்கும் நிர்வாகிகளையும் அரவணைத்துச் செல்ல வேண்டும் என்று கலைஞர் கருதுகிறார். கட்சி கீழ்மட்ட நிர்வாகிகள் க்ரூப் சேர்க்கலாம். கட்சித்தலைவராக வரப்போகிறவர் சேர்க்கலாமா? “ஒட்டு மொத்த கட்சி நிர்வாகிகளும் என் ஆதரவாளர்களே” என்ற மனப்பக்குவமும், “அ.தி.மு.க.வை சமாளிக்கும் முழுத்தகுதியும்” ஸ்டாலினுக்கு வரட்டும். காத்திருப்போம் என்று நினைக்கிறார் கலைஞர். அதுவரை தி.மு.க.வின் தலைவராக கலைஞர்தான் இருப்பார். எந்த தி.மு.க. தொண்டனும் கலைஞரை மாற்றி விட்டு ஸ்டாலினை தலைவராக்குங்கள் என்று சொல்லப் போவதில்லை” என்றார் ஆணித்தரமாக!

### விஜயகாந்திற்கு “டொனிக்” கொடுத்த சோனியா பேச்சு:

ஜனவரி 25 தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் பொதுக்குழுக் கூட்டம் அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது என்று அரசியல் பார்வையாளர்கள் கருதுகிறார்கள். எட்டு வருடத்திற்கு முன்பு பிறந்த தே.மு.தி.க. இன்று தமிழகத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக வளர்ந்து நிற்பதே அதற்கு காரணம். “தான் சார்ந்திருக்கும் அணியை வெற்றிக் கூட்டணியாக” மாற்றும் மந்திர சக்தி தன்னிடம் இருப்பதாக சென்ற 2011 தமிழக சட்டமன்றத் தேர்தலில் நிரூபித்துக் காட்டியவர் விஜயகாந்த் என்பதால், அவருடைய அடுத்த “அரசியல் கூட்டணி” எப்படியிருக்கும் என்ற கேள்வி பிறந்திருப்பது சகஜமே!



மூன்றாவது சக்தியாக தமிழக அரசியல் வானில் முளைத்த கட்சிகள் இதுவரை “வளர்ந்து, பிறகு தேய்ந்த” வாக்கு வங்கிகளையே வைத்துள்ளன. வைகோவின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், டாக்டர் ராமதாஸின் பாட்டாளி மக்கள் கட்சி, ஏன் அகில இந்திய கட்சியாக தமிழக

> விஜயகாந்தின் வாக்கு வங்கியைப் பயன்படுத்தி அண்ணா தி.மு.க.வை எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என்பது கலைஞரின் வியூகம். பிரதமராக வேண்டும் என்ற நோக்கத்தில் செயற்படும் அண்ணா தி.மு.க. தலைமைக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்ற நோக்கில் காங்கிரஸும் இந்த வியூகத்திற்கு கைகொடுக்க முன்வரும் சாத்தியம் இருக்கிறது

ஆட்சிக் கட்டிலில் இருந்து பிறகு மூன்றாவது சக்தியாக மாறிய காங்கிரஸ் கட்சிக்கே இது பொருந்தும். ஆனால், கடந்த எட்டு வருடங்களில் இரு சட்டமன்றத் தேர்தல், ஒரு பாராளுமன்றத் தேர்தல், இரு உள்ளாட்சி தேர்தல், 14 இடைத் தேர்தல்களைச் சந்தித்து, இன்றைக்கும் “வளர்ந்து வரும் வாக்கு வங்கிக்கு” சொந்தக்கார கட்சியாக தே.மு.தி.க. திகழ்கிறது. அதுதான் அந்தக் கட்சிக்கு வருகின்ற இந்திய பாராளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் அந்தஸ்தை தேடித்தரப் போகிறது. தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் (பாராளுமன்றம் என்றால் 39



பாராளுமன்ற தொகுதிகள்) போட்டியிட்ட விஜயகாந்த் கட்சி, சென்ற 2011 சட்டமன்றத் தேர்தலில் மட்டுமே கூட்டணி வைத்து 41 தொகுதிகளில் மட்டும் களம் கண்டது. அப்போது கூட அ.தி.மு.க. கூட்டணி பெற்ற 52 சதவீத வாக்குகளில் சுமார் 12 சதவீத வாக்குகளை வாரிக் கொடுத்ததை யாரும் மறுக்க முடியாது. இது தமிழகத்தில் சுருங்கிப் போன காங்கிரஸ் வாக்கு வங்கியை விடவும் அதிகமானது என்பதால், இன்றைக்கு காங்கிரஸை விட தே.மு.தி.க. பலமான கட்சி.

இந்த 12 சதவீதம் ஏதோ “ஜீபூம்பா” என்று ஒரே நேரத்தில் வந்து அக்கட்சிக்கு குவிந்து விடவில்லை. 2006 சட்டமன்றத்தில் 8.33 சதவீதம், பிறகு 2009 பாராளுமன்ற தேர்தலில் 10.12 சதவீதம் என்று “கிராஃப்” வளர்ந்து, 2011இல் 12 சதவீதமாகியிருக்கிறது. இது முழுக்க முழுக்க விஜயகாந்தை நம்பி இருக்கும் வாக்கு வங்கி. அவர் சொல்லும் இடத்திற்கு சிந்தாமல் சிதறாமல் போய்ச் சேரும் வாக்கு வங்கி. அதனால்தான் அ.தி.மு.க.வுக்கும், தி.மு.க.வுக்கும் மாற்றாக வந்த விஜயகாந்த் 2011இல் அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்ததும் ஒரு விமர்சனம் எழுந்தது. அதாவது விஜயகாந்தால் தன் முழு வாக்கு வங்கியையும், அதாவது பத்து சதவீதத்தையும் அ.தி.மு.க. அணிக்குக் கொண்டு போக முடியாது என்பதுதான் அந்த விமர்சனம். ஆனால், அதை முறியடித்து அ.தி.மு.க. அணியை 52 சதவீதம் பெறும் வெற்றிக் கூட்டணியாக மாற்றிக் காட்டியதில் விஜயகாந்தின் வாக்குகள்தான் “பிரம்மாஸ்திரமாக” விளங்கியது. இவ்வளவு செல்வாக்குப் படைத்த விஜயகாந்த், ஐந்து வருடங்கள் தொடர்ந்து அ.தி.மு.க. அரசுடன் நெருக்கமாக இருந்து விட்டால், அ.தி.மு.க. வாக்கு வங்கியையும் அள்ளிக் கொண்டு போய் விடுவாரோ என்ற சந்தேகம் அ.தி.மு.க. தலைமைக்கு எழுந்தது. விஜயகாந்த் கட்சி அ.தி.மு.க.விலிருந்து வெளியேற்றப்பட்ட காரணங்களில் இது மிகவும் முக்கியமானது.

விஜயகாந்தின் வாக்கு வங்கியைப் பயன்படுத்தி, அ.தி.மு.க.வை எதிர்வரும் பாராளுமன்றத்தில் தோற்கடிக்க வேண்டும் என்பது தி.மு.க. தலைமையின் வியூகம். “பிரதமராக வேண்டும்” என்ற நோக்கத்தில் செயல்படும் அ.தி.மு.க. தலைமைக்கு செக் வைக்க காங்கிரஸும் இந்த வியூகத்திற்குக் கைகொடுக்க முன்வரும் என்றே சமீப கால நிகழ்வுகள் தெரிகிறது. தைப் புத்தாண்டு தினத்தில் காங்கிரஸ் தலைவர்கள் தி.மு.க. தலைவரை வீடு தேடிச் சென்று வாழ்த்தியது இதன் ஒரு அங்கமே. அது போன்ற தருணத்தில், காங்கிரஸுக்காக தன் கட்சிக்குக் கிடைக்கும் பாராளுமன்றத் தொகுதிகள் எண்ணிக்கையை குறைத்துக் கொண்டு விடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார் விஜயகாந்த். அவருக்கு வலது கரமாக இருந்து கட்சியில் ஆலோசனை வழங்கும் பன்ருட்டி ராமச்சந்திரன், “நம் பார்கைனிங் பவரை இழக்காமல் கூட்டணி பேச வேண்டும்” என்பதையே வலியுறுத்திச் சொல்லி வருகிறாராம். சென்ற தேர்தலில் அமைந்த கூட்டணியில் 41 எம்.எல்.ஏ. தொகுதிகளை அ.தி.மு.க. கூட்டணியில் பெற்றார் விஜயகாந்த். அது 7 பாராளுமன்றத் தொகுதிகளுக்கு சமம். இதைவிட அதிகமான எம்.பி. தொகுதிகளை வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் பெறுவதே, விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.க.வின் இலக்காக இருக்கும். அதை மனதில் வைத்தே கூட்டணி தொடர்பில் பொதுக்குழு தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என்கிறார் தே.மு.தி.க. பிரமுகர் ஒருவர்.

“காங்கிரஸின் பலம், பலவீனத்தைப் புரிந்து கொண்டு செயல்படுங்கள்”, “கூட்டணி அவசியம்”, “கூட்டணியையும், நம் கொள்கைகளையும் பேலன்ஸ் பண்ணக் கற்றுக் கொள்ள வேண்டும்” என்றெல்லாம் ஜனவரி 18ஆம் திகதி ஜெய்ப்பூரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் ‘சிந்தனை அரங்கத்தில்’ சோனியா காந்தி பரபரப்பாகப் பேசியிருக்கிறார். இது தொகுதிகளுக்கு அடம்பிடிக்காமல், கூட்டணிக் கட்சிகளுடன் விட்டுக் கொடுத்து எதிர்காலக் கூட்டணியை அமைக்க வேண்டும் என்ற சோனியா காந்தியின் எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. சோனியாவின் இந்த பேச்சு, அ.தி.மு.க.விற்கு மாற்றாக புதிய கூட்டணியில் சேர நினைக்கும் விஜயகாந்திற்கு புதுவித உத்வேகத்தைக் கொடுத்துள்ளது. தே.மு.தி.க. பொதுக்குழு கூடவிருக்கின்ற நேரத்தில் ஜெய்ப்பூர் காங்கிரஸ் கூட்டத்தில் சோனியாவின் பேச்சு, விஜயகாந்திற்கு மட்டுமன்றி, தி.மு.க., காங்கிரஸ், தே.மு.தி.க. கூட்டணி அமைக்க விரும்புகின்ற தி.மு.க. தலைமைக்கும் “டொனிக்” கொடுக்கும் விதத்தில் அமைந்திருக்கிறது என்பதே லேட்டஸ்ட் ஹைலைட்!



சாந்தி சச்சிதானந்தம்

# விக்டோரியாவின் இரகசியங்கள்

நுகர்வோரின் கலாசாரத்தை மாற்றுவதன் மூலம் முதலாளித்துவத்தின் வடிவத்தை மாற்ற விளையும் பால்டிமோர் பெண்களுக்கு நாம் ஒரு சமாஷ் போட்டேயாகவேண்டும். சந்தையிலிருக்கும் எத்தனையோ உற்பத்திகளுக்கு நாம் சவால் விடலாம், எமது தொலைக்காட்சியில் காட்டப்படும் சீரியல் நாடகங்கள் உட்பட



அரசு, சந்தை, சிவில் சமூகம் ஆகியன நவீன தேசத்தின் அடிப்படை அலகுகள் என்பது அனேகமாக நம்மெல்லோருக்கும் தெரிந்த கோட்பாடாகும். தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கொண்ட அரசினையும் பொருளாதார வலிமையின் காரணத்தினால் செல்வாக்குப் பொருந்தியதாக இருக்கும் சந்தையினையும் கண்காணித்து சமப்படுத்தும் வல்லமை கொண்டது சிவில் சமூகம் என்பதே இக்கோட்பாட்டின் சமன்பாடு எனக் கொள்ளலாம். என்னதான் இருந்தாலும், அரசுக்கு அதிகாரத்தினை வழங்குவதும் சந்தையைத் தக்க வைப்பதும் இச்சிவில் சமூகம் அல்லவா? இதன் அடிப்படையிலேயே சிவில் சமூகம் எவ்வளவு மும்முரத்துடன் இயங்குகின்றது என்பதை வைத்துக் கொண்டு ஒரு நாட்டின் ஜனநாயகத்தினை எடைபோடலாம் என்பர்.

கடந்த இரு வருடங்களாக மத்திய கிழக்கு நாடுகளிலும் அமெரிக்காவிலும் அரசுக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழுகின்ற இயக்கங்கள் பலவற்றைக் கண்டிருக்கின்றோம். எகிப்தின் தஹிரிர் சதுக்க மக்கள் போராட்டமாகட்டும், நியூயோர்க் நகரத்தின் ''வோல் ஸ்ரீட்டை ஆக்கிரமி'' போராட்டமாகட்டும் இவை தத்தமது சமூகத்தில் நிகழும் அதிகார அசமத்துவங்களையும் வளப்பகிர்வின்

அநீதிகளையும் எதிர்க்கும் இயக்கங்களாக உருவாகியிருக்கின்றன. இந்த மக்கள் இயக்கம் தனியே அரசுக்கு மட்டும் சவாலாக இல்லாமல் முதலாளித்துவக் கட்டமைப்பிற்கும் சவால் விட்டிருக்கின்றன "வோல் ஸ்ரீட்டை ஆக்கிரமி" போராட்டமானது உலகின் நிதி வளங்கள் அனைத்தும் உலகின் சனத்தொகையின் 1வீதத்தினருக்கு மாத்திரமே சென்றடைகின்றது என்னும் பிரச்சினையையொட்டி உருவாக்கப்பட்ட போராட்டமாகும். பங்குச் சந்தைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும், நிதி நிறுவனங்கள் பொதுவுடைமையாக்கப்படவேண்டும் என்றெல்லாம் இன்று ஆனானப்பட்ட முதலாளித்துவ அமெரிக்காவிலிருந்தே கோஷங்கள் கிளப்பப்பட்டு வருகின்றன.

முதலாளித்துவக் கட்டமைப்புக்கெதிரான மக்கள் போராட்டங்கள் இவை மட்டுமன்றி இன்னும் வெவ்வேறு பரிமாணங்களில் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன. அதற்கு சிற



ந்த உதாரணமாக பல்டிமோர் பெண்கள் உரிமைகள் அமைப்பு (விக்டோரியாவின் இரகசியம்) (Victoria's secret) என்னும் உள்ளாடைகள் தயாரித்து விற்கும் கம்பனிக்கெதிராக நடத்த ஆரம்பித்திருக்கும் போராட்டமாகும். பொதுவாகவே முதலாளித்துவக் கட்டமைப்பின் போக்கினை அவதானித்தால் அது என்றுமே ஏற்கனவே சமூகத்தில் நிலைபெற்றிருக்கும் அதிகாரக் கட்டமைப்புகளை *முழு மையாக அழித்தது கிடையாது* என்பதை உணரலாம். உண்மையில் அவற்றையும் சேர்த்து சமாளிக்கும் போக்கில் தன்னைத்தானே மாற்றிக் கொள்ளும் பண்பும் அதற்குண்டு. நிலப்பிரபுத்துவமும் தந்தையுடைமைச் சமூகமும் ஒன்று சேர்ந்தபோது பெண்கள் வீட்டினுட் பூட்டிவைக்கப்பட்ட காலம் இருந்தது. காலப்போக்கில் முதலாளித்துவம் விருத்தியடையவே அதற்கு தங்கு தடையின்றி தொழிலாளர்கள் தேவைப்பட்டது. இதுவரை வீட்டினுள் கிடந்த பெண்களைத் தொழிலாளர்களாக வெளியில் இழுத்த வரைக்கும் அது பாரம்பரியங்களைத் தகர்க்கத் தவறவில்லை. ஆனால் வெளியில் வந்த பெண்களைத் தொழிலுக்கமர்த்திய தன்மையில் அது தந்தையுடைமைச் சமூகத்தின் அதிகார உறவு முறைகளைப் பேணியதைப் பார்க்கக் கூடியதாக விருந்தது. குடும்பங்களில் பெண்கள் வகித்து வந்த பாத்திரத்திற்கொப்பான பாத்திரங்களில் மட்டும் அதுவும் குறைந்த சம்பளங்களில் அவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டனர். இதே போன்றே சாதிய மற்றும் இன ஒடுக்குமுறை கலாசாரத்திலும் முதலாளித்துவம் வகிக்கும் பாத்திரங்களை உதாரணங்களாக நாம் பார்க்கலாம்.

இதன் அடிப்படையிலேயே பெண்களின் உடல்களை ஆணினத்தின் நுகர் பொருட்களாக வைத்திருக்கும் தந்தையுடைமைக்கோட்பாட்டினையும் முதலாளித்துவம் தனக்கென வரித்துக் கொள்ளத் தவறவில்லை. இதன்படி, கார் விற்பதென்றாலும் கவர்ச்சிக் கன்னி தேவைப்படும் விளம்பரங்கள் அன்றாட நிகழ்வுகளாகின்றன. இதன் உச்சகட்டமே உள்ளாடைகள் விற்கும் வியாபாரங்களாகும். விக்டோரியாவின் இரகசியங்கள் என்னும் கம்பனியின் விளம்பரங்களைப் பார்த்தால் புரியும். உள்ளாடைகளில் திண்ணென பொங்கும் மார்பகங்களுடன் பெண்கள் ஒருக்களித்து சாய்ந்திருக்க "sexiest Gift you could give!" என்னும் வாக்கியங்களுடன் அது விளம்பரப்படுத்தப்படுகின்றது. அதுவும் அதன் ஒவ்வொரு மொடலும் வெள்ளையினமாகவும் மிகவும் மெலிதாகவும் பொன்னிற முடி கொண்டவர்களாகவும் இருக்கும் அழகிகளாக இருப்பதைக் காணலாம். வெண்மை, பொன்னிற முடி, அதிமெலிவான தேகம் இவைதான் அழகின் இலக்கணங்கள் என்கின்ற இனவாதக் கோட்பாடு இங்கு கன கச்சிதமாக வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதைப் போல பார்வையாளர்களுக்குத் தரப்படுகின்றது.

விக்டோரியாவின் இரகசியங்கள் நிறுவனம் சிலகாலத்துக்கு முன்பு வெளியிட்ட அதன் புதிய உட்காற் சட்டையுடன்தான் யுத்தம் வெடித்தது. அதன் முன்புறம் "Sure Thing" என்ற வாசகம் பொறித்து இளஞ்சிவப்பு நிறத்தில் அதனை வெளியிட்டார்கள். "Sure Thing" என்றால் எடுத்துக்கொள்ளலாம் என்கின்ற அர்த்தம் பொதிந்ததாகும். இளஞ்சிவப்பு நிறம் பெண்களை நாணமுள்ளவர்களாக (Coy) காட்டுகின்



றது. இது பெண்களை பாலியல் பலாத்காரம் செய்கின்ற ஆண்களுக்குப் பச்சை விளக்கு காட்டியதைப் போலிருந்தது. அனேகமான பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்பட்ட பெண் வேண்டாம் வேண்டாம் என்று குழறியிருந்தாலும் பெண்கள் அனேகமாக ஆம் என்பதற்கு இல்லையென்றுதானே பதில் கூறுவார்கள் என்பதனால் தான் அவளுடன் உறவு கொண்டதாக ஆண்கள் தெரிவித்திருக்கின்றனர். சினிமாவிலும் கூட கதாநாயகி வெட்கத்துடன் தலையை இல்லையென்று ஆட்டியபடி ஓடி ஒளிந்து கொண்டாலும் கதாநாயகன் அவளைத் துரத்தி அணைப்பதில்லையா? அப்படித்தான். எனவே வெறும் வாயை மெல்லுபவனுக்கு அவல் கொடுத்தது போல இல்லை என்னும்போதே பாலியல் பலாத்காரம் செய்பவர்கள் Yes No Maybe என்று போட்டால் என்ன செய்வார்கள் என்று கொதித்தெழுந்தனர் பல்டிமோரைச் சேர்ந்த பெண்கள் சிலர். இது போதாதென்று அதே நிறுவனம் தனது இன்னொரு தயாரிப்பில் Yes No Maybe என்று ஒரே காற்சட்டையில் போட்ட வாக்கியம் அவர்களை மேலும் ஆத்திர மூட்டியது. பிரசாரக் களத்தில் உடனே இறங்கினார்கள்.

நாணம் அல்ல ஆனால் ஒத்திசைவுதான் செக்ஸியானது (Consent is sexy) என்று பரப்புரை செய்ய விழைந்தார்கள். இளஞ்சிவப்பு நிறம் ஒத்திசைவிற்கான நிறம் என்று காட்ட விரும்பினார்கள். தமது செய்திகளுக்குரிய உள்ளாடைகளைத் தயாரிக்க ஆரம்பித்தார்கள். இவற்றில் "Ask First" (முதலில் கேளுங்கள்) No என்று வேறாகவும் Yes என்று வேறாகவும்; I get to decide what I want to do with my body (என்னுடைய உடலை வைத்து என்ன செய்ய வேண்டும் என்பதை நான்தான் தீர்மானிப்பேன்) என்றும் சொற்கள் பொறித்த உட்காற்சட்டைகள் உருவாக்கப்பட்டன. இவற்றையெல்லாம் விக்டோரியாவின் இரகசியங்கள் நிறுவனத்தின் பெயரிலேயே வெளியிட ஆரம்பித்தனர். அது மட்டுமன்றி உண்மையானதொரு ஃபாஷன் ஷோவினையும் நடத்தினர். மொடல்கள் யார் தெரியுமா? கறுப்பினத்தைச் சேர்ந்தவர்களும் கொழுகொழுவென இருக்கும் கறுப்பு முடி கொண்ட அழகிகளாகும். இதற்கென ஓர் டிவிட்டரையும் இணையத்தளத்தையும் உருவாக்கியபோது வந்து குவிந்தன ஏராளமான பாராட்டுகள். உண்மையாகவே விக்டோரியாவின் இரகசியங்கள் நிறுவனம்தான் இதனைச் செய்திருக்கின்றது என்று நம்பி அவற்றை வாங்க முனைந்தவர்கள் ஏராளம். இது ஒரு பகிடி மட்டும்தான் என்று அறிந்தவுடன் ஏமாற்றத்துடன் எழுதியவர்கள் அதைவிட ஏராளம்.

விக்டோரியாவின் இரகசியங்கள் நிறுவனம் இதனால் மிகவும் விசனமடைந்தது என்பதைக் கூறத் தேவையில்லை. ஆனால், ஆளுமை கொண்ட பெண்களைக் குறிக்கும் மற்றும் இனவாதக் கோட்பாட்டினை மறுதலிக்கும் உள்ளாடைகளை பெண்கள் விரும்புகின்றார்களென்பதை இதிலிருந்து அது அறிந்து கொண்டிருக்கும். காலப்போக்கில், அதற்கேற்ற முறையில் அது உள்ளாடைகளைத் தயாரிக்கும் என்பதில் ஐயமில்லை. இலாபம் ஈட்டுகின்ற வழியைத் தேடி ஓடுவதே மூலதனத்தின் இயல்பாகும் (the logic of Capital). இதனை உணர்ந்து, நுகர்வோரின் கலாசாரத்தினை மாற்றுவதன் மூலம் முதலாளித்துவத்தின் வடிவத்தை மாற்ற விழையும் பல்டிமோர் பெண்களுக்கு நாம் ஒரு சபாஷ் போட்டேயாகவேண்டும். இதே போன்றே சந்தையிலிருக்கும் எத்தனையோ உற்பத்திகளுக்கு நாம் சவால் விடலாம், எமது தொலைக்காட்சியில் காட்டப்படும் சீரியல் நாடகங்கள் உட்பட.

---

***(கடைசிப் பக்கத் தொடர்ச்சி)***

அவசியம் பற்றி உணர்ந்து, அவை பற்றிய தேடலில் ஈடுபடுவதும் அவசியமாகின்றது. ஆபிரிக்க, லத்தீன் எழுத்தாளர்களுக்கில்லாத ஒரு நற்பேறு தமிழ் எழுத்தாளர்களுக்குள்ளது. அதுதான் பழைய இலக்கியச் செல்வங்கள்! இவற்றின் பயன்பாடு பற்றியும் கவனத்திற்கெடுப்பது அவசியமானது.

ஈழத்து எழுத்தாளர்கள் பகுதிநேர எழுத்தாளர்களாகவுள்ளனர். (அதாவது தொழில் ரீதியாக எழுத்தாளர்களாக விளங்குபவர்களல்ல) இதனால் எழுதுவதற்குப் போதிய நேரமில்லாதவர்களாகவுள்ளனர். இத்தகைய சூழல் படைப்புகள் செம்மையுறுவதற்கு பல விதங்களில் பெருந்தடையாகவுள்ளது.


ஈழத்து எழுத்தாளர் பலரும் மத்திய தர வர்க்கத்தினராகவோ தொழிலாளர் வர்க்கத்தினராகவோ இருப்பதனால் பொருளாதார நிலையில் பின்தங்கியவர்கள், இத்தகைய நிலை அவர்களது எழுத்து முயற்சிகளை (முழு நேர உழைப்பாளிகளாதல், நேர அவகாசமில்லாமை நூல் வெளியிட முடியா நிலை) கடுமையாகப் பாதித்து வருகின்றது.

மேற்கூறியவை அனைத்தையும் விட, "எழுதுவதென்பது ஒரு தவம்", "பிரசவ வேதனை" என்பதனை ஈழத்து எழுத்தாளர்களுள் எத்தனை பேர் உணர்ந்துள்ளனர் என்றொரு கேள்விக்குமிடமுள்ளது. அடுத்த நாள் காலையிலே தோசை பதமாக வருவதற்காக தோசைக்கான உழுந்து ஊறப்போடும் அளவிற்கான கால அவகாசம்கூட கொடுக்காது ஓர் இரவிலே நாவல் எழுதி முடிக்கின்ற எழுத்தாளர்கள் பலரை நான் நன்கறிவேன்.

ஈழத்துத் தமிழ் எழுத்துலகின் மேற்கூறிய பேரவல நிலைப் பின்புலத்தில் "நோபல் பரிசு" பற்றிய கனவுகள் சாத்தியப்பட, தொலைதூரம் கடந்தாக வேண்டியுள்ளது என்றே கூற வேண்டும்.

புதிய - இளைய தலைமுறை எழுத்தாளர்களாவது "நோபல் பரிசு" என்பதான கூக்குரல்களுக்கு ஆட்படாது புதிய திசைகள் நோக்கிப் பயணிப்பார்களாக!

# மரணப் படுக்கைத் தரிசனங்கள்




“ஐயா, சந்நிதி கோயிலுக்குப் போறாராம் என்னையும் வரட்டாம்'' என்றார் தீனக்குரலில். காலனின் கயிறு அவரது கழுத்தில் வீசப்பட்டதைக் கண்டதைப் போல அருகில் நின்றவர்களின் முகங்கள் பேயடித்து வெளிறின. உரித்த நார் போல படுக்கையில் கிடந்த அவரது குரல் இரகசியம் பேசுவதுபோல ஒலித்தாலும் புரிந்து கொள்ளக் கூடியளவு தெளிவாக இருந்தது. இவரது வயது 75 நெருங்கியிருந்தது. “ஐயா'' என அழைத்த அவரது தந்தை இறந்து 30 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. பல நாட்களாக படுத்த படுக்கையாகக் கிடக்கிறார். உணவு உட்கொள்வதைக் கைவிட்டு சில நாட்களாகிவிட்டன. நீராகாரம் மட்டும் பருக்குகி றார்கள். இன்றோ நினைவு தப்புவதும் மீள்வதுமாக இருக்கிறது.

**இது ஒரு மரணப்படுக்கைத் தரிசனம். (Deathbed Visions)**

காலாதிகாலமாக இப்படியான விடயங்கள் பேசப்பட்டு வந்தாலும் அவை விஞ்ஞான பூர்வமான பதிவுகளானது அண்மையில்தான். 1924 ஆம் ஆண்டளவில் பௌதீகவியல் பேராசிரியரான Sir William Barrett தான் இவ்வாறான விடயங்கள் பற்றி ஆய்வு செய்து முதன் முதலாக ஆவணப்படுத்தினார். பௌதீகப் பேராசிரியருக்கு முற்றிலும் அந்நியமான துறையில் ஆர்வம் வந்ததற்குக் காரணம் மகப்பேற்று நிபுணரான அவரது மனைவிதான். January 12, 1924 அன்று குழந்தைப் பேற்றின் போது குருதி இழப்பினால் மரணத்தைத் தழுவிய ஒரு பெண்ணுக்கு கிட்டிய தரிசனம் பற்றிய தகவலை மனைவி வெளியிட்டதாலேயே அவருக்கு இத்துறையில் ஈடுபாடு ஏற்பட்டது. (முழுமையான விபரங்களை இணையத்தில் தேடுங்கள்)

**மரணப்படுக்கைச் சாட்சியங்கள்**

பிறப்பு எவ்வாறு எமது கைகளில் இல்லையோ அதேபோல இறப்பும் நிச்சயமானதே. அதுவும் எமது வாழ்க்கைச் சக்கரத்தின் தவிர்க்க முடியாத ஒரு அங்கமேயாகும். இருந்த போதும் மரண பீதியானது காரிருளில் கன்னமிடும் கள்வன் போல பெரும்பாலானவர்களிடம் மறைந்திருக்கிறது. ஆனால், மற்றொருவரின் இறப்புக் கணத்தில் சாட்சிபோல அருகில் நிற்பதானது மற்றெதையும் விட உள்ளத்தை உலுப்பிப் போடுவதாக இருக்கும். மனதிற்கு நெருக்கமான ஒருவர் நினைவிழந்து, மூச்சுத் திணறி, படிப்படியாக சுவாசம் அடங்கி பிணமாக அடங்கிப் போவதைப் பார்த்திருக்க நேர்வது பெரும் துன்பம். அதைப் போல உணர்வுகளைக் கிளறும் சம்பவம் வேறு எதுவும் ஒருவரின் வாழ்வில் இருக்க முடியாது. ஆனால், அப்படியான சந்தர்ப்பங்கள் ஒருவருக்கு கிடைப்பதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவு



என்று Palliative-care physician Ira Byock சொல்கிறார். மேலை நாடுகளிலும் பெரு நகர்களிலும் பெரும்பாலான மரணங்கள் மருத்து வமனைக ளிலேயே நிகழ்கின்றன. இதனால் இறுதி நேரத்தில் அருகில் நிற்பதற்கான சாத்தியங்கள் குறைவு. ஆனால், மூன்று தசாப்தங்களான போரில் மரணத்துள் வாழ்ந்த எம்ம வர்களுக்கு அத்தகைய சந்தர்ப்பங் கள் அளவிற்கு அதிகமாகவே கிட்டி யிருக்கும்.

மரணம் என்பது எப்பொழுதும் ஒரே விதமாக நிகழ்வதில்லை. ஒவ் வொரு மரணமும் ஒவ்வொரு வித மாக இருக்கும். அவற்றில் தனித்து வங்கள் இருக்கவே செய்யும். மரணங்கள் நிகழும்போது அருகே நின்றவர்களின் அனுபவங்களை Dying Well என்ற தனது நூலில் தொகுத்துத் தந்திருக்கிறார் மேற் கூறிய மருத்துவரான Ira Byock.



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

### இரு வேறு உலகங்கள்

மேற்கூறிய நபர் ஒரே நேரத்தில் இரண்டு உலகங்களில் சஞ்சரித்திருக்கிறார். மறைந்து போன தனது தந்தையுடன் பேசிய அவர், பிறகு நிஜ உலகில் தன்னருகில் நிற்பவர்களுடன் அந்தச் செய்தியைப் பகிர்ந்திருக்கிறார். இது அண்மையில் இங்கு நடந்த சம்பவம். இது போன்ற பல சம்பவங்களை Ira Byock தனது நூலில் பகிர்ந்திருக்கிறார். மிஷேல் என்ற பெண் தான் மரணத்தைத் தழுவுவதற்கு சில மணி நேரங்களுக்கு முன் "நான் சாரா அல்ல" என்று சொன்னாள். சாரா என்பது அவளது தாயின் பெயர். அங்கிருந்த எவரது கேள்விக்கான மறுமொழியாக அது இருக்கவில்லை. கண்ணுக்குப் புலப்படாத யாருடனோ பேசியிருக்கிறாள். பிறகு அருகில் நின்ற கணவனைப் பார்த்து "நான் உங்களை விரும்புகிறேன்." எனத் தனது அன்பை வெளிப்படுத்தினாள்.

இவ்வாறாக இரண்டு வெவ்வேறு உலகங்களில் ஒரே நேரத்தில் சஞ்சரிப்பதானது மரணப்படுக்கையில் கிடக்கும் பலருக்கு சிரமமாக இருப்பதில்லை. அருகில் இருப்பவர்களது கண்களுக்குப் புலப்படாத யாருடனோ பேசலாம் அல்லது சைகை காட்டலாம் அல்லது அவர்களுக்கு மட்டுமே அவ்வேளையில் புலப்படும் ஒரு இடம் பற்றியோ பொருள் பற்றியோ கதைக்கலாம். உதாரணமாக, ரம்யமான தோட்டத்தில் நிற்பது பற்றியும் அழகான ஒளி விளக்குகள் பற்றியும் பலர் பேசியதான குறிப்புகள் பல உள்ளன. சுற்றி நிற்பவர்களுக்கு அது சன்னியில் பிதற்றுவதாகத் தோன்றக்கூடும். ஆனால், அவர்கள் தெளிவாகப் பேசியதாகவே அறிக்கைகள் சொல்லுகின்றன. இவற்றில் பல மருத்துவர்களாலும் மருத்துவ உதவியாளர்களாலும் பெறப்பட்ட தகவல்களாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

75 சதவிகிதமானவர்கள் இறந்து போன தமது உறவினர்கள் அல்லது நண்பர்கள் பற்றிப் பேசிய The Art of Dying என்ற தனது நூலில் Fenwick கூறுகிறார். இது அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கிடைத்த தகவல்களாகும். ஆனால், 50 சதவிகிதமான இந்தியர்கள் மதத் தலைவர்கள் பற்றியே பேசினார்களாம். முன்னொருபோதும் அறியாத அந்நியர்கள் பற்றிப் பேசியது ஒப்பீட்டளவில் மிகக் குறைவே. பொதுவாகப் பார்க்கும்போது அமைதி, சாந்தம் மற்றும் பாதுகாப்பு உணர்வைக் கொடுக்கும் இடங்கள் அல்லது நபர்கள் பற்றியே அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

### குறியீட்டால் உணர்த்தல்

விட்டு விலக வேண்டிய அவசியம், தவிர்க்க முடியாத மாற்றம், அல்லது மரணம் பற்றிய வேறு குறியீடுகளால் தனது மரணத்தை உணர்த்துவதுண்டு. எங்காவது பயணப்படுவதாகக் கூறிய பதிவுகள் அதிகம். ஆரம்பத்தில் பேசப்பட்டவர் ஆலயத்திற்குப் போவது (சந்நிதி) பற்றிக் குறிப்பிட்டார் அல்லவா. "ஏன் இன்னமும் தாமதிக்கிறோம். அதோ பிளேன் ஆயத்தமாகக் காத்திருக்கிறது" என Patricia Anderson தான் இறப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் குறிப்பிட்டதாக Ira Byock தனது நூலில் உதாரணம் கூறுகிறார்.

வேறு சிலர் பயணத்திற்கான பொருட்களைப் பொதி செய்வது பற்றியும், அவற்றை சரி பார்ப்பது பற்றியும் குறிப்பிடுவதுண்டு. பயணப்படுதல் பற்றிய அத்தகைய குறிப்புகள், தான் பிரிய வேண்டிய நேரம் வந்துவிட்டதை மற்றவர்களுக்கு உணர்த்துவதற்காக அடி மன உந்துதலால் எழுந்த சமிக்ஞையாகக் கொள்ளலாம் என பல அறிஞர்கள் கருதுகிறார்கள். இத்தகைய நேரத்தில் சுற்றி நிற்பவர்கள் செய்யக் கூடியது என்ன? கண்ணீர் விட்டுக் கதறி அழுது தமது மனத் துயரை வெளிப்படுத்துவதா? நிச்சயமாக இல்லை. தாங்கள் படுக்கையில் கிடக்கும் அவரது நிலைமையைப் புரிந்து கொள்வதாகவும், பிரிய வேண்டும் என அவர் நினைத்தால் தாம் அதற்குத் தடையாக இல்லை என்பதையும் உணர்த்த வேண்டும். துயருற்றாலும் தாங்கள் துணிவுடன் இருந்து அவர் விட்டுச் செல்லும் பணிகளைத் தவறாது செய்வோம் என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

### இறுதிக் கணத்தை தானே தேர்ந்தெடுத்தல்

பொதுவாக மரணப்படுக்கையில் இருப்பவரைச் சுற்றி நெருங்கிய உறவினர்கள் இருப்பார்கள். வேண்டிய பராமரிப்புகளைச் செய்வார்கள். ஏதோ ஒரு காரணத்திற்காக இவர்கள் ஒரு சில நிமிடங்கள் வெளியே செல்ல நேரும். திரும்பி வரும்போது அவரது ஆவி பிரிந்திருக்கும்.

"கட்டிக் காத்து நின்றும் கடைசி நேரத்தில் உயிர் பிரியும்போது நாம் அருகில் நிற்கவில்லையே" என இவர்கள் கலங்குவர். ஆனால், தனது மரணத்திற்கான கணத்தை தானே தேர்ந்து எடுத்திருக்கக்கூடும் என்பதாக நாம் என்றுமே நினைப்பதில்லை. ஆனால், அதுதான் உண்மை என்கிறார்கள் இத்துறையில் அனுபவம் உள்ளவர்கள். "தமக்கு நெருக்கமானவர்கள் அருகில் இருக்கும்போது பெரும்பாலானவர்கள் உயிர் துறப்பதில்லை. அதிலும் முக்கியமாக குடும்பத்திற்கு தலைமை தாங்கி அவர்களை அணைத்துச் சென்றவர்கள் தமது இறுதிக் கணத்தில் தனக்கு நெருங்கியவர்கள் இருப்பதை விரும்புவதில்லை" என எழுத்தாளரான Lise Funderberg தனது அனுபவங்களை வைத்துக் கூறுகிறார்.திடீரென நினைவிழந்த தனது தாயை மருத்துவமனையில் அனுமதித்தார் ஒரு மருத்துவர். மூளைக்குள் இரத்தம் உறைந்திருந்தது. கண் திறக்கவில்லை. கட்டைபோலக் கிடந்தார். நினைவு திரும்பாது மரணம் நிச்சயம் என்பது உறுதியாயிற்று. வெளியூர்களிலிருந்து பிள்ளைகள் வந்தனர். மிகுந்த பாசத்தோடு வளர்த்த தாயோடு ஒரு வார்த்தைதானும் பேசமுடியாது கவலையோடு நின்றனர்.

மருத்துவர்களின் முடிவுகளைத்

தகர்த்துக் கொண்டு திடீரென அந்த அம்மையார் கண் விழித்தார். தனது பிள்ளைகளோடு சில வார்த்தைகள் பேசினார். ICU அறையை விட்டு வெளியே வந்த பிள்ளைகள் தமது தாயார் இனித் தப்பிவிடுவார் எனப் பேசி மகிழ்ந்தனர்.

ஒரு சில நிமிடங்கள்தான் கடந்திருக்கும். அவள் இறந்துவிட்டதாக பொறுப்பு மருத்துவர் தகவல் சொன்னார். ஆம்! அந்தத் தாய் தனது பிள்ளைகளின் உள்ளங்களைத் திருப்திப் படுத்திவிட்டு மரணத்தை அரவணைத்தார். மரணம் வரை தொடரும் அவரவர் தனித்துவங்கள்

தனது தாயாரிடம் ICUவில் வைத்து "எனது மகனின் திருமணத்திற்கு தம்பி வரவில்லை" என குற்றம் சாட்டினார் 40 வயதான திருமதி Dawn Barclay. 'So shoot him! என மரணப் படுக்கையில் இருந்த தாயார் சொன்னார். வழமையாகவே பகிடிகளை விடும் அவர், மரணப் படுக்கையிலும் தனது நகைச்சுவை உணர்வைக் கைவிடவில்லை."என்னைத் தெரிகிறதா" என மற்றொருவரது உயிர் நண்பர் கேட்டார். மிகுந்த சிரமத்தோடு தனது தலையைத் திருப்பி அவரைப் பார்த்தபின் "இல்லை" என்றார் மரணப்படுக்கையில் கிடந்தவர். வினவியவர் முகம் சோகத்தில் தளர்ந்த போது, "நீ என்னோடு படிக்கவில்லைதானே" என்றதும் இவர் முகம் மலர்ந்தார். குறும்பாகப் பேசும் அவரது குணம் இறுதிவரை மாறவில்லை என்பதைப் புரிந்து கொண்டதாலேயே அவர் முகம் மலர்ந்தது. "தாம் எவ்வாறு வாழ்ந்தார்களோ அவ்வாறே மரணத்தையும் தழுவுகிறார்கள். மென்மையானவர்கள் இறுதிக் கணங்களில் மேலும் மென்மையானவர்கள் ஆகிறார்கள். அவ்வாறே பகிடியும் கிண்டலும் உள்ளவர்களிலும் தொடரும். மற்றவர்களை அடக்க முற்படுபவர்கள் இறுதிவரை தமது திமிரை விடுவதில்லை" என்கிறார் 2000இற்கு மேற்பட்ட மரணங்களுக்குச் சாட்சியாக நின்ற Maggie Callanan. இது இவரது பேசப்பட்ட நூலான Final Gifts இல் வருகிறது.

## தரிசனங்களின் உள்ளார்த்தம்

இருந்தபோதும் மரணப்படுக்கையில் உள்ளவர்கள் தங்களது எண்ணங்களையும் உணர்வுகளையும் பேச்சாலோ சைகை மொழியாலோ வெளிப்படுத்தும் சம்பவங்கள் அதிகம் என்று சொல்ல முடியாது. ஏனெனில், மரணிப்பவர்களில் 10 சதவிகிதமானவர்கள் மட்டுமே இறப்பதற்கு முன் சுய உணர்வோடு இருக்கிறார்கள். ஆனால், இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு (50% to 67%) மரணப்படுக்கைத் தரிசனங்கள் கிட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய இறுதிக்கட்டத் தரிசனங்களின் அர்த்தம் என்ன? அவை மற்றொரு உலகம் இருப்பதை எடுத்துக் காட்டுகின்றனவா? மரணத்திற்குப் பின்னான மற்றொரு வாழ்வு இருக்கிறது என்பதை எடுத்துக் கூறுகின்றனவா? என்னால் அப்படி எண்ண முடியவில்லை. அதற்கான தெளிவான விஞ்ஞான விளக்கங்களும் கிடைக்கவில்லை என்றே சொல்ல முடிகிறது. பரம்பரை பரம்பரையாகவும் கலாசார ரீதியாகவும் நாம் கட்டி எழுப்பியுள்ள நம்பிக்கைகளின் நீட்சி இத்தகைய தரிசனங்களாக இருக்கலாம்.


பார்த்திருப்பவர்களின் உளநிலை மாற்றம், நெருக்கமான ஒருவரின் மரணத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதானது ஒருவரின் மன உணர்வுகளை உச்சநிலையைத் தீண்டிச் செல்கிறது. அச்சம் தரும் ஒரு நிகழ்வாகவே அதற்கு முன்னர் மரணத்தைப் பார்த்திராதவர் உணர்வார். மறுபரிசீலனை செய்யும் போது அது பயங்கரமானதாகவும் சோகத்தில் திளைக்க வைப்பதாகவும் இருந்தாலும் சில நன்மைகளையும் தருவதைப் புரிந்து கொள்ள முடியும். தன்னலமற்ற அன்பு, வற்றாத பாசம், இயலாதவரைப் பராமரிப்பதில் கிட்டும் உள நிறைவு போன்றவை தன்னில் நிறைந்திருந்ததை அவரால் புரிந்து கொள்ள முடியும்.

பல சில்லறைப் பிரச்சினைகளால் கசந்தும் மறந்தும் போயிருந்த பல உறவுகள் மரணம் நிகழும் கணத்தில் மனதிற்கு நெருங்கியிருப்பார்கள். பழைய காயங்கள் ஆறியிருக்கும். உடன் பிறப்புகளுடனான நெருக்கம் அதிகரித்திருக்கும். இறுதிப் பராமரிப்பில் கைகொடுத்த வகையில் மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள், ஒத்தாசை அளித்த ஏனையவர்கள் மீதான பற்றும் மரியாதையும் அதிகரித்திருக்கும். பொறுமை, ஒத்தாசை, அன்பு, கருணை போன்ற நற்குணங்களை வெளிப்படுத்த அந்தத் தருணம் வழிகோலும். எங்கள் ஆழ் மனதில் உறைந்திருந்த பண்புகள் பட்டை தீட்டப்பட்டு மாசுமறுவற்ற சூரியக் கதிர்களாக ஒளிரும். ஆம்! மரணப் படுக்கையானது மரணிப்பவருக்கு மட்டுமன்றி அதைப் பார்த்திருப்பவர்களுக்கும் புதிய தரிசனங்களைத் தரவே செய்கிறது.

---

*(31ஆம் பக்கத்தொடர்ச்சி)*

சூழ்நிலையை இனவாத மயப்படுத்துவதற்கு ஹைதராபாத்தில் அக்பருதீன் உவைஸினால் வெறித்தனமான பேச்சை நிகழ்த்தக் கூடியதாக இருக்கிறது என்பதைக் கண்டு எனக்கு வியப்பாக இருக்கிறது. அவர் பேசும்போது கூட்டத்தினர் அவருக்கு உற்சாகம் கொடுத்து ஆரவாரம் செய்தனர் என்



பதை அறியும் போது மேலும் வியப்பாக இருக்கிறது. உவைஸுக்கு இந்தியா போன்ற நாட்டில் இடமில்லை. ஏனென்றால், அத்தகைய ஆட்கள் மதச்சார்பின்மையின் அடிவேரில் தாக்குகிறார்கள். மட்டுப்பாடுகள் என்னதான் இருந்தாலும், மதச்சார்பின்மைப் பாதையில் நடைபோடுவதற்கே இந்தியா உறுதி பூணுகிறது. அந்த அடிப்படைப் பண்பில் எந்தவிதமான விட்டுக்கொடுப்புமே இருக்க முடியாது!




# விளையாட்டு உலகை ஆட்டிப்படைக்கும் ஊக்கமருந்து

ரி.எஸ்.கணேசன்

விளையாட்டு

விளையாட்டுலகை இன்று போதைப் பொருட்கள் ஆட்டிப் படைக்கின்றன. விளையாட்டு வீரர்கள் இன்று உலகளாவிய ரீதியில் பெரும் புகழ்பெற்று வருகையில் அவர்களின் வெற்றியின் பின்னணியில் போதைப் பொருட்கள் இருக்கின்றனவா என்ற கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது. ஒலிம்பிக் முதல் உலகக் கிண்ணப் போட்டிகள் வரை அனைத்து போட்டிகளிலும் பங்கேற்று சாதனை படைத்த பல வீரர்கள் பின் நாட்களில் போதைப் பொருட்களை உட்கொண்டதற்காக மதிப்பிழந்து போன வரலாறு இன்று தொடர் கதையாகி வருகின்றது.

ஒலிம்பிக் போட்டியென்றாலும் சரி, வேறெந்த சர்வதேசப் போட்டியென்றாலும் சரி பதக்கங்களையும் புகழையும் பெற்று விட வேண்டுமென்பதற்காக ஊக்க மருந்தாக போதைப் பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். எனினும், ஒலிம்பிக் போட்டிகள் உட்பட பல சர்வதேசப் போட்டிகளில் சில வீர, வீராங்கனைகளின் அதீத திறமைகளும் அவர்களின் சாதனைகளும் பலரையும் பெரும் ஆச்சர்யத்துக்குள் ஆழ்த்துவதுடன், அவர்களது திறமைகள் குறித்து பல்வேறு கேள்விகளையும் எழுப்புகின்றது.

இதனால்தான் இன்று விளையாட்டு வீரர்கள் பல்வேறு வகைகளிலும் கண்காணிக்கப்படுகின்றனர். தனிப்பட்ட திறமையில் அவர்கள் தங்கள் அபார திறமையை வெளிப்படுத்தினாலும் அதன் பின்புலமாக ஊக்க மருந்துகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்வதற்கு ஒவ்வொரு விளையாட்டிலும் ஒவ்வொரு அமைப்புகள் உருவாகிவிட்டன.

ஆரம்ப காலத்தில் தனி நபர் விளையாட்டுகளில் ஊக்க மருந்துப் பாவனை குறித்து கண்காணித்து வந்த சர்வதேச விளையாட்டு அமைப்புகள், இன்று கூட்டாக வீரர்கள் பங்கேற்கும் கால்பந்தாட்டம், கிரிக்கெட், ஹொக்கி போன்ற விளையாட்டுகளிலும் ஊக்க மருந்துப் பாவனை குறித்து தீவிர கவனம் செலுத்துவதுடன், அந்தப் பாவனைக்காக பலரைக் கண்டுபிடித்து நிரூபித்து, அவர்கள் பெற்ற பதக்கங்களைப் பறித்தும் அவர்களது சாதனைகளை உலக வரலாற்றிலிருந்து அழித்தும் வருவதுடன், மேலும் பல சட்ட திட்டங்களை வகுத்து விளையாட்டுலகைத் தூய்மைப்படுத்தி உலகப் புகழ்பெற்ற வீரர்களை ஊக்க மருந்தின் பிடியிலிருந்து மீட்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

கூட்டு விளையாட்டை விட தனி நபர் விளையாட்டுகளிலேயே ஊக்க மருந்துகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. உலகையே கட்டிப் போடும் ஒலிம்பிக்கும் சர்வதேச தடகளப் போட்டிகளும் தனி நபர் விளையாட்டுகளில் மிகவும் முக்கியமானவை. இதனால், ஏனைய விளையாட்டுகளை விட இவற்றின் மீதான கண்காணிப்பு மிக அதிகம். இந்த வரிசையில் இன்று ஊக்கமருந்துப் பாவனையால் உலகப் புகழ்பெற்ற சைக்கிளோட்ட வீரரொருவர் பேரிழந்து, புகழிழந்து, தான்பெற்ற மிகப்பெரும் விருதுகளையும் பறிகொடுத்து

வெறும் கையோடு நிற்கின்ற மிகப்பெரும் அவல நிலையேற்பட்டுள்ளது. எனினும், ஊக்க மருந்துப் பாவனையால் உலகப் புகழ்பெற்று உலக சாதனைகள் படைத்து பேரும் புகழும் பெற்று உண்மைகளை மறைத்தவர்கள் மத்தியில் அமெரிக்க சைக்கிளோட்ட வீரர் லான்ஸ் ஆம்ஸ்ரோங் (40 வயது) வித்தியாசமானவர்.

பிரான்ஸில் சைக்கிளோட்டப் போட்டியென்பது மிகப் பிரபல்யம். பிரான்ஸின் ''ரூர் டி பிரான்ஸ்'' சைக்கிளோட்டம் உலகப் புகழ்பெற்றது. ஒரு நாள் இரு நாளல்ல. சுமார் மூன்று வாரங்கள் (21 நாள்) கொண்ட இந்த சைக்கிளோட்டத்தில் கடக்க வேண்டிய தூரம் 100, 200 கிலோ மீற்றர்களல்ல. 3,500 கிலோ மீற்றர் தூரத்தைக் கடக்க வேண்டும். இதனை ஒரு முறையல்ல இரு முறையல்ல, 1999 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரை ஏழு முறை பட்டம் வென்று சாதனை படைத்தவர்தான் ஆம்ஸ்ரோங். சைக்கிளோட்டத்தில் இமயமென வர்ணிக்கப்பட்ட இவரது புகழ் கடந்த வருடத்தில் இமயத்திலிருந்து சரிந்தது. இயற்கைக்கு மாறாக தனது உடல் திறனை அதிகரிப்பதற்காக ஊக்க மருந்துகளை உள்ளெடுத்தே இந்தச் சாதனைகளை இவர் படைத்தாரென்பது இவரது அணியைச் சார்ந்த சக வீரர்களால் அம்பலமானது. இவர் மீது சில ஆண்டுகளுக்கு முன்னரே இந்தக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வந்த போதும் இதனை அவர் தொடர்ந்தும் மறுத்து வந்தார். எனினும், உலகளாவிய ரீதியில் ஊடகங்கள் இவர் மீது தொடுத்த போரிலிருந்து இவரால் தப்ப முடியாத நிலையில் தற்போது அவர் தனது தவறுகளை முழு உலகமும் பார்த்திருக்க எவ்வித சலனமுமின்றி ஒப்புக்கொண்டுள்ளார்.

ஊக்கமருந்து பயன்படுத்தியதை இப்போது ஒப்புக்கொள்கிற நீங்கள் இதுவரை ஏன் திரும்பத் திரும்ப பொய் சொன்னீர்கள் என்று கேட்கப்பட்டபோது, அதற்கு மிகச்சரியான பதில் தன்னிடம் இல்லை என்று சொன்னார் ஆம்ஸ்ரோங்



ஊக்க மருந்தை உட்கொண்டே இவர் உலக சாதனைகளைப் படைத்து உலகத்தையும் ஏமாற்றுகிறாரென இவரது அணியின் சக வீரர்கள் கூறியதையடுத்து இவர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டார். 1999 முதல் 2005 வரை தொடர்ச்சியாக ஏழு ஆண்டுகளும் இவர் சாதித்து உலகை பெரும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி பெற்ற ஏழு பதக்கங்களும் ஒன்றொன்றாக அல்லாது கடந்த வருடம் ஒட்டு மொத்தமாகப் பறிக்கப்பட்டன.

ஒலிம்பிக்கில் பெற்ற வெண்கலப் பதக்கமும் பறிபோகிறது. இவற்றையெல்லாம் விட சைக்கிளோட்டத்தின் மூலம் பெற்ற புகழால் இவர் சம்பாதித்த பல நூறு கோடி ரூபா பணமும் பறிபோகிறது. இவற்றுக்கெல்லாம் காரணம் கடந்த திங்கட்கிழமை அமெரிக்காவின் ''ஓ.டபிள்யூ.என்'' என்ற தொலைக்காட்சியின் உரிமையாளரான ஒப்ரா வின்பிரே என்பவருக்கு ஆம்ஸ்ரோங் வழங்கிய பேட்டிதான். பேட்டியாளரின் அனைத்துக் கேள்விகளுக்கும் ஒட்டுமொத்தமாக ஆம், ஆம், ஆம் என்று பதிலளித்து தன் மீது உலகம் சுமத்திய குற்றச்சாட்டுகள் அனைத்தையும் ஒரே ''ஆம்'' மூலம் ஒப்புக்கொண்டுள்ளார்.

இந்தத் தொலைக்காட்சிப் பேட்டியின் மூலம் தன் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுகளையும் (ஊக்க மருந்து உட்கொண்டது) ஒப்புக்கொண்டுள்ளதால் பதக்கங்களையும் பெரும் புகழையும் மட்டுமல்லாது, பரிசுத் தொகையாகக் கிடைத்த கோடிக்கணக்கான ரூபா பணத்தையும் அனுசரணையாளர்கள் வழங்கிய பல நூறு கோடி ரூபா பணத்தையும் இழக்கவுள்ளார். அனுசரணையாளர்கள் வழங்கிய பணத்தையெல்லாம் திரும்பச் செலுத்த வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் இவர் ''ரூர் டி பிரான்ஸ்'' போட்டியில் வெற்றி பெற்று உலகை வியப்பிலாழ்த்திய போது தாங்கள் இவரை உற்சாகப்படுத்துவதற்காக வழங்கிய பணத்தையெல்லாம் திருப்பித் தருமாறு அனுசரணையாளர்கள் கேட்கத் தொடங்கி விட்டனர். மறுத்தால் சட்டச் சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி வருமென்பதுடன், தொலைக்காட்சிப் பேட்டியில் ஊக்க மருந்தை உட்கொண்டதை முழு உலகமுமே பார்த்திருக்க ஒப்புக்கொண்டு விட்டதால் சிறைக்கும் செல்ல வேண்டியிருக்கும்.

உலகையே தனது சைக்கிளோட்டத்தால் வியக்க வைத்த ஆம்ஸ்ரோங் உண்மையிலேயே மிகப்பெரும் வீரர்தான். ஆரம்பத்தில் தனது திறமையால் சாதனை படைத்த இவருக்கு 25 ஆவது வயதில் 1996 இல் ''ரெஸ்ரிக்குலர் கான்சர்'' என்ற புற்றுநோய் ஏற்பட்டது. இது மூளைக்கும் நுரையீரலுக்கும் பரவியது. இதற்காக இவர் சத்திர சிகிச்சை செய்து கொண்டார். இதன் மூலம் அதிசயிக்கத்தக்க வகையில் புற்றுநோயிலிருந்தும் தப்பித்துக் கொண்டார். இதையடுத்து, நோயிலிருந்து மீள உட்கொண்ட மருந்துகளில் பல ஊக்கமருந்துகளாயிருந்தன. இதை அவர் நோய்க் காலத்தில்

உணர்ந்து கொண்டார். இந்த நிலையில்தான் புற்றுநோயிலிருந்து மீண்ட பின்னரும் இவர் சாதனை படைத்தது பலரையும் உறுத்தியது. 1999 இல் இவரது சிறுநீர் மாதிரியில் "கோர்டி கோஸ்டிரோய்ட்" என்ற தடை செய்யப்பட்ட மருந்து கலந்திருப்பது உறுதி செய்யப்பட்டது. ஆனாலும், 2008 முதல் 2009 வரை இவரிடம் 24 முறை சிறுநீர்ப் பரிசோதனை செய்யப்பட்டது. எனினும் அந்தச் சோதனையில், இவர் ஊக்க மருந்து பயன்படுத்தியதை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆனாலும் தொடர்ந்தும் அமெரிக்க ஊக்க மருந்து தடுப்பு நிலையம் இவரிடம் சிறுநீர் பரிசோதனை செய்தது. இதற்கெதிராக இவர் அமெரிக்க நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் நிராகரித்தது. இதையடுத்து இவர் மீதான சோதனை தீவிரமடைந்தது. இந்த நிலையில் தான் கடந்த வாரம் ஆம்ஸ்ரோங் ஒரு முடிவுக்கு வந்தார். தன் மீது ஏற்கெனவே குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு அவை பெரும்பாலும் நிரூபிக்கப்பட்ட நிலையில், இனி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதைக் கைவிட முடிவு செய்ததுடன், முழு உண்மையையும் முழு உலகுக்கும் தெரிவிக்க முடிவு செய்தார்.

இவரது சைக்கிளோட்டத்திற்கு கோடிக்கணக்கில் ரசிகர்கள் உள்ளனர். போட்டி தொடங்க முன் சிறப்புப் பயிற்சிகள், போட்டி தொடங்கும் போது மற்றவர்களுக்குப் போட்டியாக இருக்காதது. ஆனாலும் இடை நடுவில் வேகம் எடுப்பது, ஏனையவர்களைப் பின்னுக்குத் தள்ளுவது, களைப்பின்றி மிக நீண்ட தூரம் செல்வது, இறுதியில் சாதனை படைப்பதென்பதெல்லாம் இவருக்கு கைவந்த கலை. இது தான் பலரையும் இவர் மீது சந்தேகப்பட வைத்தது. இவரது நீண்ட கால மிகவும் நம்பிக்கைக்குரிய நண்பனும் இவருடன் சேர்ந்து பயிற்சியில் ஈடுபட்டு வந்தவரும் இவர் வெற்றி பெற்ற ஏழு போட்டிகளிலும் இவருடன் கலந்துகொண்டவருமான லெப்டினன்ட் ஹின்கேப் என்பவர் ஆம்ஸ்ரோங் தொடர்பாக ஊக்கமருந்து தடுப்பு நிலையத்திடம் புகார் தெரிவித்த போது தான் இந்த விவகாரம் பூதாகாரமாகியது. "ஊக்க மருந்து இல்லாமல் ரூர் டி பிரான்ஸ் போட்டியில் வெல்ல முடியுமென்று நினைக்கவில்லை. 2009 இல் இந்தப் போட்டியில் பங்கேற்றிருக்காவிடின் இந்த விவகாரத்தில் சிக்கியிருக்க மாட்டேன்" என்று தொலைக்காட்சிப் பேட்டியில் கூறியுள்ளார்.

1999 முதல் 2005 வரை பட்டம் வென்ற ஏழு போட்டிகளிலும் ஊக்க மருந்து உட்கொண்டதாகவும் ஊக்க மருந்து தடுப்பு அமைப்பிடமிருந்து தப்புவதற்காக தனது இரத்தத்தையும் சிறுநீரையும் மாற்றி வேறொன்றைக் கொடுத்ததாகவும் இந்தத் தொலைக் காட்சிப் பேட்டியில் அவர் ஒப்புக் கொண்டுள்ளார். இவரது பேட்டியின் முதல் பகுதி கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஒளிபரப்பானது.

பேட்டியின் தொடக்கத்தில் ஊக்கமருந்து பயன்படுத்தியது பற்றிய கேள்விகளுக்கு ஆம்ஸ்ரோங் எந்த ஒரு முகபாவனையும் காட்டாமல் இல்லை ஆமாம் என்ற பதில்களை மட்டும் கூறினார். குறிப்பாக ஊக்கமருந்து பயன்படுத்தினீர்களா? இரத்த அபிவிருத்திக்கான மதுபானத்தை உபயோகித்தீர்களா? வெற்றி பெற்ற 7 உலக சைக்கிளோட்டத்திலும் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துகளை எடுத்துக்கொண்டீர்களா? போன்ற கேள்விகளுக்கு எல்லாம் "ஆம்" என்று ஒற்றை வரியில் பதில் அளித்தார். ஊக்கமருந்து பயன்படுத்தியதை இன்று ஒப்புக்கொண்டுள்ள நீங்கள் ஏன் இதுவரை திரும்பத் திரும்ப பொய் சொன்னீர்கள்? என்று கேட்ட போது "இதற்கு மிகச்சரியான பதில் என்னிடம் இல்லை" என்றார்.

இந்தப் பேட்டியில் ஆம்ஸ்ரோங் மேலும் கூறியதாவது;

ஊக்கமருந்து எடுத்துக்கொண்டது எனது முடிவு தான். இவை எல்லாம் எனது தவறுகள் தான். இதை ஒப்புக் கொள்வதற்காகத் தான் இங்கு உட்கார்ந்திருக்கிறேன். அதற்காக நான் மன்னிப்புக் கோருகிறேன். ஊக்க மருந்து பயன்படுத்தவில்லை என்று பொய்களை மீண்டும் மீண்டும் கூறியிருக்கிறேன் என்பதை இப்போது உணர்கிறேன். உண்மையிலேயே நான் தவறு செய்தவன் தான். இது கற்பனைக் கதை அல்ல. உண்மை.


இந்த விவகாரத்தில் நடந்த தவறுகள், கூறப்படும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் என் மீது விழட்டும். ரசிகர்களிடமோ அல்லது ஊடகங்களிடமோ என்னை பற்றிய நம்பிக்கை, புகழ் அனைத்தையும் இழந்து விட்டேன். இது பெரிய குற்றம், மன்னிக்க முடியாத குற்றம். நான் சொல்லும் தகவல்கள் மக்களின் காதுக்குச் செல்லும் போது என்னை ஒரு போதும் மன்னிக்க மாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டுள்ளேன்.

ஊக்கமருந்து இல்லாமல் 7 உலகப் போட்டிகளிலும் நான் சாம்பியன் ஆகியிருக்க வாய்ப்பே இல்லை. அந்தக் காலகட்டத்தில் நான் தவறு செய்கிறேன், மற்றவர்களை ஏமாற்றுகிறேன் என்று கூட நினைத்ததில்லை. கடைசியாக வெற்றி பெற்ற 2005 ஆம் ஆண்டுவரை நான் ஊக்க மருந்து பயன்படுத்தினேன். ஆனால், ஓய்வுக்குப் பிறகு மீண்டும் 2009 ஆம் ஆண்டு போட்டிக்கு வராமல் இருந்திருந்தால் நான் சிக்கியிருக்க மாட்டேன். 2001 ஆம் ஆண்டு ஊக்கமருந்து சோதனையில் நான் தோற்றதாகவும் அதனை வெளிவராமல் தடுக்க சர்வதேச சைக்கிள் சம்மேளனம் மற்றும் ஊக்கமருந்து தடுப்பு அதிகாரிகளுக்கு பணம் கொடுக்கப்பட்டதாகவும் வெளியான தகவல்களில் உண்மை கிடையாது. அப்போது நான் ஊக்கமருந்து உட்கொண்டதாக சோதனையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

உலகின் ஒப்பற்றதொரு விளையாட்டு வீரர் போதையின் பாதையில் சென்று பேரிழந்து, புகழிழந்து இன்று வெறும் கையோடு நிற்பதை வேதனையுடன் பார்க்க வேண்டியுள்ளது.

## பனுவல் பார்வை

# மலையகக் கல்வி



ஆதி

சில சிந்தனைகளும் ஆலோசனைகளும் என்னும் தலைப்பில் மொழிவரதன் நூல் ஒன்றை ஆக்கித் தந்துள்ளார். இவர் தொடர்ந்து தேசிய நாளிதழ்களில் மலையகக் கல்வி தொடர்பில் பல்வேறு கட்டுரைகளை எழுதிவருகின்றார். இதன் மூலம் மலையகக் கல்வி தொடர்பில் பரந்துபட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த விளைகின்றார். இது பாராட்டத்தக்க, நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய பணியாகின்றது.

இந்நூலில் சுமார் 32 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவையாவும் வரன்முறையான ஆய்வு நெறிமுறைகளுக்கு உட்பட்டு எழுதப்பட்ட கட்டுரைகள் அல்ல. ஆனால் ஆய்வு ரீதியில் சிந்திக்கவும் தொடர்ந்து தேடவும் உரிய பகைப்புலத்தை வழங்குகின்றது. இருப்பினும் இக்கட்டுரைகளில் குறிப்பிட்ட ஆய்வு நோக்கொன்று இழையோடுகின்றது. யதார்த்த சமூக நடப்புகளை, கல்வி நடைமுறைகளை விமர்சன ரீதியில் நோக்குவதற்கான மாற்றங்களை உருவாக்குவதற்கான ஆலோசனைகள் விதைக்கப்பட்டுள்ளன. இது இந்நூலின் பலம் என்று கூறலாம்.

பொதுவாக மலையகக் கல்வி தொடர்பிலான அக்கறையும் கவனக்குவிப்பும் பொதுவோட்ட கல்வியியலாளர் மத்தியில் மிகக்குறைவாகக் காணப்படுகின்றது. மலையகப் பின்னணியிலிருந்து வெளிவரும் இளம் கல்வியியலாளர்கள் மத்தியில் இது இன்னும் குறைவாகக் காணப்படுகின்றது. இன்னும் சிலர் தங்களை முற்போக்கு இடதுசாரிகளாக மட்டும் அடையாளப்படுத்துகின்றனர். ஆனால் இவர்கள் மலையகச் சமூகத்தின் தோட்டப்புற மக்களின் கல்வி மேம்பாடு சார்ந்து சிந்தனையும் செயற்பாடுமற்றவர்களாகவே உள்ளனர்.

இவர்கள் மத்தியில் மொழிவரதனில் சிந்தனையும் பணியும் தனித்துவமாகத் தெரிகின்றது. படித்த உயர்வர்க்க மனோபாவத்தின் புலக்காட்சிக்குட்பட்டு மொழிவரதனின் எழுத்துகளை பார்ப்பது, வாசிப்பது, மதிப்பிடுவது சரியான மக்கள் நலன் சார்ந்த பார்வையாக அமையாது. இந்தத் தவறுக்கு நாம் உட்படாமலேயே இந்த பனுவல் மீதான எமது பார்வையைக் குவிக்கவேண்டும்.




இந்நூலில் மையம் கொள்ளும் மலையகக் கல்வி தொடர்பிலான சிந் தனைகளும் ஆலோசனைகளும் மலையகக் கல்வியின் எதிர்காலத்துக்கு உதவக்கூடியதாக அமைந்துள்ளது. நிலைப்பாடுகள், கொள்கை உருவாக்கம் முதலானவற்றுக்கும் தகவல்களை வழங்குபவையாகவும் உள்ளது. இதைவிட நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றும் இன்னும் தனித்தனியாக விரியக்கூடியவை. அந்த விரிவாக்கந் தான் மலையகக் கல்வியின் உள்ளும் புறமுமான ஆழமான தடயங்களை இனங்காண உதவும். இந்த தளமாற்றம் மலையகக் கல்விக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது. நுவரெலியா, அட்டன் போன்ற பிரதேசங்களில் மற்றும் எமது பார்வைகளைக் குவிக்காமல் சுழலாமல் ஏனைய மலையகப் பிரதேசங்களின் பிரச்சினைகளையும் சவால்களையும் வெளிப்படுத்தும் கல்வி மரபு தோற்றம் பெறுவதற்கான அனைத்துச் சாத்தியமான மும்முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும். மொழிவரதன் போன்றோர் இந்த முயற்சிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது காலத்தேவையாகும்.

மலையகமும் ஆரம்பக்கல்வியின் தொடர்பில் நாம் ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. குறிப்பாக பெருந்தோட்டங்களைப் பொறுத்தவரையில் ஆரம்பக் கல்விப் பாடசாலைகளான தரம் 3 பாடசாலைகளே மிக அதிகமாக உள்ளன. இவற்றை காலனித்துவ ஆட்சியின் ஒரு சின்னமாகக் கூட கருதலாம். அண்மைக்கால பெருந்தோட்டப் பாடசாலை அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் சில முனைப்பான அம்சங்கள் இதனை மாற்றியமைப்பதில் எவ்வாறு வெற்றி பெற்றுள்ளன என்பது குறித்த ஒரு மீள் சிந்தனை எமக்கு வேண்டும். பல பாடசாலை மட்டங்களில் நாம் ஆரம்பக் கல்வியில் எதிர்பார்க்கும் வாசிப்பு, எழுத்து, கேட்டல் போன்ற அடைவுமட்டத்தினை முழுமையாக மாணவர்கள் அடையவில்லை என்பது இனங்காணப்பட்டுள்ளது. ஆகவே மலையகப் பிரதேசங்களை மையப்படுத்திய விஷேட கல்வித்திட்டம் ஆரம்பக்கல்வி சார் ந்து முன்னெடுக்கப்படுவதற்கு நாம் புதிய அணுகுமுறைகளை வகுத்துக்கொள்ள வேண்டியவர்களாகவும் உள்ளோம். சம்பந்தப்பட்டவர்கள் இதுபற்றியும் சிந்திக்க வேண்டும்.

இதைவிட மலையக மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு பெற்றோர்களின் அர்ப்பணிப்பு முக்கியமாக இருக்கின்றது. ஆனால் பெற் றோர்களை மையப்படுத்திய விழிப்புணர்வு செயற்திட்டங்கள் பரவலாக்கப்படுவதாக இல்லை. இதையும் கருத்தில் எடுத்துக்கொண்டுதான் மலையகக் கல்வி பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இவ்வாறு சிந்திப்பதற்கான தேடுவதற்கான வாயில்களை இந்நூல் திறந்து விடுகின்றது. ●

## கடைசிப் பக்கம்

# தொலைதூரக் கனவு

"ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் நோபல்பரிசு பெற்றுத் தருவார்கள்'' என்ற ரீதியிலான நம்பிக்கைக் குரல்கள் அவ்வப்போது ஒலித்து வருவது, இலக்கிய ஆர்வலர்கள் பலரும் நன்கறிந்தவிடயமே. இத்தகைய குரல்களினூடே உண்மையின் ஒலி-உண்மையின் ஒளி கலந்துள்ளதா என்பது பற்றிச் சிந்திப்பது ஈழத்தின் ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சிக்கு அவசியமானது.

ஈழத்துத் தமிழ் நாவலின் வரலாறு ஏறத்தாழ 130 வருடங்கள் கொண்டதாயினும் இன்றுவரையான நாவல் வளர்ச்சியிலே பலநோய்க்கூறுகள் காணப்படுகின்றன!

ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றிலே சாதிய நாவல்களுக்கு முதன்மை இடமுள்ளது. தமிழ் நாட்டு நாவல்களுக்கு அவை முன்னோடிகளாகவும் அமைந்திருந்தன. எனினும், இந்நாவல்களின் குறைபாடுகளாக, அந்நாவல்கள் நாவல்களாக இல்லாமல் கதைகளாக இருப்பது பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

ஒட்டுமொத்தமான ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சி பற்றி பேராசிரியர்களான நுஃமான், மௌ. சித்ரலேகா, சி.மௌனகுரு ஆகியோர் குறிப்பிடும்போது, ஈழத்து நாவல்கள் பொருளில் மாற்றம் பெற்றாலும் உருவத்திலும் கதை கூறும் முறையிலும் பாரிய மாற்றங்கள் பெறவில்லையென்றும் மாக்சிய நோக்குடைய நாவல்களில் கலைச் செழுமை குறைவாகவுள்ளது என்றும் ஏனைய நாவல்களில் கலைச் செழுமை இல்லையென்றும் எடுத்துரைத்துள்ளனர். இவ் அவதானிப்பு எழுபதுகளின் நடுப்பகுதியில் கூறப்பட்டாலும் இதற்குப் பிற்பட்ட ஈழத்து நாவல் வளர்ச்சிப்போக்கிற்கும் இவை ஏற்புடையனதாம்!



பேராசிரியர் செ.யோகராசா

மேற்கூறிய குறைபாடுகள் ஏற்ற இறக்கங்களோடு ஈழத்துத் தமிழ் சிறுகதைப் போக்கிலும் இடம் பெற்றுள்ளன.

புனைகதையானது அனுபவத்தின் அறுவடை என்பது தெளிவானது. அவ்வாறெனில் ஈழத்து எழுத்தாளர் பலரும் பரந்துபட்ட அனுபவங்கள், பிரச்சினைகள் ஆகியவற்றிற்குப் போதியளவு முகங்கொடுத்து வந்துள்ளதாகக் கூறமுடியாதுள்ளது. (எண்பதுகளுக்குப் பின்பே அத்தகைய நிலையில் ஓரளவு மாற்றமேற்பட்டுள்ளது.)

சமூகப் பிரச்சினைகளுடன் முட்டி மோதியுள்ள எழுத்தாளர் சிலரிருப்பினும் அத்தகையோரிடம் படைப்பாற்றல் வறுமை நிலவுகின்றது.

படைப்பாற்றலுள்ளோர் சிலர் தாம் சார்ந்த கோட்பாடுகளுக்கே முதன்மை கொடுப்பவர்களாக உள்ளனர். இதனால், ஒரே அமைப்பிலான படைப்புகளை - எலும்புக்கூடுகளான பாத்திரங்களை - செயற்கையான உரையாடல்களை- உருவாக்குகின்றனர். படைப்பாற்றல் விருத்திக்குத் தரமான வாசிப்பு அவசியமானது. நாவல், சிறுகதை ஆகியவை உலகப் பொதுவான இலக்கிய வடிவங்களாதலின் உலக இலக்கிய பரிச்சயமும் முக்கியமானது.

எவ்விதத்திலாயினும் உலகப் புனைகதை இலக்கியப் பரிச்சயம் ஏற்படும்போதுதான் தனிமனித அனுபவம் உலகப் பொது அனுபவமாக மாறுவதன் - பிரதேச மணம் சர்வதேச மணமாக வியாபிப்பதன் - இரகசியங்களை உய்த்துணர்வதற்கான வாய்ப்புருவாகும் என்பதில் தவறில்லை!

விரிந்த அனுபவ வட்டம், பரந்த வாசிப்பு என்பனவே வாழ்க்கை பற்றிய தரிசனம், உலக நோக்கு என்பனவற்றை உருவாக்குபவை. ஓர் எழுத்தாளனை சிறந்த எழுத்தாளனாக முகிழ்ப்பது அவற்றிலேயே தங்கியுள்ளது. இவ்வாறான நிலை ஈழத்து எழுத்தாளரிடம் அருகிக் காணப்படுவதனாலேயே ஈழத்து எழுத்தாளர் பலரும் கதைஞர்களாகவும் ஆவணப் பதிவாளர்களாகவும் படப்பிடிப்பாளர்களாகவும் ஆலை முதலாளிகளாகவும் விளங்குகின்றார்கள்.

பழந்தமிழ் இலக்கிய பரிச்சயம் படைப்பாளிகளிடம் இருப்பது படைப்பாற்றல் செழுமைக்கும் மொழிநடை வளத்திற்கும் உதவுவது. ஈழத்துப் புனைகதையாசிரியர்களிடம் தற்புதுமையும், தனித்துவமுமான மொழிநடையினைக் காணமுடிவதில்லை. இதிகாசக் கதைகளை நவீன நோக்கில் மறுவாசிப்புச் செய்துள்ள ஈழத்து எழுத்தாளர்கள் அரிதாகவே உள்ளனர்.

பிறகலைகளின்பால் நாட்டம் கொள்வது எழுத்தாளனை வளம்படுத்துவதாகும். ஈழத்தில் இத்தகைய ஆற்றலுள்ள எழுத்தாளரும் மிகச் சிலராவர்.

எமது வாய்மொழி இலக்கிய மரபுகள் தொன்மங்கள் என்பனவற்றைப் படைப்புகளில் கையாள வேண்டிய

(55ஆம் பக்கம் பார்க்க)

சர்வதேச தரத்தில்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ்

வெளியீடாக மாதாந்தம் வெளிவருகிறது...



KALAIKESARI

# கலைக்கேசரி

CULTURE · HERITAGE · TRADITION · EVENTS · FASHION · INTERVIEWS · ENTERTAINMENT

மாத இதழ்




Purchase your digital copy at

MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP. READ. ENJOY

http://www.magzter.com/LK/Express-Newspapers/Kalaikesari/Lifestyle/

நமது பாரம்பரிய பண்பாட்டு கலாசாரங்களை

தமிழ்கூறும் நல்லுலகிற்கு எடுத்துச் செல்லும் மாத சஞ்சிகை




Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.